
மண்ணும்
பெண்ணும்
லக்ஷ்மி
MIL
CTION
KSHMI

# மண்ணும் பெண்ணும்

கேட்டைத்தாண்டி வெளியே வந்தவன் சிறிது தூரம் மெல்ல நடந்தான். சூரியன் உச்சிப்பொழுதை நெருங்க வேகமாக ஏறிக்கொண்டிருந்ததால் வெயில் சுரீர் என்று உடலைத் தாக்கியது. வெளிச்சம் கண்ணைக் கூசியது.

முகத்தைச் சுருக்கியபடி தன்னைச் சுற்றிலும் பார்த்த வண்ணம் நகரத்து மையத்திலே நடைபாதை மேல் நிழலாகத் தெரிந்த ஒரு பகுதியில் உட்கார்ந்தான்.

பிற்காலத்தைப்பற்றி அவன் தீவிரமாகச் சிந்தித்து செயல்படவேண்டியது அவசியம். பட்டணத்திலே அவன் நிரந்தரமாகத் தங்கிவிட முடியாது. ஊரைப் பார்க்கவேண்டும். முக்கியமாக கௌரியைக் கண்களால் ஒரு முறையாவது பார்க்கவேண்டும். அந்தத் தீவிர ஆசையை அவனால் ஒதுக்க முடியவில்லை.

ஆமாம். ஊரில் அவனுக்கு எந்தவிதமான வரவேற்பு கிடைக்கும்?

இந்த எட்டரை ஆண்டுகளில் நாடே மிகவும் மாறி விட்டது போன்றதொரு பிரமிப்பு ஏற்பட்டது அவனுக்கு.

ஏன்? முன்னைவிட காலை வேளை சூரியன்கூட இப்போது கடுமையாகிவிட்டிருக்கிறதே?

அப்பப்பா! வெயிலா அது - நெருப்புப்போல -

முன்னைவிட நகரம் பல சங்கதிகளில் ரொம்பவும் முன்னேறிவிட்டிருக்கிறதே?

கண்களில் தெரிந்த சினிமா விளம்பரம் - சுவரொட்டிகள் முதலியன அதற்கு சாட்சி.

என்னவிதமான தலைப்புகள்? 'கன்னி தந்த சுகம்' - 'பகலிலே சுவர்க்கம்', 'கசக்கி முகர்ந்த மலர்'... சே!

தலைப்பின் அசிங்கம் போதாதுபோல, இடையில் ஒரு துணி - மார்புகளில் ஒரு துளியளவு ஜிகினா மறைக்க - நிர்வாண கோலத்திலே ஆடுகின்றது போன்ற பெண்களின் பெரிய கட் அவுட்... அவனைப் பார்த்து கண் சிமிட்டியபோது, அவனுள் ஆத்திரம் மூண்டது.

நாடு முன்னேற வேண்டியதுதான். அதற்காக அசிங்கத்திலும் ஆபாசத்திலுமா முன்னேறவேண்டும்?

எட்டரை ஆண்டுகளுக்கு முன் அந்த பயங்கரத் தீர்ப்பின் பிறகு, அவன் ஒன்பதாண்டு சிறைவாசத்திற்கு தயாராகி, சிறைச்சாலை அலுவலர் கொடுத்த சிறை உடைகளை அணிந்து கொண்டு கழற்றிக் கொடுத்திருந்த அவனது பாண்டு - பனியன் - சட்டை அப்படியே சுருட்டி காக்கி காகிதத்தில் பத்திரமாக முத்திரையிட்டு பாதுகாக்கப் பட்டிருந்த அந்தப் பொக்கிஷத்தை அவனிடம் சிறை அதிகாரி கொடுத்து, சிறையில் அவன் செய்த வேலைகளுக் குண்டான ஊதிய சேமிப்பையும் தந்து, பல புத்தகங்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு வெளியே அனுப்பி யிருந்தார்.

மாலைகளுடன் அவன் தந்தையோ உறவினரோ யாரும் அவனை வரவேற்க வெளியே காத்திருந்தார்களில்லை.

சிறைத் தண்டனை காலம் முழுவதும் அவன் பார்வையாளர் யாரையும் பார்க்க விரும்பவேயில்லை.



தந்தை ஒருமுறை வந்தார் - பார்க்க விருப்பமில்லை என்று மறுப்புத் தெரிவித்துவிட்டான்.

ஒரு தடவை வாத்தியார் அருணாசலம் அவனைக் காண வந்தபோது, வெட்கத்தினால் பார்க்க மறுத்துவிட்டான்.

ஊர் - உறவு - நண்பர்... என்ற தொடர்பு அற்றுப் போயிருந்த சமயம், ஒன்பது ஆண்டு தண்டனையில் அவனது நன்னடத்தை காரணமாக ஆறு மாதங்கள் தள்ளுபடியாகி - அவனுக்கு சில தினங்களில் விடுதலை என்ற செய்தி ஒருநாள் திடீரென்று கிட்டியது. மகிழ்ச்சிக்குப் பதில் அவன், மனம் கலங்கிப் போனான்.

அத்தனை காலமும் பெற்றவனைப்போல - குருவைப்போல - நண்பனைப்போல அவனுடன் நேசமாக உறவாடி, தனக்குத் தெரிந்த அச்சகத்தொழிலை அங்கே கற்றுக்தந்த முன்னூற்று இரண்டாம் எண் - இல்லை அவன் வரை திரு. முருகேசன் அய்யாவைவிட்டுக் கிளம்புகிறோமே என்ற தாங்க முடியாத துயரம் அவன் மனதை வாட்டியது.

'பச்சைப் பிள்ளையைப்போல அழாதே. சுதந்திரமான வாழ்க்கை என்னன்னு வெளியிலே போனா புரிஞ்சுக்குவே. எனக்கு ரொம்ப வயசாச்சு. இன்னும் ரெண்டு வருஷம் பாக்கியிருக்கு... ஆனால் நீ வாலிபன். இந்தக் கடிதாசியைச் சிங்கநல்லூரில் உள்ள என் நண்பன்... வக்கீல் வரதனிடம் கொடு...' என்றார்.

''அய்யா இந்த உதவிக்கு நான் அடுத்த பிறவியிலே நாயா பிறந்து உங்களுக்கு உழைச்சாலும் -''

''என் மகனாகப் பிறந்து... உன்னை நா தூக்கி மார்போடு வச்சுக்கிட்டு கொஞ்சிப்பார்க்கனும்னு ஆசைப் பட்டேன்... சே! நீ என்னென்னவோ சொல்றியே தம்பி...'' கிழவர் தழுதழுத்தார்.

அவர் மட்டும் அதே சமயத்தில் கைதியாக சிறையில் வந்து சேராதிருந்தால் அவனது சிறை வாழ்க்கை அவனைப் பொடிப்பொடியாகச் சிதறிவிட்டிருக்கும்.

மறுவாழ்வு பெற... கைதிகளுக்காக அமைக்கப் பட்டிருந்த பல அமைப்புகளில் ஒன்றான அந்தச் சிறு அச்சகத்தில் அச்சுத்தொழில் தெரிந்த - படித்த கைதியான முருகேசன்தான் அதை இயக்கிக் கொண்டிருந்தார். பட்டதாரியான சுந்தரத்தின் மீது கருணை கொண்ட சிறைத் தலைவர், அந்த அச்சகத்தில் வேலைப்பார்க்கும் வாய்ப்பினை அவனுக்களித்திருந்தார்.

பேசி, பழகி, நட்புரிமை கொண்டு அன்பு கொண்ட ஒரு நண்பன் என்று அமைந்த முருகேசன், நாளடைவில் அவனது தந்தையைப் போன்ற மனிதராக அவனிடம் நெருங்கிப் பழகி நட்புக் கொண்டிருந்தார்.

''நண்பன் வரதன் என்னைப் பார்க்க வந்தபோது, சொல்லி வைத்திருக்கேன். சரின்னு ஒப்புக் கொண்டிருக்கான். என் முதல் மூவாயிரம் அவன்கிட்டே இருக்கு. உன்கிட்டே தந்து அச்சகத்திலே அதன்மூலம் ஒரு பங்குதாரராக ஏத்துக்கும் படி சிபாரிசு செய்திருந்தேன். ஒருநாள் சிறை அதிகாரி உத்தரவு கேட்டு, உன்னை பார்வையாளர் ஒதுக்கத்திலே அவருக்கு அறிமுகம் செய்து வச்சேனே நினைப்பிருக்கா... அவனைப் போய் முதல்லே பார்...'' என்றார்.

சுந்தரத்திற்கு மறுவாழ்வு கிட்ட உதவும் அந்த சிபாரிசு கடிதத்தை முருகேசன் சிறை அதிகாரி மூலம் உரிய ஒப்புதலுடன்தான் கொடுத்திருந்தார்.

குப்பென்று மக்கல் வாசனை அவனது சொந்த ஆடைகள் மீதிருந்து முகத்திலடித்தது.

ஊகும்! அந்த துர்ப்பாக்கியத்தை நினைவுறுத்தும் அந்த உடைகளை, தீர்ப்புத்தந்த அன்று அவன் அணிந்திருந்த அந்த



பாண்டு சட்டைகளை அவன் முதலில் கழற்றி எறிய வேண்டும்.

சட்டென்று எழுந்தான். அருகில் ஒரு சந்தின் முகப்பிலே பெரிய விளம்பரம் வெள்ளைத்துணியில் சிவப்பு எழுத்துக் களாக காற்றில் பறந்து கொண்டிருந்தது. ''இருபது சதவிகிதம் விலையில் தள்ளுபடி! கைத்தறி பாலியஸ்டர், கம்பனியில் துணிகளில் தயாரிக்கப்பட்ட ஆடைகள், வேட்டிகள்... சலுகையைப்பெற முந்துங்கள்'' என்று கொட்டை எழுத்துக் கள் கண்களில் பட்டன.

போக்குவரத்து எழுப்பிய ஓசையையும் மீறி... ஒலி பெருக்கியில் ஒருவன் கடூரமான குரலில் அவைகளின் விலையை விவரித்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தான்.

சந்துக்குள்ளே அமைந்திருந்த ஒரு சிறு கடை. அதற்குத் தான் இத்தனை ஆர்ப்பாட்டங்கள், விளம்பரங்கள், குவியலாக மேடைகள் மீது கொட்டி வைத்திருந்த உடைகளிலிருந்து அவன் தனக்குத் தேவைப்பட்ட சிலவற்றை வாங்கிக் கொண்டான். அந்தக் கடையிலேயே ஒரு துணிப்பை யொன்றை வாங்கி அதில் அவைகளை அடைத்துக் கொண்டு கிளம்பினான்.

அடுத்தது?... தாடியும் - மீசையும் மண்டிக் கிடந்த முகத்தை மழித்துக் கொண்டு கிராப்பை வெட்டி ஒழுங்கு செய்து கொண்டால்தான் தலைவேதனை குறையும் போன்றதொரு தவிப்பு. அந்த சந்திலே கொஞ்ச தூரத்தில் தெரிந்த சிகை அலங்காரக் கடைக்குள் நுழைந்தான்.

சற்று நேரத்திற்குப் பிறகு கண்ணாடியில் பார்த்தபோது அந்த பயங்கரத் தோற்றம் மறைந்து, அவனது முகம் முற்றிலும் வித்தியாசமாகத் தோன்றியது அவனுக்கு.

முப்பது வயதிற்கு மேலாகிவிட்ட முதிர்ச்சியை அவனது முகத்தில் காண முடியவில்லை. அதே அரும்பு

மீசையை வைத்துக் கொண்டிருந்தான். ஆனால், கண்களில் தான் அந்தக் கனிவு மறைந்து விட்டிருந்தது.

உதட்டில் மிகுந்த புன்னகைக்குப் பதில் முகத்திலே வெறுப்பின் சாயலே தெரிந்தது. அது சிறைவாசத்தினால் கடினமாகிவிட்ட உள்ளத்தின் பிரதிபலிப்பு! அது மறைந்து, அவன் மீண்டும் அந்த நல்ல இளைஞனாக மாற காலந்தான் உதவவேண்டுமே தவிர அவனால் கபட வேடம் போட இயலாதே. உரிய கூலியைக் கொடுத்துவிட்டு சிகை அலங்காரக் கடையினின்று வெளியே வந்தான்.

நல்ல பச்சைத் தண்ணீரில்... வாசனை சோப்பு போட்டு தலை முழுகி விட்டு மாற்றுடை அணிந்து கொண்டால்தான் அவனுள் மண்டிக் கொண்டிருக்கும் அந்த ஆத்திர உணர்வு அடங்கும் போன்று தோன்றியது.

அருகிலிருந்த கடைகளில்... மேலும் தேவைப்பட்ட சோப்பு - சீப்பு, கண்ணாடி, கால்களுக்கு உறுதியானதொரு ஜோடி செருப்பு, இத்தியாதிகளை வாங்கிக்கொண்டு அந்த சந்திலிருந்து கிளையாகப் பிரிந்ததொரு அழுக்குப் பிடித்த நெருக்கமான தெருவுக்குள் நுழைந்தான்.

அமராவதி லாட்ஜ்... வாசலில் ஒரு குப்பைத் தொட்டி. அதைச்சுற்றி இரண்டு சொறி நாய்கள்.

முன் பக்கத்திலிருந்த பெரிய அறையில் காபி பலகாரம் சாப்பிட பலர் உட்கார்ந்திருந்தனர். எல்லோரும் அடி மட்டத்து மக்கள். பையன்கள் வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். சுந்தரத்திற்கு நல்லபசி, காலியானதொரு மேஜையருகே உட்கார்ந்தான். வந்து நின்ற பையனிடம் ''மூன்று இட்டிலிகள் - ஒரு கோப்பை காபி'' என்று தன் தேவையைச் சொன்னான். ஒரு சிறு ஸ்டீல் தட்டில் உள்ளங்கை அகலத்தில் மூன்று சிறு இட்லிகளும் ஒரு ஸ்பூன் - சட்டினி - சாம்பார் நிறைந்த இரு சிறு கிண்ணங்களுடன் கொண்டு வந்து



வைத்த பையன், கூடவே அழுக்கடைந்ததொரு கண்ணாடி டம்ளரில் தண்ணீரையும் நிரப்பி வைத்தான்.

இட்லியை விழுங்கிவிட்டு அவன் திரும்புமுன் ஒரு சிறு பீங்கான் கோப்பையில் சர்க்கரைப் பானமாகத் தித்தித்த காபியைக் கொண்டுவந்து, கூடவே பில்லையும் வைத்தான்.

'ஓர் இட்லி முப்பது பைசாவா? ஒரு வாய் காபி எழுபத்தைந்து பைசாவா?' அதிர்ந்து போனான் சுந்தரம்.

கல்லாப் பெட்டியருகேயிருந்த மனிதரிடம் பணத்தைக் கொடுத்து சில்லறையை வாங்கியபோது, அந்த யோசனை தோன்றியது.

ஒருசில மணிநேரம் அவனுக்குத் தங்குமிடம் தேவை.

லாட்ஜில் ஒருநாள் தங்கியிருக்க... வாடகை இருபது ரூபாய். காபி பலகாரம் - பகல் - இரவு உணவுக்கு பணம் தனியாகக் கட்டவேண்டும் என்றபோது, அவன் திகிலுடன் எச்சிலை விழுங்கிக் கொண்டான்.

இன்று இரவு ரயிலுக்கு போகும்வரை மட்டும் என்றால் - அச்சத்துடன் கேட்டான்.

பதினைந்து ரூபாய்... என்று வெடுக்கென்று பதில் கிடைத்தது.

மாடிப்படிகளில் ஏறி வரிசையாக வராந்தாவின் எதிரே அமர்ந்திருந்த அறைகள் சிலவற்றைத் தாண்டி, ஓர் எண் முன்னால் நின்ற பையன், பூட்டைத் திறந்து அறையைக் காட்டியபோது - அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

அழுக்குப் பிடித்த சாயமிழந்த திரைச்சீலை மறைத்த சிறு ஜன்னல். சுவர் ஓரமாக ஒரு கட்டில்... அதன்மீது கிடந்த பஞ்சு மெத்தை மீது விரிக்கப்பட்டிருந்த துப்பட்டி, தண்ணீரைக் கண்டு மிகக் காலமாகிவிட்டது போன்று காணப்பட்டது.

ஓரத்திலே ஒரு சிறிய முக்காலி மீது மண் கூஜா, தண்ணீர் டம்ளர்... கண்ணாம்புச் சாயமிழந்த - வந்து தங்கியவர்கள் விட்டுப்போன அழுக்கு கையின் அடையாளத்துடன் அங்குமிங்கும் கொல்லப்பட்ட மூட்டைப்பூச்சியின் ரத்தக் கறையுடன் சுவர்கள். அருகிலிருந்த கழிவறையினின்று லேசாக எழுந்த துர்வாசனையை அனுபவித்த வண்ணம் அந்த அறைக்குள் சிலமணிநேரம் தங்கியிருக்க... பதினைந்து ரூபாய்களா... அநியாயம்?... ஆமாம் அவனது வாழ்க்கையில் நியாயம் என்றதுதான் தலைமறைவாகிப் போய்விட்டதே?

சாட்சிக் கூண்டில் வந்து நின்ற நாட்டாண்மைக் காரரது ஆட்கள் சொன்ன பொய்க் கதையைக் கேட்டு கோபத்திலே அவன் குன்றியபோது... அலறி அழ முடியாத ஆக்ரோஷத்திலே உள்ளம் உலைக்களமானபோது... நியாயம் அங்கே வந்து சிறிதாவது எட்டிப் பார்த்ததோ?

பக்கத்திலிருந்த கழிவறையிலிருந்து வந்த நாற்றத்தைப் பொறுத்துக்கொண்டு குளியலறையில் வாளியில் பையன் நிரப்பி வைத்திருந்த தண்ணீரில் நன்றாக சோப்புத் தேய்த்து... தலை முழுகிவிட்டு வந்தான். புதிதாக வாங்கிய வேட்டியும்... ஈர முடியைத் துவட்டிவிட்டு... சீப்பினால் வாரியபடி கண்ணாடியில் பார்த்துக்கொண்டு நின்றபோது, பையன் கதவைத் தட்டினான். 'பகல் சாப்பாட்டை அறைக்குக் கொண்டு வரவா...? கீழே வந்து சாப்பிடுகிறீர்களா...? ராத்திரி சாப்பாட்டுக்குப்பிறகு...' என்றவன் தலையைச் சொறிந்து கொண்டு அருகில் வந்தான்.

'ஒரு புது உருப்படி இருக்கு... ரேட் ரொம்ப அதிகமில்லை... அம்பது ரூபாய்தான் என்று அடிக்குரலில் சொன்னபோது... பற்கள் அனைத்தும் கொட்டி விடும்படி ஓங்கி பையன் கன்னத்திலே ஓர் அறைவிட வேண்டுமென்ற ஆத்திரத்தில் கொதித்துப்போனான் சுந்தரம்.



பெண் - மண் இந்த இரண்டின் மீதும் அவன் கொண் டிருந்த ஆசையின் பலனை அதிகமே அனுபவித்துவிட்டு வந்திருந்த அவனிடம், அந்தப் பொடிப்பயல் அப்படி ஒரு கேள்வி கேட்டுவிட்டானே?

'தம்பி! ராத்திரி ரயிலுக்கு நான் புறப்பட்டுடுவேன். ஒழுங்கா ஊர்போய்ச்சேர நினைக்கிறவன். உன்வேலையை வேறு இடத்தில் வச்சுக்கோ.' உருட்டி விழித்ததைக்கண்டு அரண்டுபோன பையன் நொடியில் மாயமாகினான்.

லாட்ஜிற்கு வந்து தங்களை மாற்றிக்கொண்டு பெண்கள் வாழவேண்டிய அளவுக்கு நாட்டின் நாகரீகம் முன்னேறி விட்டிருக்கிறதா...? பெண்களை... மலர்போல மதித்த அவனுக்கு, வெளியுலக வாழ்க்கையில்... கிடைத்த இன்னொரு அதிர்ச்சி அது...

திடீரென்று அவன் நினைவு... கிராமத்தை நோக்கிப் பறந்தது... ஆமாம் கௌரியின் கதி இப்போது என்னவாகி யிருக்கும்...?

கதவைத் தாழிட்டுக் கொண்டு அழுக்குப் பிடித்த கட்டில் விரிப்பை நகர்த்திவிட்டு ஓர் ஓரத்தில் உட்கார்ந்தவன் கண் இமைகளில் நீர் தட்டியது. பாறாங்கல்லாக நெஞ்சைத் துன்பம் இறுக்கியது...

இரவு முழுவதும் இரயிலில் அவனுக்கு தூக்கம் இருக்கவில்லை. பஸ் பயண முழுவதிலும் ஒரு பரபரப்பு. அழகர்புரம் நிறுத்தம் வந்ததும் நடத்துனர் உரத்த குரலில் கூவினார். பஸ் குலுக்கலுடன் நின்றது.

தன் பழைய பாண்ட் சட்டையைக் கழற்றி லாட்ஜின் வராந்தா ஓரத்தில் வைத்திருந்த குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு, புதிய பாண்ட் சட்டையுடன் அவன் புறப் பட்டிருந்தான்.

துணிப்பையின் கனம் குறைந்து லேசாகிவிட்டிருந்தது. ஊரை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்க, மனம் கனக்கத் தொடங்கிவிட்டது. அந்த நிறுத்தத்தில் அவனைத் தவிர யாரும் இறங்கவில்லை. புழுதியைக் கிளப்பிக்கொண்டு பஸ் நகர்ந்ததும் அவன் தன்னைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். எங்கும் மனித அரவமில்லாது வெறுமையாகத் தெரிந்தது.

எட்டரை ஆண்டுகளுக்குப்பின்... பிறந்த ஊரின் பக்கம் போகிறோம் என்ற உணர்வின் கொந்தளிப்பில் அவன் சாலையினின்று உள்ளே பிரிந்து சென்ற பாதையிலே மெல்ல நடந்தான். அவன் பிறந்த ஊரும் இப்போது மிகவும் மாறிவிட்டிருக்கிறதுபோலும், சாதாரணமாக முன்பு காணப் பட்ட மண்பாதைக்குப் பதில் இப்போது தார்போட்ட அகன்றதொரு பாதையாகிவிட்டதைக் கண்டு அவனுக்கு வியப்பாக இருந்தது.

பூம் பூம் என்று குழலை ஊதிக்கொண்டு ஒரு கணம் அவனை நடுங்கச் செய்துவிட்டு பஸ் ஒன்று அவ்வழியே போவதை அவன் அதிசயத்துடன் பார்த்தான்...

இன்னும் என்னென்ன மாறுதல்களைப் பார்க்கப் போகிறோமோ என்று எண்ணியபடி... பாதையின் இடது பக்கமாகப் பரந்துகிடந்த வயல்களைப் பார்த்தவண்ணம் நடந்தான்.

இரு பக்கமும் காணப்பட்ட அத்தனை நிலங்களும் நாட்டாண்மை நமச்சிவாயத்திற்குச் சொந்தம் என்பது அவனுக்குத் தெரியும்...

பச்சைப்பசேலென்று நெற்பயிர் மிகவும் செழிப்பாகக் காணப்பட்டது. சமீபத்தில் பெய்த மழையில்... சுற்றுப்புறம் முழுவதும் பசேலென்று தெரிந்தது.



சிறிது தூரத்தில்... காணப்பட்ட பாலத்தையடைந்தவன், மேலே நடக்கப் பிரியமில்லாதவன்போல... கைப்பிடி சுவர்மீது உட்கார்ந்து கொண்டான். கீழே தெரிந்த வாய்க்காலில் கரையைக் கிழித்துக் கொண்டு உற்சாகமாகப் பொங்கிய நீருடன் ஓடிக்கொண்டிருந்த காட்சி... கடந்த காலத்தைக் கண்முன் விரியச் செய்யவே மார்பு படபடக்க அவன் எழுந்து... கால் செருப்பைக் கழற்றிவிட்டு, பாண்டு ஓரத்தை மடித்துக் கொண்டு வாய்க்காலில் இறங்கி, இரண்டு கைகளிலும் தண்ணீரை அள்ளி, முகத்தைக் கழுவி, வாய் கொப்பளித்தான்.

பள்ளிக்கூட நாட்களில் வெயில் வேளையிலே வந்து, வெகுநேரம் துளைந்து ஆடிக்களித்த... அந்தத் தண்ணீர் மறுபடி முகத்திலே பட்டபோது... மறக்க நினைத்த அத்தனையும் புதுமையாக நெஞ்சை அடைத்தது. வாய்க்குள் மீதமிருந்த வாய்க்கால் தண்ணீர் உப்புக்கரிப்பதை உணர்ந்து திடுக்கிட்டான்.

தன்னையும் மீறி கண்ணீர் கன்னத்தில் கோடிட்டு வாய்க்குள் விழுந்ததை உணர்ந்தபோது, அவனுக்கு வெட்கமும் கோபமும் ஏற்பட்டன. சே... அவன் கோழையாக... பெண்பிள்ளைபோல உணர்ச்சிவசப்பட்டு அழுகிறானே?...

அந்த வாய்க்கால் கரை ஓரத்தில் சின்னஞ்சிறு பள்ளிப் பையனாக இருந்தபோது கொடுக்காப்புளியைப் பறித்து கௌரியிடம் கொடுத்த நாட்களின் நினைவு நெஞ்சை முள்ளாக நெருடியது...

''சுந்தரம்... இந்த பொன்வண்டு எத்தனை அழகா இருக்கு பார்த்தியா?'' என்று நெருப்புப் பெட்டிக்குள் அடைத்து வைத்திருக்கும் வண்டை அவனுக்குக் காட்டி, அரிசிப் பற்கள் தெரிய சிரிக்கும் சிறுமி... கௌரி... பின்னர் அழகான பெண்ணாக வளர்ந்து விட்டபோது, யாருக்கும் தெரியாது. அந்த கொன்றை மரத்தடியில் அவளைச் சந்தித்துப்

பேசுவாளே - அந்த நாட்களின் இனிமையை அவன் இனி நினைத்துக்கூட பார்க்க முடியாதே.

வாப்பா சுந்தரம்... இப்பவாவது உனக்கு ஊர் ஞாபகம் வந்திருச்சே... என்று வரவேற்பதுபோல சரமாகத் தொங்கிய மஞ்சள் பூக்கள் காற்றிலே சிரித்தாடிக் கொண்டிருந்தன.

கௌரிக்கு இப்போது வயது கூடிவிட்டிருக்குமே?

இருபத்தேழு - இருபத்தெட்டு வயதாகியிருக்குமே... அப்படியே கொடிபோல, இன்னமும் இருக்கிறாளா... அல்லது அண்ணி பொன்மணியைப்போல, பீப்பாயாக உப்பிவிட்டிருக்கிறாளா...

பாலும் தயிரும் தவறாமல் போட்டுத் தின்னும் பணக்கார வீட்டுப் பெண்ணாச்சே, உடம்பு உப்பாமல் என்ன செய்யும்...

கௌரிக்குக் கல்யாணமாகிவிட்டிருக்கும். கணவன் வீடு எப்படி இருக்கோ? குழந்தை குட்டிகளுடன்... அவள் வாழ்க்கை திசை திரும்பிப்போய்விட்டிருக்கும்.

'அடிக்காதே அண்ணே...' என்று அவள் அலறிய அந்தக் குரல்... இப்போது கேட்பது போன்ற ஒரு பிரமையில் உடல் பதற அவன், நெஞ்சு படபடக்க மலையேறி மீண்டும் பாதை ஓரமாக மெல்ல நடக்கலானான்.

ஊர், அருகில் வரத்தொடங்கியதும் உடம்பெல்லாம் வியர்த்து அவன் கால்கள் தள்ளாடின...

நாட்டாண்மைக்காரர் நிலங்களைத் தாண்டிய பின்னர் அழகாக அமைக்கப்பட்ட மூங்கில் வேலியைப் பார்த்து அவன் திடுக்கிட்டு நின்று விட்டான்...

அந்த ஒரு சிறு பகுதி நிலம் அவர்களுடைய சொந்த பூமி. அதற்கு முன் அதைச் சுற்றிலும் மூங்கில் வேலி கிடையாது. அந்தச் சிறு பகுதிக்கு அப்பால் சிறிது பரந்து கிடந்த நிலம் முழுவதும் நாட்டாண்மைக்காரருக்குச் சொந்தம்.



தமது நிலத்துக்கு இடையே... காலில் தெரிஞ்சிமுள் தைத்ததுபோல ஒரு பகுதி நிலம். அவர்களுக்குச் சொந்தமாக இருந்ததை அவர் வெறுத்தார். ஆனால், அந்த மண்ணை அவன் எவ்வளவு நேசித்தான். உயிர் போனாலும் அதை யாருக்கும் விற்கக்கூடாது என்ற ஆவேசத்தில் பட்டதாரி என்று கௌரவம் பாராட்டாது தந்தையுடன் மண்வெட்டியைப் பிடித்து நிலத்தைக் கொத்தி... காய்கறி விதை நட்டு... கிணற்றிலிருந்து தண்ணீரைப் பாய்ச்சி... காய்களைப் பறித்து... பக்கத்து சந்தைக்கும் - பக்கத்துக் கடைக்கும் அனுப்பிவைக்க உதவி... அவனது சிந்தனை தடைப்பட்டது. தோட்டத்தின் உள்ளே தெரிந்த அவர்களது வீடு... புதுச்சாயத்துடன்... பளிச்சென்று காணப்பட்டது.

வாயிற்கதவைத் திறந்துகொண்டு இடுப்பில் கூடையுடன் வெளிவந்த இளம் பெண் யார்?

செழிப்பாகத் தெரிந்த பகுதிக்கு நடந்து வேகமாக காய்களைப் பறித்து கூடையில்போட ஆரம்பித்த அவள், அவனைக் கவனிக்கவில்லை. தயக்கமாக மூங்கில்வேலி மீது சாய்ந்தபடி அவளை உற்றுப் பார்த்தான். முதலில் நாட்டாண்மை அந்த நிலத்தை அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டாரோ?...

அந்தப் பெண்... அவருடைய... ஆசை நாயகிகளில் ஒருத்தியாக இருக்குமோ?...

நெஞ்சு நெருப்பாக எரிய, பற்களைக் கடித்துக்கொண்டு அவளை உற்றுப்பார்த்தபடி அயர்ந்துபோய் நின்றான்.

ஊருக்கே அலங்காரமான, ஒரு காலத்தில் அவனுக்கு மகிழ்ச்சியாகப் பொழுது போக்க உதவிய கடைத்தெருவுக்குள் புகுந்தான்.

இந்தச் சில வருஷங்களில் அதுவும் மிகவும் மாறி விட்டிருந்தது. புதிதாகப் பல சிறு கடைகள் தோன்றியிருந்தன.

அதனால் கடைத்தெரு... ஜனநடமாட்டமிக்கதொரு நெருக்கமான பகுதியாக அவனுக்கு வியப்பூட்டியது. அவன் வழக்கமாக தேநீர் குடிக்கும் 'கேசவன் சகோதரர்கள்' என்ற தேநீர் கடையும் இப்போது மிகவும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

எப்பொழுதும் அழுக்குப் படியும் சுவர்கள் புதுச் சாயத்தில் துலங்கின. கடைக்கு முன்னால் ஓடுவேய்ந்த ஒருசார்பு ஒன்றும் - அதன் அடியில் சிறு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. பக்கத்திலே வெற்று பூமியாகக் கிடந்த சிறு நிலப்பகுதியையும் கேசவன் சகோதரர்கள் வாங்கி சேர்த்துக் கொண்டு விட்டனர் போலும். முன்போல் உள்ளே உட்கார இடமில்லாது நெருக்கமாக இருக்கவில்லை.

கால்கள் ஆடும் பெஞ்சிகள் போய் தேநீர் 'பன்' மெதுவடை இத்யாதிகளை ரசித்துச் சாப்பிட சிறுமேஜைகள் ஒவ்வொன்றுக்கும் அருகே... எதிர் எதிராக நாற்காலிகள் என்று புதிய மாற்றத்துடன் காணப்பட்டது. சுவற்றில் புதிதாக குருவாயூரப்பன் படமும் வெங்கடாஜலபதியின் படமும், சாமந்திப்பூ அலங்காரத்தில் அருகே எரிந்த ஸீரோவாட் பல்பின் வெளிச்சத்தில் பளிச்சிட்டன.

கல்லாப்பெட்டி அருகே புகைந்த ஊதுவத்தியின் நறுமணம், லேசாகக் கடை முழுவதும் பரவிக் கொண்டிருந்தது. ஆனால், கல்லாப்பெட்டி அருகேதான் கேசவனைக் காணவில்லை. அதற்குப் பதில் செவேலென்று ஒரு இளைஞன் சுத்தமான சட்டைப் பாண்டில் உட்கார்ந்திருந்தான்.

'அண்ணனுக்கு என்ன வேணும்னு கேளு பையா' ஒரு அதட்டல் போட்டுவிட்டு முறுவலுடன் அவனை வரவேற்றான்.

ஊருக்குள் வந்தால் என்ன வரவேற்பிருக்குமோ என்று அஞ்சியவனுக்கு அந்த இளைஞனின் முறுவல் மனதிற்கு மிக்க இதமாக இருந்தது. பையன் அவசரமாகத் துடைத்த துத்தநாகத் தகடு வேய்ந்த ஒரு மேஜையருகே உட்கார்ந்தான்.



பொருளாதார நிலை மிகவும் மோசமாகி விட்டிருந்ததால்தான் வாத்தியார் அருணாச்சலத்தைப் பார்க்கும்வரை மிகவும் சிக்கனமாக இருக்கவேண்டும். அவர் உதவியுடன் அந்த வக்கீல் வரதனிடம் கடிதத்தைத் தரவேண்டும்... அதுவரை இருக்கும் பணத்தை இறுக்கிப் பிடிக்காவிட்டால்... 'ஒரு சிங்கிள் டீயும் - ஒரு பன்னும் கொண்டுவா...' கூறிவிட்டு தன்னைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.

ஊருக்குள்ளே பஸ் ஓடத் தொடங்கிவிட்டதால் பஸ் நிறுத்தத்தில் இறங்கிய பயணிகள் - பஸ் ஓட்டுனர், நடத்துனர் என்று ஒரு கும்பல் கடைக்குள் புகுந்து எல்லா மேஜைகளையும் பிடித்துக்கொண்டு, இட்லி சாம்பார், சூடா வடை, சிங்கிள் டீ... என்று பல குரல்களை எழுப்ப... வியாபாரம் உச்சகட்டத்தை எட்டிக் கொண்டிருந்தது.

யாருக்கும் பேசவோ - அவனைப் பற்றித் தெரிந்து கொள்ளவோ நேரம் இருக்கவில்லை. சரசரவென்று பையன்கள் கொண்டுவந்து வைத்த உணவுப் பொருள்களை வேகமாக விழுங்கத் தொடங்கினர்.

அவனுக்கு அவசரம் ஏதும் இருக்கவில்லை. நாளின் மீதிப்பொழுதெல்லாம் அவன் முன் நீண்டு விரிந்து கிடந்தது.

அதை எப்படிச் செலவழிக்கப் போகிறான் என்பதுதான் அவன் பிரச்னை. பையன் கண்ணாடி டம்ளரில் கொண்டு வந்து வைத்த சூடான தேநீரில் தட்டிலிருந்த பன்னைப் பிட்டு தொட்டு வாயில் போட்டுக்கொண்டு மெல்ல சாப்பிடத் தொடங்கினான்.

முருகேசன் கூறியது முற்றிலும் உண்மை.

வெளி உலகத்தின் சுதந்திர வாழ்வில் ஒரு தனி இன்பம் இருக்கத்தானிருக்கிறது. இத்தனை நாழிகைக்குள் குளிக்க வேண்டும். இப்போது தேகப்பயிற்சிக்குத் தயாராக நிற்க

வேண்டும். இந்த உணவைத்தான் சாப்பிடவேண்டும். பகல் உணவுக்கு மணியடிக்கும்வரை ஓயாது உழைக்க வேண்டும் என்ற வற்புறுத்தப்பட்ட அட்டவணை வாழ்க்கையில் இவன் இனி இயங்க வேண்டியதில்லையே.

அப்பாடா... அந்த கடுமையான வாழ்க்கை ஒழிந்தது என்று தன்னுள் நினைத்து நிம்மதியாக மூச்சுவிட்டுக்கொண்டு பன்னை இரண்டாகப் பிட்டு ஒரு துண்டை தேநீரில் நனைத்து விட்டு நிமிர்ந்தான். கண்களில் அந்த மூவரும் பட்டுவிட்டனர்.

நால்வராகத் திரிந்த அந்தக் குழுவில்... சடையாண்டி போனதும் மிஞ்சிய பாண்டியன் - வீரத்தேவன் - சங்கிலிக் கருப்பன் என்ற மூவரும் கடையை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சில ஆண்டுகளில் அந்த மூவரும் வயதில் முதிர்ச்சியடைந்தவர்களாகத் தெரிந்தனர். அதைத்தவிர, அதே முரடர்கள் என்பதை நிரூபிப்பதுபோல பாண்டியன், மேல் துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு உள்ளே வந்தான்.

'டேய் பையா! சீக்கிரம், மூணு பேருக்கும் ஆம்லெட் தோசையும் சூடான டீயும் கொண்டா... ரொட்டியிருந்தா ஆளுக்கு இரண்டு சிலேசு வெண்ணெய் பூசி எடுத்தா...' கடையே தன்னுடையதுபோல அமர்க்களமாக உத்தர விட்டான்.

பின்னால் வந்த வீரத்தேவன் வழக்கம்போல அதே கருப்புச் சட்டையும், கழுத்திலே கவரிங் சங்கிலியில் புலிநகமுமாகக் காணப்பட்டான்.

முன்னைவிட அவன் முகம் உப்பியிருந்தது - வயிறும் பெருத்துக் காணப்பட்டது. சங்கிலிக் கருப்பன் இன்னமும் மாறவேயில்லை. அதே பரட்டைத்தலை - அழுக்கு பனியன் - இடுப்பிலே லுங்கி... வாயில் பாதி புகைந்துவிட்ட ஒரு துண்டு பீடி.



சடையாண்டி உயிருடன் இருந்த காலத்தில் அந்த நால்வரும் சேர்ந்து கிராமத்தைக் கலக்கிக் கொண்டிருந்த முரடர்கள்.

தேநீர்க் கடையில் அவர்கள் நுழைந்தபோதெல்லாம் நால்வரும் இனாமாக தேநீரும், பன்னும் - தின்பண்டங் களும்... சாப்பிடுவது வழக்கம்.

நால்வரும் பலத்த குடிகாரர்கள்... சாராயக் கடையில் தங்கள் அதிகாரத்தை அதிகமாகவே காட்டுகிறவர்கள் - அப்படி ஒருமுறை அதிகமாகக் குடித்துவிட்டு அந்த வெறியில் வாய்ப் பேச்சு - முற்றிப்போய் சங்கிலிக் கருப்பனுக்கும் கந்தரத்தின் அப்பா நாகப்பனுக்குமிடையே மோதல் ஏற்படப்போய் இடையே புகுந்த கந்தரம்... அவன் மேலே, அதை நினைக்க முடியாத நேரத்தில் லபக்கென்று பன்துண்டை முழுங்கினான்.

உள்ளே புகுந்த அவர்கள் மூவரும் அவனைப் பார்த்து ஒருகணம் அயர்ந்துபோய் நின்றார்கள்.

பஸ் ஓட்டுனர் - நடத்துனர் - ஒரு பயணி மூவரும் காலி செய்து விட்டுப்போன மேஜையருகே வந்து சட்டென்று உட்கார்ந்து கொண்டனர்.

அவர்களது வாய்க்கும் கைக்கும் பயந்து கடைக்காரர்கள் அவர்களுக்கு மாமூல் என்ற முறையில் மாதம் இவ்வளவு என்று பணம் கொடுத்துக் கொண்டிருந்தனர். கடைகளில் கலவரம் ஏதுமின்றி வியாபாரம் நடைபெற்றது.

'டேய்! மாமியார்வீட்டிலிருந்து எப்படா வந்தே?' என்று வேண்டுமென்றே கிண்டலாக சங்கிலியைப் பார்த்து பாண்டியன் கேட்டான்.

'தெரியலையா - இன்னிக்கு காலைலேதான் வந்தேன்' சிரித்துக்கொண்டே கண்களைச் சிமிட்டினான் சங்கிலி.

'நல்ல உருண்டைக்களி தின்னுட்டு கரலாகட்டை யாட்டம்தான் வந்திருக்கேடா... யாரும் மாலை மரியாதை

யோட உன்னை வரவேற்கலையா-' என்று வீரத்தேவன் ஓங்கிய குரலில் சிரித்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் திடுக்கிட்டு அவன் பக்கம் திரும்பியபோது, அவமானத்திலும் ஆத்திரத்தி லும் அவன் புழுங்கிப்போனான்.

'என் பழைய காதலியைப் பார்க்கவேணாமாடா? ஆசையோட வந்திருக்கேன்... ஹி... ஹி...' என்று கோரமான குரலில் பாண்டியன் சிரிப்பதைக் கேட்டு... உடலும் உள்ள மும் நெருப்பாக எரிவதை சுந்தரம் உணர்ந்தான்.

அவர்கள் மூவரும் வேண்டுமென்றே அப்படி பேசி ஒரு கலவரத்தை உண்டுபண்ணி சண்டைக்கு இழுக்கிறார்கள். அது எப்பொழுதும் அவர்கள் தொழிலாச்சே. பற்களைக் கடித்துக் கொண்டு பன்னை தின்று முடித்து டீயை வேகமாகப் பருகினான் அவன்.

'கொலைகாரப் பசங்களை ஊரில் விட்டால் நல்ல மனுசங்க கதி என்னாவது? ஊர்ப் பெண்கள் நிம்மதியா வாழ முடியுமா?' வீரத்தேவன் கேட்டுவிட்டு அவனை உற்றுப் பார்த்தபோது... சுந்தரத்தின் ரத்தம் கொதித்தது. அவன் செய்யாத கொலைக்கு... அவனுக்குத் தண்டனை விதித்து விட்டு...

நியாயமே சிரித்தபோது, அவன் மௌனமாகத்தானே அதை ஏற்றுக் கொண்டான்.

இப்போது இந்தக் கயவர்கள் அவனைக் கேலி செய்வதைக்கேட்டு கோபப்பட்டு கையை ஓங்கிவிட்டு மறுபடியும் சண்டையில் மாட்டிக்கொண்டால் மாஜி கைதியான அவனுக்கு யாரும் அனுதாபம் காட்டமாட்டார்கள். அவனைக் குற்றவாளி என்று மறுபடியும் நியாயம், தண்டனை வழங்கி சிறையில் தள்ளும்.



இல்லை இல்லை - முருகேசன் படித்துப் படித்து சொன்னபடி அவன் பொறுமையாக இருக்கப்போகிறான்.

நெருப்புக் குச்சியின் பின்பக்கத்தால் பல்லை நோண்டிக் கொண்டு அவனை ஏளனமாகப் பார்த்த வீரத்தேவனைப் பாராதுபோல அவனைத் தாண்டிக்கொண்டு கல்லாப்பெட்டி அருகே வந்தான். சாப்பிட்டதற்கு உண்டான சில்லறையைத் தந்துவிட்டு, தம்பி! கேசவன் என்பவர் இருப்பாரே... அவர் இப்போ எங்கே போயிருக்கார்?' என்று மெல்லிய குரலில் கேட்டான்.

'அவர் காலமாகிட்டார் - அவர் மகன் நான் - கடையை இப்போ நான்தான் கவனிச்சுக்கிறேன்' என்று தன்னை அறிமுகம் செய்துகொண்ட அந்த வாலிபன், புன்முறு வலித்தான். ஆத்திரத்தில் புண்ணாகிவிட்ட மனதிற்கு அந்த முறுவல் மருந்து... இதமாக இருந்தது...

பின்னால் அவர்கள் மூவரும் அசிங்கமாக, கேலிச் சொற்களால் அவனை ஏளனப்படுத்தியதைக் காதில் போட்டுக்கொள்ளாது அவன் வெளியேறி நடந்தான்.

வடக்குத் தெருவுக்குள் நடந்து அந்த ஓட்டுக்கூரை வீட்டிற்கு முன் நின்றபோது அவன் நெஞ்சு பரபரப்பில் துடித்தது.

வாயிலில் போட்டிருந்த கயிற்றுக் கட்டில் காலியாகக் கிடந்தது. கதவில் ஒருபெரிய பூட்டு தொங்கியது. சுற்று முற்றும் பார்த்தான். முன் நெற்றி முடி பட்டையாக வெளுத்து விட்ட ஒரு பெண்மணி குடத்துடன் தண்ணீர் எடுக்கத் தயாராகக் கிளம்பிக்கொண்டிருந்தாள். அவனை அதிசயமாகப் பார்த்தாள்.

ஊருக்கு அவள் புதியவள் போலும்... இல்லா விட்டால்... அந்தப் பிரபல கொலைக் கேசில் சம்பந்தப் பட்டவன் என்று அடையாளம் கண்டுகொண்டிருப்பாளே...

''யாரப்பா நீங்க - வாத்தியார் அய்யா பக்கத்து டவுனுக்கு போயிருக்கார். உச்சி பொழுதுக்குள்ளார வந்துடுவார் - நான்தான் தினசரி அவருக்கு ஒருகுடம் வாய்க்கால் தண்ணி எடுத்து வந்து கொடுக்கிறேன். அதுக்குத்தான் புறப்பட்டுக் கிட்டிருக்கேன் - ஏதாச்சும் சேதி இருந்தா சொல்லு...''

''அவருக்குத் தெரிஞ்சவன் - அம்மாகூட வீட்டிலே இல்லையா...''

''அப்படின்னா உனக்கு விசயம் தெரியாதா தம்பி, அம்மா செத்துப்போய் ஒரு வருசமாகுதே'' வியப்புடன் கேட்டான்.

''தெரியாது'' என்று வார்த்தைகளை மென்று விழுங்கி விட்டு கட்டிலின் மீது உட்கார்ந்தான்.

''மகாலக்ஷ்மி மாதிரி இருப்பாங்களே? சுந்தரம் நீ நிரபராதி எனக்குத் தெரியும். ஆனால் சட்டம் ஒரு கழுதை...'' என்று ஆறுதல் சொல்வார்களே பார்வதி அம்மா... அவங்களும் காலமாகிவிட்டாங்களா?... அவன் அப்பா... அவர்கூட காலமாகிவிட்டாரோ?...

பலவிதமாக எண்ணிக்கொண்டு அவன் அந்தக் கட்டிலின் மீது உட்கார்ந்தபடி அருணாசலத்தின் வரவுக்குக் காத்திருந்தான்.

கேட்டுத் தெரிந்து கொண்டிருக்க அவசியமேயில்லை. பார்வதி அம்மாள் இல்லை என்பதை அவனைச் சுற்றியுள்ள அத்தனையும் பறைசாற்றின.

வாத்தியார் வீட்டுக் கட்டில் எப்பொழுதும் விண் என்று இருக்கும். கொஞ்சம் தொய்வு ஏற்பட்டாலும் பார்வதி அம்மாள் அவனை பக்கத்து டவுனுக்கு அனுப்பி புதுக்கயிறு வாங்கி வரச்செய்து கடைத்தெருவிலிருந்து செல்லமுத்துவை அழைத்துவரச் செய்து - கட்டிலுக்குக் கயிறு மாற்றிவிடச் சொல்வாங்களே!



வாயிற்கதவு உதைத்தால் உடைந்துவிடும்போல உளுத்துக்காணப்படுமா?

வெள்ளிக்கிழமைகளில் மஞ்சளும் குங்குமப் பொட்டும் வைத்து அலங்கரித்துவிட்டிருப்பார்கள். கதவைப் பார்த்தாலே ஏதோ கோயிலின் முன் நிற்பதுபோல ஒரு பக்தி உணர்வு ஏற்படுமே?

கதவைத் தாண்டி நாலு கருங்கல் தூண்களில் நின்ற அந்த ஓட்டுக் கூரையின் முன்பகுதி அப்படியா இருக்கும்? சாணம் தெளித்து பெருக்கிப் பசுமையாகிவிட்ட அந்தத் தரைமீது அழகாகக் கோலம் போட்டிருப்பாங்க.

தினமும் ஒரு புது தினுசு கோலம். அந்த அலங் காரத்தைப் பார்த்து அவன் வியந்துபோன நாட்கள் எத்தனை?

'என்னடா பிரமிச்சுப்போய் நிக்கறே? பகல் வேளைக்கு ஏதாச்சும் சாப்பிட்டியா எங்கிட்ட மட்டும் பொய் சொல்லக்கூடாது.

உன் மூஞ்சியே சொல்றதே. உள்ளே வா. சிலேட்டு புத்தகத்தை நடை திண்ணையிலே வச்சிட்டு கைகால்களைக் கழுவிக்கிட்டு பின்னாடி போய் தோட்டத்திலிருந்து ஒரு வாழை இலையைப் பறிச்சுட்டுவா. பேனா கத்தியை எடுத்துட்டுப்போ...' உத்தரவிடுவாங்க.

கூடத்திலே அவனை உட்கார வைத்து சூடாக சோறும் காரக் குழம்பும் கடிச்சுக்க உப்பிவிட்ட நாரத்தங்காயும் போடுவாங்களே மகராசி... 'என்ன அப்படி பார்க்கிறே? உங்க தோட்டத்து கத்தரிக்காய்தான்.'

நாகப்பன் நல்ல நிலையில் இருக்கச்சே வாத்தியார் அய்யாவை மறக்கறதில்லை. ஒரு கட்டு அவத்திக்கீரையும் கத்தரிக்காயும் கொண்டாந்து காலையிலேயே கொடுத்துட்டுப் போவார்.

மாலையிலே வீட்டுக்கு வரும்போதுதான் அப்பா தள்ளாடிக்கிட்டு வருவார். மகன் சாப்பிட்டானா படிச்சானா என்ற நினைப்பில்லாம குடிபோதையில் ஆடிக்கொண்டே வருவார்...

'அப்பா செய்கிற காரியத்தைப் பத்தி பள்ளிக்கூடத்திலே பசங்க பேசி என்னைக் கேலி செய்கிறாங்க...' துக்கம் தாள முடியாது அவன் விக்கி அழும்போது, பார்வதி பெற்ற தாயைப்போல அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டு 'அவங்க கிடக்கிறாங்க, வகுப்பிலே நீதான் முதலாமே? ரொம்ப கெட்டிக்காரனாம். படிச்சு ஒரு பெரிய அதிகாரியா வரப்போறேன்னு வாத்தியார் சொன்னார்.'

உன்னை மெச்சுகிறார் என்று புகழ்வாங்க. வயிறு நிறைய சாப்பிடச் செய்து மிகவும் வற்புறுத்துவாங்க.

'பெரிய அதிகாரியா ஊருக்குள் வரலை - மாஜி கைதி யாக வந்திருக்கேன். அம்மா... உங்க வாயால எனக்கு மறு வாழ்வு உண்டுன்னு வாழ்த்துங்க' என்று கேட்கத்தான் அவங்க பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கத்தான் வந்திருந்தான்.

அந்தம்மாள் இப்போது இல்லையே... துக்கம் நெஞ்சை இறுக்குவதைத் தாங்க முடியாது எழுந்தான்.

வாத்தியார் ஐயாவுக்கு ஒரு காபிகூட தானே போட்டு சாப்பிடத் தெரியாதே. மனைவி போனபின் - வேலை யிலிருந்து ஓய்வடைந்தபின் - தள்ளாத வயதில் அவர் தனியாக எப்படித்தான் சமாளிக்கிறார்?

கடைத்தெரு வழியாக வந்தவனுக்கு புத்தியில்லாம போச்சே. ஒரு பிஸ்கட் பொட்டலமாவது வாங்கிக்கொண்டு வந்திருக்கலாமே?

மறுபடியும் கடைத்தெருவை நோக்கி வேகமாக நடந்தான்.



பிஸ்கட் பொட்டலம் ஒன்றை ஒரு கடையில் வாங்கிக்கொண்டு அவன் கொஞ்சதூரம் கடைத்தெரு ஓரமாக நடந்தபொழுது, தகப்பன் நாகப்பனைப் பார்த்துவிட்டான்.

வழக்கமாக உட்கார்ந்து பொழுதைக்கழிக்கும் சாராயக் கடைக்குப் பதில் புதிதாக உருவாகிவிட்டிருந்த ஒரு தேநீர்க் கடை முன்னால் கிடந்த பெஞ்சி ஒன்றில் நாகப்பன் உட்கார்ந் திருந்தார். கையில் ஒரு கண்ணாடி டம்ளரில் டீயை வைத்துக் கொண்டு மெல்ல உறிஞ்சிக்கொண்டிருந்த நாகப்பன், மகனைக் கவனிக்கவில்லை.

அப்பாவை அவன் நன்றாக உற்றுப் பார்த்தபோது இனங்காணா ஓர் உணர்வில் நெஞ்சம் குழைந்து தடுமாறியது. முன்னைவிட அப்பா கிழவனாகிவிட்டிருந்தார். தலைமுடி நன்றாகவே வெளுத்து காணப்பட்டது. முன்போல அழுக்கு சட்டையும் கிழிந்த வேட்டியுமாக இல்லாது இப்போது சுத்தமான உடையில் காணப்பட்டார்.

அப்படியென்றால் இந்த சில ஆண்டுகளில் அப்பா திருந்திவிட்டாரா? அது உலகமகா அதிசயங்களில் ஒன்றாகி விடுமோ? - எண்ணியபடி அவரைப் பாராதுபோல அவன் தெருவின் எதிர் ஓரமாக ஒதுங்கிக்கொண்டு சென்றான். கொல்லென்ற சிரிப்பொலியைக் கேட்டு அதிர்ந்துபோய் மெல்ல திரும்பிப்பார்த்தான்.

அந்த மூன்று முரடர்கள் இப்போது அடுத்ததாக அந்தத் தேநீர்க் கடையை நோக்கிப் படையெடுத்திருந்தனர்.

போதாததிற்கு அவர்களின் விரோதியான நாகப்பனை அங்கே சந்தித்துவிட்டனர். பாண்டியன் தன் வேட்டியைத் தூக்கி மடித்துக்கொண்டு கடைப் பையனைப் பார்த்து உரத்த குரலில்... 'ஆளுக்கு ரெண்டு பிஸ்கட்டோட சூடா டீ எடுத்துட்டுவா...' உத்தரவிட்டான்.

நாகப்பன் எதிரே மிகவும் திமிராக வந்து நின்றான் வீரத்தேவன்.

''ஏண்டா சங்கிலி! இப்போதெல்லாம் ஐயா சாராயக் கடை பக்கமே வரதில்லையே. பையன் மாமியார் வூட்டுக்குப் போனதிலிருந்து ஒரேமுட்டா மாறிட்டாரே? இவருக்கு சங்கதி தெரியுமா தெரியாதா? தெரிஞ்சிருக்கும் மானை மரியாதையோட மகனை முதல்லே கோயிலுக்குக்கூட்டிக் கிட்டு போகத்தான்... கடைத்தெருக்கு வந்திருக்கார்.

''இன்னும் பூக்கடை திறக்கலைன்னு டீக்கடையிலே உட்கார்ந்திருக்கார்,'' என்று ஏளனமாக... படபடவென்று பேசினான்.

'சாமியாரே! உங்க மகன் வந்துவிட்டது தெரியு மில்லையா...?' கைகொட்டி நகைத்தான் பாண்டியன்.

அவர்களது சிரிப்பும் பேச்சும் ஊரின் எல்லையைத் தொட்டன. எதிர்ப் பக்கத்திலே ஒரு பெட்டிக்கடையருகே நின்றபடி அங்கு நடப்பதைப் பார்த்துக்கொண்டு கேட்டுக் கொண்டிருந்த சுந்தரத்தின் ரத்தம் கொதித்தது. பொறுமை! பொறுமை என்று யாரோ தலையில் குட்டுவதைப் போன்ற உணர்வில் முப்பது காசு கொடுத்து வாங்கின பச்சை வாழைப் பழத்தை உரித்து, மெல்ல கடித்து விழுங்கிக் கொண்டிருந்தான். ''உன் மகனை திரும்ப இந்த ஊருக்கு எதுக்காக வரச்சொன்னே? கொலைகாரப் பயலுகளை வீட்டில் வச்சு உபசாரம் செய்தா ஊர் கெதி என்ன?'' சங்கிலிக் கருப்பன் அட்டகாசமான குரலில் அதட்டினான்.

கையிலிருந்த தேநீரை ஒரே மூச்சில் விழுங்கிவிட்டு... டம்ளரை ஒதுக்குப்புறமாக வைத்த நாகப்பனை எழுந்திருக்க விடாது பாண்டியன் தோள்களை அழுக்கி பெஞ்சிமீது உட்கார வைத்தான்.

''அந்தக் கொலைகார நாயிக்கு உன் வீட்டிலே இடம் தரப்போறியா? அதுக்கு பதில் சொல்லு...'' உறுமினான் வீரத்தேவன்.



''அவன் செய்த தவறுக்கு தண்டனை அனுபவிச்சிட்டு திரும்பிவந்தா - அவனுக்கு ஊரிலே இடமில்லேன்னு யாருடா சொல்றது?''கிழவன் உரத்துக் கத்தியபடி தன் கையை ஓங்கினான்.

'அடிச்சிடுவியா?... அட எங்க கை பூப்பறிக்கும் என்று பாண்டியன் பாய்ந்து, ஓங்கிய நாகப்பன் கரத்தைப் பிடித்துக் கொள்ள சங்கிலிக்கருப்பன் எட்டிக் காலால் கிழவன் வயிற்றைப் பார்த்து உதைத்தான். என்ன நடந்தது என்று புரிந்துகொள்ளுமுன் மூன்று முரடர்களும் நாகப்பனைப் பந்தாடிக்கொண்டிருந்தனர்.

வீரத்தேவன் ஓங்கி முதுகில் குத்திய வேகத்தில் கிழவன் கீழே விழுந்து பல் உதட்டைக் காயப்படுத்த முகமெல்லாம் ரத்தமாக எழுந்தான்.

கடைத் தெருவிலிருந்த அத்தனைபேரும்... கம்மென்று வேடிக்கை பார்த்தனர். யாரும் சண்டையை விலக்கவோ நாகப்பனுக்கு உதவவோ... முன்வரவில்லை...

மறுபடியும் ஓங்கிக் காலால் உதைத்துத்தள்ள காலை உயர்த்திய சங்கிலி தன் பிடரிமீது பலத்த அடி படார் என்று விழ... பொறிதட்டிப்போய் ஐயோ என்று அலறியபடி கொஞ்ச தூரத்தில் தரையில் உருண்டு விழுந்தான்.

பாண்டியனும், வீரத்தேவனும் அதிர்ச்சியிலிருந்து மீளுமுன் பற்கள் தெறித்துவிடும் போன்ற ஆளுக்கு ஒருஅறை கன்னத்தில் வாங்கிக்கொண்டு திகிலுடன் திரும்பிப் பார்த்தனர்.

'ஜெயிலுக்குப் போனது உண்மை. உருண்டைக்களித் தின்னது உண்மை... அப்போ நான் கொலை செய்தது உண்மையோ பொய்யோ... இப்போ உங்க மூன்று பேருக்கும் சமாதி கட்டிட்டு மறுபடியும் ஜெயிலுக்குப் போறேன்...

'நான் தயார்... வீரம் இருந்தா கிட்டக்க வாங்கோ...' என்று சிங்கம்போல் சீறியபடி கையை மடக்கிக்கொண்டு குத்த தயாராக நின்ற சுந்தரத்தைப் பார்த்தனர்... ஆளுக்கு ஒரு திசையாகக் கணப்பொழுதில் மாயமாகினர்.

'சுந்தரம்! எப்போ நீ வந்தே... அந்த முரடர்கள் சொன்ன பிறகுதான். சங்கதி எனக்குத் தெரிஞ்சது...' என்று கூறியபடி நாகப்பன் எழுந்திருக்க முயன்றான். சுந்தரம் அவனை ஒரு துரும்புபோல அசட்டையாகப் பார்த்தான்.

அதுசமயம் அங்கே கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒரு பச்சை நூல் சேலைக்காரி அவன் சற்றுமுன் தங்களது வீட்டின் வாசலில் பார்த்தவள்... நடுவயதுக்காரி கையில் கொடுவாளுடன் வந்தாள்.

'என்னங்க... என்ன நடந்தது...' பதை பதைத்த குரலில் கேட்டவள், சுற்றிலும் உள்ளவர்களைக் கோபக்கனல் எரித்த கண்களால் அளந்தாள்.

'இவன் இல்லாட்டி அந்த முரட்டு பசங்க என்னைக் கொன்னு போட்டிருப்பாங்க... நான் அடிக்கடி சொல்வேனே சுந்தரம் என் மகன்னுட்டு... அந்த சுந்தரம் வந்துட்டான்... இதோபார்' என்று சுட்டிக்காட்டிய கிழவன், அவளது கைத்தாங்கலில் எழுந்தார். முகத்தில் வழிந்த ரத்தத்தை அவள் தன் முந்தானையால் துடைத்துவிட்டாள்.

'உன் அப்பாவை சமயத்துக்கு வந்து காப்பாத்தினதுக்கு நன்றி... வாப்பா சுந்தரம் வீட்டுக்கு' என்றாள்.

அவளுக்கும் அப்பாவுக்கும் என்ன உறவு? சுந்தரம் வெறுப்புடன் மறுபக்கம் திரும்பினான்.

என் அப்பான்றதுக்காக நான் காப்பாத்தலை. ஒரு கிழவரை மூணு முரட்டுப் பசங்க அடிக்கிற அநியாயத்தைப் பொறுக்க முடியாம சண்டையில் இறங்கினேன். ஒரு



வயோதிகருக்கு உதவணுமுங்கிற ஆசையாலத்தான். அந்த பயல்களைச் செம்மையா அடிச்சு விரட்டினேன். இனி இவர்கிட்ட வாலாட்ட மாட்டானுக என்றபடி, சுந்தரம் வாத்தியார் வீட்டை நோக்கி மெல்ல நடந்தான். 'சுந்தரம்! என் மகனே...!' என்று நாகப்பன் கூப்பாடு போட்டதை அவன் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை.

மறுபடி அவன் வாத்தியார் வீட்டை நெருங்கியபோது, வீட்டுக்கதவு திறக்கப்பட்டிருந்தது - காலடி ஓசைகேட்டு அருணாசலம் எட்டிப்பார்த்தார்.

''வாப்பா... வா. சுந்தரம். உட்கார். நீ ஊருக்குள் வருவதற்குள்ளேயே பெரிய கலவரம்ன்னு கேள்விப் பட்டேன். இது அவசியமா? நீயும் ஒரு மனிதன்னு வாழ ஆரம்பிக்க வேணாமா?''

தமது செல்லாப் பெட்டியுடன் வாத்தியார் கயிற்றுக் கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டார்.

''ஏன் கையைக் கட்டிக்கிட்டு நிக்கிறே - உட்காரப்பா'' என்று அருகே கிடந்த ஒரு முக்காலியைக் காட்டினார்.

'சாப்பிடாம இருப்பீங்கன்னு... வாங்கிட்டு வந்தேன்'... என்று பிஸ்கட் பொட்டலத்தை அவர்முன் வைத்தபோது அருணாசலம் திறந்த வெற்றிலை பெட்டியை மூடிவிட்டு வாய்விட்டு சிரித்தார்.

''இது நம்ப பசிக்கு கடைவாய்க்குப் பத்துமாடா?... நீ இப்பத்தான் வந்தாப்பல இருக்கு. உள்ளேபோய் பின் பக்கம் வராந்தாவிலே அண்டாவிலே தண்ணி இருக்கு. முதல்லே முகம், கைகால் கழுவிக்கிட்டு உள்ளேவா. நாம் சாப்பிடுவோம். சாப்பாடு....'' என்று தயங்கிய அவனைப் பார்த்து அருணாசலம் முறுவலித்தார்.

''அம்மா போயிட்டாங்க. வாத்தியார் வேலையிலிருந்து ஓய்வடைஞ்சுட்டார். சாப்பாட்டுக்குத் திண்டாடுவாரேன்னு

தானே யோசிக்கிறே? வாழ்க்கைக்கு மிக அவசியம்னு உலகத்திலே எந்த விஷயமும் கிடையாது. மனிதர்களும் கிடையாது. அம்மா போயிட்டாங்க. நான் கூடவா போயிட்டேன். தேவைன்னு வந்துட்டா மனிதன் திறமைசாலியாகி விடறான். சுயம் பாகம் செய்ய நல்ல கத்துக்கிட்டேன். வீட்டைக் கூட்டி, தண்ணி வாய்க்காலிலிருந்து கொண்டு வந்து வைக்க பக்கத்து வீட்டிற்குப் புதிதாக குடிவந்திருக்கிற அம்மாளை ஏற்பாடு செய்திருக்கேன். பாவம் அவங்க விதவை - கடைத்தெருவில் நாலு கடையைக் கூட்டி சுத்தம்செய்து வாழ்றாங்க. அவங்களுக்கு ஒத்தாசை செய்தாப்பல இருக்கும். நமக்கும் அவங்க உதவி தேவைன்னு அந்த வேலைக்கு மாசம் கொஞ்சம் சம்பளம் தந்துடறேன். மத்தபடி சமையலை நானே செய்துக்கிறேன். ஒருவேளை சமைச்சா ராத்திரிக்கும் போதும்...''

''மூன்று வேளைகளும் விதவிதமாக உணவு தயாரித்து போட்ட மகராசி போயிட்டாங்களே... உங்க நிலைமை இப்படியாச்சா ஸார்... உங்களுக்கு வேண்டியதைத்தான் சமைப்பீங்க... என்னையும் சாப்பிடக் கூப்பிட்டா...'' தயங்கினான் அவன். ''நீ படிச்ச காலத்திலே வகுப்பிலே உங்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கொடுத்ததை ரொம்பவே மறந்து போயிருக்கே.''

''காலை உணவை நீ சாப்பிடு - பகல் உணவை நண்பனுடன் பகிர்ந்துகொள். இரவுச் சாப்பாட்டை விரோதிக்கு விநியோகம் செய்துவிடு. ஆரோக்கியமாக நூறாண்டு காலம் வாழ இதுதான் வழி.''

சுந்தரம் அந்தப் பள்ளிக்கூட நாட்களை நினைத்துக் கொண்டான். நகைச்சுவையோடு பேசி வகுப்பில் கலகலப் பூட்டிய வாத்தியார் மீது மாணவர்களுக்கு ரொம்ப மதிப்பு இருந்தது.



வாத்தியாருக்கு மற்ற மாணவர்களைவிட அவன் மீது பிரியம்.

சொந்த மகனைப்போல அவனைக் கவனித்துக் கொண்டார். புத்தகங்களிலிருந்து அவன் வயிற்றுத் தேவை வரை வாத்தியார் சிரத்தை எடுத்துக்கொண்டதைத்தான் மறக்க முடியுமா? அவர் உதவியால் படித்து பத்தாவது தேறி - அருகிலிருந்த கல்லூரியில் உபகாரச்சம்பளத்தில் பி.ஏ. பட்டம் பெற்று... அவர் யோசனைப்படி ஸர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதி வெற்றிபெற்றபோது, அவன் எப்படி ஆனந்தத்தில் பூரித்துப் போனான் - வேலை வந்து வாசலில் காத்துக் கொண்டிருந்த சமயம் அந்தப் பேரிடி அவனது வாழ்க்கையில் விழுந்தது. ஒரே நாளில் கொலைகாரனாக மாறி... கண்களில் புரண்ட கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டு பின்னால் சென்று கையைக் கழுவிக்கொண்டு வந்தான்.

மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த நாளேட்டைப் பிரித்து பசுமையாக இருந்த இலைகள் இரண்டை எடுத்து சமையலறை தரையில் வாத்தியார் விரித்தார். தாமும் கை கால்களைக் கழுவிக்கொண்டு அடுப்பு மேடைமீது வைத்திருந்த பாத்திரங்களையும் கரண்டிகளையும் அருகில் எடுத்து வைத்துக்கொண்டார். ''காலையில் நான் சமைச்சது - ஆறிப் போயிருக்கும். ஆனால், அம்மா சமையலைப்போல நல்ல ருசியாகவே இருக்கும். உட்கார்ந்து நிம்மதியா சாப்பிடு...'' அன்போடு அதட்டிவிட்டு... சோற்றை அள்ளி இலைகள் மீது பகிர்ந்து வைத்து... குழம்பை ஊற்றினார்.

''உங்கள் கணிப்புப்படி, நான் இப்போது உங்கள் நண்பன் இல்லையா?'' என்று சிரித்த சுந்தரம் உட்கார்ந்து சாதத்தை குழம்புடன் கலந்துகொண்டு ஒருவாய் சாப்பிட்டவன், மேலுக்குச்சிரித்தானே ஒழிய... துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது. தொண்டைவரை போன சாதத்தை

விழுங்க முடியாதுபோல் தவித்தான். தண்ணியைச் சாப்பிடு... என்று அருகிலிருந்த தண்ணீர் டம்ளரை அவனருகே... நகர்த்தி வைத்தார் வாத்தியார். அவர் முன்னைவிட உருவத்தில்தான் மாறிப்போயிருந்தார். எப்பொழுதுமே மெலிந்த தோற்றமுடையவர் - இப்போது காய்ந்துவிட்ட குச்சிபோல... காணப்பட்டார். கன்னங்கள் உள்ளடங்கி தலை வெளுத்து - முகத்திலே சுருக்கங்களுடன் தெரிந்தார்.

ஆனால், அவனிடம் அவர் காட்டிய அன்பு துளிகூட மாறவில்லையே? சோற்றைத் தின்று கையைக் கழுவிக் கொண்டு அவருக்கு உதவியாகப் பாத்திரங்களைக் கழுவிக் கொடுத்துவிட்டு வாசலில் வந்து அவருடன் உட்கார்ந்து கொண்டான் சுந்தரம். ஆனால், அவனால் ஆவலை அடக்க முடியவில்லை.

''கடைத்தெருவில் நடந்த கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும். என் தந்தை காயப்பட்டு கீழே விழுந்தப்போ ஒரு பெண்மணி வந்து அவரைத் தூக்கி... வீட்டுக்குக்கூட்டி போனாங்க... அவங்க...?'' நிறுத்திவிட்டு வாத்தியார் முகத்தைப்பார்த்தான்.

''அவங்கதான் உன் சின்னம்மா யோகவதி!''

''சின்னம்மாவா?...''

''பதறாதே. விஷயத்தை முழுவதும் கேள். உன் தந்தை இப்போ ரொம்பவே மாறிவிட்டிருக்கிறார். குடிக்கிறதைக் கைவிட்டுவிட்டார்னா உனக்கு அதிசயமாக இருக்கும்.''

''அப்பா மறு கல்யாணம் செய்துகொண்டதைக் கேட்கவே அதிசயமாக இருக்கு.''

''அது உன் தந்தை செய்தது பிசகல்ல. யோகவதி பக்கத்து ஊரைச் சேர்ந்த பெண். சின்ன வயசில் விதவையாகிவிட்டாள்.



அவளை யாரோ மறு கல்யாணம் செய்துக்கிறதா ஆசைகாட்டி நகை நட்டுடன்கடத்திக்கொண்டு - ரயிலடியில் அவள் பெட்டி பணத்தோட மறைஞ்சு போயிட்டான். அந்த அவமானத்தைத் தாங்க முடியாமெ அவ தற்கொலை செய்துக்க நம்ப கோயில் கிணற்றைத் தேடி அதில் விழப்போனவளை... குடி போதையில அதன் அருகே படுத்துக்கிடந்த உன் அப்பா நிதானத்தை அடைந்தவர் எழுந்து சட்டுனு பிடிச்சுக் காப்பாத்தி விட்டார்.''

''அவள் ஒரு விதவை. அப்பா மனைவியை இழந்தவர் சரியான பொருத்தந்தான்.''

''அப்படி மனக்கசப்போட பேசாதே. நாகப்பன் வந்து விஷயத்தைச் சொல்லி, என் ஆலோசனையைக் கேட்டார். ஊர் பஞ்சாயத்து கூட்டி நடந்ததைச் சொன்னோம். உன் தந்தை அவளைக் கட்டிக்கிட்டு வச்சுக் காப்பாத்தணும்னு பஞ்சாயத்து தீர்ப்பு சொல்லியது...''

''இந்த வயசிலே அப்பாவுக்கு ரெண்டாம் கல்யாணமா?''

''உன் சின்னம்மா... சாதாரணப் பெண்ணில்லை. நல்ல உழைப்பாளி'' வரும்போது உங்க நிலத்தைப் பார்த்திருப்பியே பசேல்னு எப்படி.''

''இனி கொஞ்சது. நிலத்திலே நான் முழுவதும் பாடுபட்டு காய்கறி பலதும் பயிர்செய்து அதுகளை நகரத்து மார்க்கெட்டில் வித்து பணத்தைப் போட்டு வீட்டைச் சீர்திருத்தியதோடு உன் அப்பாவின் குடிப்பழக்கத்தை நிறுத்தி அவரை ஒரு மனிதனாக மாத்தியிருக்கா. ஒரு தடவை ஒருவன்கிட்டே ஏமாந்து போனதாலோ என்னவோ அவ ரொம்பத் துணிச்சலான பெண்ணாக மாறிவிட்டாள். ஒரு கையிலே கொடுக்கருவாளும் இன்னொரு கையை இடுப்பிலும் வச்சுக்கிட்டு அவநின்னா... ஊர் ஆம்பிள்ளை

அத்தனை பேரும் பயந்து நடுங்கிப் போயிடுவான். காளியாத்தா வந்து பெண் உருவிலே நிக்கிறாப்பல ஒரு தோற்றம். ரொம்ப நெஞ்சழுத்தக்காரி. ஆனால் நல்லவ... எங்க வயல்மேலே ரொம்பக் கடன் இருந்திச்சே, அது?''

''அதுதான் எனக்குத் தெரியலை. உன் சின்னம்மா வந்து வீட்டில் புகுந்த பிறகு சில நாட்களில் அந்தக் கடனை யாரோ அடைக்க உதவிட்டாங்க. இப்போ உன் அப்பா வீடும் வாசலுமா மனைவியோட நிலத்திலே பாடுபட்டுக் கொண்டு ரொம்ப நல்ல மனிதனாக மாறிட்டார்.'' ''அவர் எப்படியா னால் எனக்கென்ன? அந்த வீட்டுப் பக்கம் போகவோ, என் தந்தையின் உறவைப் புதுப்பிக்கவோ எனக்கு எண்ண மில்லை.'' ''சுந்தரம் நீ ரொம்ப வெறுப்போட பேசற.''

''என் வெறுப்புக்கும் வேதனைக்கும் காரணம் இருக்கு இல்லையா?... உங்களுக்குத் தெரிஞ்ச கதைதானே ஸார். இந்த அப்பனாலே நான் கொலைகாரனாகி எட்டரை வருஷம் ஜெயிலில் இருந்தவன். படிப்பை இழந்தவன். என் இளமையின் ஒரு பகுதியைப் பறிகொடுத்தவன். ஊரார் முன்னால் மாஜி கைதி என்கிற பட்டத்தோடு நிற்கிறவன்...'' படபடவென்று பேசிய சுந்தரம் திடீரென்று விகம்பி விகம்பி அழ ஆரம்பித்தான்.

''சுந்தரம்! நீ இப்படி மனதைத் தளரவிடக்கூடாது. நீ படிச்ச ஆண்பிள்ளையாச்சே'' கையில் எடுத்த வெற்றிலையைப் பெட்டியில் போட்டுவிட்டு எழுந்து வந்து அவனை அணைத்துக்கொண்டு அருணாசலம் ஆறுதல் சொன்னார். ''வாத்தியார் அய்யா... உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா நான் உங்களோட இங்கேயே இருந்துடறேன்'' கண்களைத் துடைத்துக்கொண்டு பரிதாபமாக அவன் கேட்டபோது அருணாசலம் மனம் கரைந்து போனார்.

''சுந்தரம்! நீ எத்தனை நாள் வேணுமானாலும் என்னோடு இருக்கலாம். ஆனால், ஒருநாள் இல்லாட்டா



ஒருநாள் உன் தந்தையை அணுகிப் பேசி அவரைப் புரிந்துகொள்ள முயலவேண்டும்.''

''ஆகட்டும் பார்க்கலாம்...'' என்றான் சுந்தரம். தந்தையைப் பார்த்து பேசுமுன், அவன் கௌரியைப் பார்த்து பேசவேண்டும். அதை வாத்தியார் அய்யாவிடம் எப்படிச் சொல்வான்?

நெற்றியில் பட்டையான விபூதி, சலவையிலிருந்து எடுத்த மல்ஜிப்பா வேட்டி, தோள்மீது சரிகை உத்ரீயம் கழுத்திலே தங்கச் சங்கிலி, முருகன் உருவம் பதித்த டாலர் - என்ற அலங்காரத்தில் நமச்சிவாயம் தங்கள் வீட்டு வாயில் திண்ணையில் உட்கார்ந்திருந்தான்.

பெரிய தனக்காரர் சிவஞானத்தின் மகன் என்ற தகுதியைத்தவிர, அவனுக்கென்று அதிகம் எதுவும் கிடையாது என்பதைக் கிராமமே அறியும். ஆனாலும் பணமிருக்கும் அகந்தை மனிதனைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது. பத்து வகுப்பு படித்து முடிக்குமுன் பல தடவைக் குட்டிக்கரணம் போட்டவன். தங்கை பி.ஏ. பட்டதாரியாகி விட்டதை அறிய உள்ளூரப் பொறாமை, அத்துடன் கிழவர் சிவஞானம் பிராணனை விடும்முன், எழுதிவைத்த உயிலின்படி பாதி சொத்துக்கு அவளும் பங்குதாரர் என்ற ஆத்திரமும் அவனுக்குள் அனலாகச் சுழன்று கொண்டிருந்தது.

உள்ளேயிருந்து மனைவி பொன்மணி ஒரு டம்ளரில் காபியும், தட்டில் நெய் முறுக்கும் எடுத்து வந்து திண்ணை மீது அவனருகில் வைத்தாள்.

''ஆமாம் பகல் சாப்பாட்டுக்கு வந்தப்போ முகத்தை தொங்சப் போட்டுக்கிட் டிருந்திங்களே அது ஏனாம்?'' மெல்ல விசாரித்தாள்.

''நம்ம நிலத்துக்கு நடுவிலே நெரிஞ்சிமுள்போல நாகப்பன் நிலம் ஒரு துண்டு இருந்துகிட்டு காலமுச்சுடும்

எனக்குக் கவலையைக் கொடுத்துக்கிட்டு இருக்கிற தில்லையா. அந்த நிலத்து மேலே நாகப்பன் நம்ப மூலைக் கடை செட்டிகிட்டே கழுத்து முட்டும் கடன் வாங்கி யிருந்தான், செட்டியாருக்கு பத்து ரூபாய் கூடக்கூடுத்து... அடமானத்தை நான் எடுத்துக்கிட்டு... ஏலத்துக்கு கொண்டு வந்து அதை நமக்கு முடக்கிடலாம்னு திட்டம் போட்டிருந் தேன். வரப்போ செட்டியாரை விசாரிச்சப்போ பகீர்னு ஆயிட்டுது. முந்தாநேத்தி அவன் மொத்த கடனையும் தீர்த்து விடுதலைப் பத்திரம் வாங்கிக்கிட்டானாம். பக்குனு போயிட்டுது எனக்கு. ஏதாவது புதையல் எடுத்தானா? இவனுக்கு ஏது பணம்? லாட்டரி சீட்டு விழுந்துச்சா! அப்படியிருந்தா பேப்பர்லே போட்டிருப் பாங்களே... ஒரு சமயம் இவன் கட்டிகிட்டிருக்கிற அந்த முண்டச்சி நகை நட்டுகளை வித்துக் கொடுத்தானா?''...

''எல்லாம் உங்கப்பா செய்த வேலை. அவர்தானே இந்த ஊருக்குப் பஞ்சாயத்துத் தலைவர். அவர் தலைமையிலே ஊரைக்கூட்டி அந்த வாத்தியார் அந்த முண்டச்சியை திருத்திவச்சு சனங்ககிட்ட ஒப்புதல் வாங்கி அவனுக்கு நடுவூட்டு தாலி கட்ட வச்சுட்டார்.''

''எங்கப்பா மேலே குறை சொல்றீங்க. உங்க மேலே ஆயிரம் குறை சொல்ல, வேண்டியப்பட்டது என் மனசில் இருக்கு. உங்க தங்கச்சி ஊர்மாடு போலத் திரியரா. அவளை உங்களாலே அடக்க முடியலை.

பொன்மணி கோபத்துடன் சீறினாள்.

''நான் என்ன செய்வேன். அவள் ஒருத்தனையும் கட்டிக்க மாட்டேங்கிறா, அந்தப் பாவியை நினைச்சிட்டு உருகறா... உனக்கு சங்கதி தெரியுமா? அந்த சண்டாளன் ஜெயிலிருந்து திரும்பிட்டான்!''

''அட கண்றாவியே! சட்டுபுட்டுனு... உங்க தங்கச்சியை ரெண்டாந்தாரமாகவாவது எவனுக்காவது கட்டி வைக்கப்



பாருங்க. கல்யாண வயசு தாண்டியவளை... சின்ன வயசுக்காரனாக எவன் வந்து கட்டுவான்? நான் வற்புறுத்தினா கிணற்றிலே விழுந்துடுவேன்னு பயமுறுத்தறா... ஆமா அவ இப்போ எங்கே... இன்னொரு முறுக்கை நொறுக்கினாள். அதென்னவோ முதியோர் கல்வியாமே உங்கப்பா அவமேலே எழுதிவச்சு கடைத்தெரு வீட்டிலே போனவாரம் அந்த வாத்தியார் ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்து வச்சாரே. ஊரிலே இருக்கிற கிழக்கட்டைகளுக்கு இவ பாடம் கத்துக்குடுக்க போயிருக்கா...''

அந்த வாத்தியார் பயல் வேலை இதெல்லாம். கையெரிய அவனா சம்பாரிச்சான். எங்கப்பன் சொத்து அந்த வீடு மண்டையைப் போடறத்துக்கு முந்தி அவ மேலே எழுதி வச்சுட்டார். அந்த திமிறு அவளுக்கு'' பற்களைக் கடித்தான் நமச்சிவாயம்.

''ஒரு கல்யாணத்தைச் செய்து வச்சுட்டா அவகொட்டம் அடங்கிடும் பார்த்துக்கிட்டேயிருங்க.''

பொன்மணி பேசி முடிப்பதற்குள் காலடிச் சத்தம் கேட்டது. அந்த முரடர்கள் மூவரும் கையைக் கட்டிக்கொண்டு பணிவுடன் நமச்சிவாயம் எதிரில் வந்து நின்றார்கள்.

நீங்க மூணுபேர் அந்த ஜெயிலுக்குப் போய்ட்டு வந்த நாய்கிட்ட அடி வாங்கினீங்களாமே எனக்கு மானமே சிந்திப்போச்சி. கோபத்துடன் காபியைப் பருகினான்.

''பொன்மணி இவங்களுக்கு தாகத்துக்கு காபியும் திங்க முறுக்கும் கொண்டு வந்துகொடு.''

உத்தரவிட்டான்.

''அண்ணாச்சி... இப்பக்கூட ஒண்ணும் மோசமா கிடலை... கடைத்தெருவே நம்ம பக்கம் சாட்சி சொல்ல இருக்கே. இந்த ஊருக்கு மாத்தலாகி வந்திருக்கிற

சப்-இன்ஸ்பெக்டர் தெளிவுகளுவு தெரியாத சின்ன வயசுக்காரர். ஊர் புதுசு....'' சிரித்தான் வீரத்தேவன்.

''உங்களை சுந்தரம் பயல் அடிச்சுக் காயப்படுத்தினான். அவன் விடுதலையான ஒரு கொலைகாரன்னு போய் ஒரு புகார் கொடுங்க.'' ஏவிவிட்டான் நமச்சிவாயம்.

நேர்மையாகத் தன் உத்தியோகத்தைக் கவனிக்க அந்த ஊரில் வந்து வேலையை மேற்கொண்ட இரண்டாவது நாளே ஒரு அடிதடி கேஸ் எ'றதும் ராமதுரை உஷாராகினான். நேரே அதைக் கவனிக்க புறப்பட்டான். வாத்தியார் அருணாசலத்தின் வீட்டு வாசலிலே போலீஸ்காரர் வந்து நின்றதுமே தெரு கூடிவிட்டது. உள்ளேயிருந்து வந்து வணக்கம் தெரிவித்தார் வாத்தியார் ஐய்யா.

''விடுதலையாகி வந்திருக்கிற சுந்தரம் உங்களோட தானே தங்கியிருக்கிறார்?'' உத்யோக தோரணையில் கேட்டான் ராமதுரை.

''ஆமாம் - இப்போ கடைத்தெரு வரை போயிருக்கான். உட்காருங்க வந்துடுவான்.''

''அவசியமில்லை. அவனுடன் நீங்களும் ஸ்டேஷனுக்கு வரனும். ஒரு கேஸ் சம்பந்தமாக விசாரிக்கனும்'' உத்தரவிட்டுவிட்டு வேகமாக நடந்தான்.

''சுந்தரம் நான் நினைச்சபடி ஆச்சு... வா... போவோம்'' என்று புலம்பிக்கொண்டு... வாத்தியார் அவனுடன் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார். அங்கு அந்த முரடர் மூவருடன் நமச்சிவாயமும் வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். மறுபடியும் சுந்தரத்தை... சிறைக்கு அனுப்ப இவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்ற நினைவில் அவர் மிகவும் ஆடிப்போனார். வந்ததும் வராததுமாக இப்படியா விபரீதம் நடக்கனும்?



நேற்று காலை ஆறுமணிக்கு நீங்க... இவங்களோட வம்புச் சண்டைப்போட்டு... காயப்படுத்தியிருக்கிறீங்க. காசிநாதன் தேநீர்கடை முன்னால் சண்டை நடந்திருக்கு. வீரத்தேவன் அவர்களின் உப்பிய இடது கன்னமே சண்டை ரொம்ப அதிகமாயிருப்பதைக் காட்டுகிறது. உங்க மேலே இவங்க புகார் கொடுத்திருக்காங்க... அதுக்கு உங்க பதில்... சப்-இன்ஸ்பெக்டர் ராமதுரை கடுமையான குரலில் கேட்டான்...

நேற்று மாலை ஆறு மணிக்கு நான் கடைத் தெருவில் இல்லை என்கிறேன் சார்.

நேரே பாத்தவங்க பலர் இருக்கும்போது இல்லைன்னா என்ன அர்த்தம். நான் அது சமயம் வேறே இடத்தில் இருந்தேன் என்கிறேன்.

அதை உங்களால் நிருபிக்க முடியுமா?

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு அவன் வாத்தியார் ஐயாவைப் பார்த்தான்.

நீங்கள் அதற்கு சாட்சி சொல்ல முடியுமா? ராமதுரை அருணாசலத்தை உறுத்துப் பார்த்தார்.

உண்மையே பேசவேண்டும் என்று குழந்தைகளுக்கு போதித்து நேர்மையாக வாழ்ந்து கொண்டிருக்கும் வாத்தியார் அவனுக்காக பொய் சொல்ல முடியுமா? எனக்குத் தெரியாது. ஆறு மணிக்கு அவன் என்னுடன் வீட்டில் இல்லை...

அப்படின்னா - கடைத்தெருவில் சண்டை போட்டுக் கொண்டிருந்தார் இல்லையா?

இல்லை... இல்லை... அழுத்தமாக உரத்த குரலில் கோபத்துடன் கூறினான்.

இல்லைன்னா போதாது. சாட்சி தேவையாச்சே.

நான் சாட்சின்னா ஒப்புக்குவீங்களா? இனிமையாகப் பின்னாலிருந்து வந்த ஒரு பெண்ணின் குரல் அவர்கள்

அனைவரையும் திடுக்கிடச் செய்தது. எல்லோரும் திரும்பிப் பார்த்தனர்.

கௌரி நீயா...? என்று அதிர்ச்சியுடன் கேட்டான் நமச்சிவாயம். ஆமாம் நான்தான். விஷயம் கேள்விப்பட்டு ஓடி வந்தேன். சப்-இன்ஸ்பெக்டர் ஸார், இவர் என்னுடைய நண்பர். விடுதலையாகி வந்திருப்பது எனக்குத் தெரியும். ஜெயிலுக்குப் போகுமுன் வழக்கமாக இவரை நான் சந்தித்துப் பேசும் போது வாய்க்கால் கரை ஓரத்தில் கொன்றை மரத்தின் அருகே நேத்து ஆறுமணிக்கு இவரோட பேசிக் கொண்டிருந்தேன். நாங்க ரெண்டு பேரும் மரத்தடியிலே உட்கார்ந்திருந்ததை பல உழவர்கள் பார்த்துக்கிட்டே போனாங்க. அவங்களை நீங்க யாரை வேண்டுமானாலும் கூப்பிட்டு விசாரிச்சு தெரிஞ்சுக்கலாம்.

'படார்' என்று நமச்சிவாயம் ஓங்கித் தன் தங்கையின் கன்னத்தில் அடித்ததைக் கண்டு எல்லோரும் திகைத்துப் போயினர்.

இந்த அயோக்கியனோட மறுபடியும் காதல் நாடகமா ஆடுறே நீ? என்று பற்களைக் கடித்துக்கொண்டு, மறுபடியும் அவன் கையை ஓங்கியபோது ராமதுரை சட்டென்று அவன் கரத்தைப் பிடித்துக்கொண்டு விட்டான்.

இது உங்க வீட்டுக்கதை. இதைப்பத்தி விசாரிக்க உங்களை நான் இங்கு வரவழைக்கலை... இந்த மூணுபேரும் பொய்க்கேஸ் ஜோடிச்சு கொண்டு வந்திருக்காங்க. ஒரு மனிதன் தவறு செய்து ஜெயிலுக்குப்போக நேரிட்டால்... ஆயுள் பூரா அவன் குற்றவாளியல்ல. மறுபடியும் அவனுக்கு மறுவாழ்வு தர அரசு பல முயற்சிகள் மேற்கொள்கிறது. ஊரிலே பெரிய மனிதரா இருக்கிற நீங்க... இந்தப் பொய்பித்தலாட்டக் காரங்களோட கூட்டு சேர்ந்துகொண்டு இந்த மனிதருக்கு தீங்கு நினைக்கிறது நல்லாவேயில்லை.



உங்க தகுதிக்கு ரொம்ப இழுக்கு என்று நமச்சிவாயத்தைச் சாடினான்.

முகம் சிவந்து வெட்கத்தில் குறுகிப்போன நமச்சிவாயம் வேகமாக முதலில் வெளியேறினான்.

பொய்க் கேஸ் ஜோடிப்பது அனாவசிய அடிதடிகளில் கலந்துகொள்வது என்பதை இன்றோட விட்டுடுங்கோ. உங்க பேரை வேறு எந்தக் கேசிலாவது நான் போட்டால் பொல்லாதவனா இருப்பேன் என்று அந்த மூவருக்கும் எச்சரிக்கை விடுத்தான் ராமதுரை. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு அவர்கள் நகர்ந்ததும் அவன் புன்முறுவலுடன் கௌரி பக்கம் திரும்பினான்.

தாங்க்யூ அம்மா. உங்களைப்போல பெண்கள் உண்மையைச் சொல்ல துணிவோடு முன் வந்தால் எங்கள் வேலை சுலபமாகிவிடும் என்றான்.

கௌரியை நன்றியுடன் பார்த்துவிட்டு... மௌனமாக சுந்தரம் வாத்தியாருடன் வெளியேறினான்.

சூரியன் உச்சியைத் தொட்டுவிட்ட பகல் பொழுது - வாத்தியார் உள்ளே சமையலுடன் திண்டாடிக் கொண்டிருந்ததை அறியாது கல்லாய் சாய்ந்து உட்கார்ந்த சுந்தரம் திடுக்கிட்டு எழுந்தான்.

அது என்ன வாசனை? ''என்ன அப்படி பார்க்கிற - வெங்காயக் குழம்பு வெச்சேன் மணம் வீட்டைத் தூக்கு தில்லையா?... சுந்தரம் சாப்பிடலாமா'' ஒன்றிலுமே பட்டுக் கொள்ளாது வாத்தியார் அருணாசலம் அவனிடம் நாசூக்காக நடந்து கொள்வதை அறிந்து குற்றவுணர்வுடன் எழுந்தான்.

அவரிடம்கூட ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், அவன் முதல்நாள் மாலை வெளியே நடந்தான். அந்த வாய்க்கால் கரையோரம் சென்று உட்கார்ந்து பழைய நினைவுகள் மனதை வருடினால் துன்பம் குறையும் என்ற எண்ணத்துடன்.

மாடுகள் மேய்ந்த பின் யந்திரத்தால் புல்லை வெட்டி விட்டது போன்று சமமாகப் பசும்புல் பாயாக விரிந்து கிடந்த கரை மீது கொன்றை மரத்தடியில் உட்கார்ந்தபோது நெஞ்சை ஏதோ உருண்டையாக அடைத்துக்கொண்டுவிட்டது போன்ற துயரம். அடிவானம் சிவந்துகொண்டு வந்தது. எதிர்க்கரையில் உழவர்கள் கலப்பை - மாடுகளுடன் வீடு திரும்பும் அதே காட்சி தெரிந்தது. அண்ணாந்து பார்த்தான். கொன்றைப் பூக்கள்... மஞ்சள் சரமாகக் கிளையினின்று தொங்கிக் கொண்டிருந்தன. காற்றில் அசையும் போதெல்லாம் சில இதழ்கள் உதிர்ந்து அவன் தலைமீதும் தரை மீதும் விழுந்தன. ''மலர் தூவி என்னை வரவேற்க நீயாவது இருக்கிறே இல்லையா'' மரத்தைப் பார்த்துத் தானே பேசினவன் தரையில் கிடந்த மலர் இதழ்களைப் பொறுக்கிக் குவித்துக் கொண்டிருந்தான்... அந்த மரம் - பூக்கள் - வாய்க்கால்... என்று சுற்றிலும் அதே காட்சிதான். ஆனால், அவன்தான் இப்போது மாறிவிட்டிருக்கிறான்.

அப்போது அவன் ஒரு பட்டதாரி இளைஞன். தனக்காரரின் செல்ல மகளாக இருந்தாலும் அவளை உயிருக்குயிராய் நேசித்தான் - மணம்செய்து கொள்ள துணி விருந்தது. ஒளிமயமான எதிர்காலத்தை நினைத்துப் பார்க்கும் ஒரு அந்தஸ்துமிருந்தது.

ஆனால் இப்போது? அவன் மாஜி கைதி... அடுத்தநாள் சாப்பாட்டைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய பயங்கர நிலைமையில் தள்ளப்பட்டிருப்பவன். இப்போது அவள்?... கௌரி... கௌரி நீ எங்கே?

இரைந்து கூப்பிட வேண்டும் போன்ற ஓர் ஆவேசத்திலே அவன் ஒரு செடியின் இலையைப் பறித்துக் கசக்கிக் கொண்டிருந்தான். சருகுகள் மிதிபடு ஓசையைக் கேட்டு கலவரத்துடன் திரும்பினான்.



என்ன அதிசயம்? கௌரி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கனவா என்ற திகைப்பு அவனுக்கு கௌரி சுவாதீனமாக அவன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''கௌரி என்னால் நம்பமுடியலை. உன்னை நான் இங்கே சந்திப்பேன்னு நினைக்கலை.'' பிரமிப்புடன் அவளைப் பார்த்தான்.

''நான் உங்களை இங்கே கட்டாயம் சந்திப்பேன் என்ற உறுதியோடத்தான் வந்தேன்...''

''ஆமாம் கௌரி ஒரு கொலைகாரன் மறுபடியும் தான் கொலை செய்த இடத்தைப் பார்க்க விரும்பி வருவானாம். அதுபோல... இந்தக் கொலை...'' பேச முடியாது சுந்தரம் திக்கினான்.

''சுந்தரம்! உங்களை நான் அன்றும் கொலைகாரன்னு நினைக்கலே'' இன்றும் நினைக்கல. ஊருக்குத் திரும்பி விட்டீங்கன்னு எங்க வேலைக்காரி வந்து சொன்னப்ப, உடனே உங்களைப் பார்க்கணும்னு ஆவலில் துடிச்சப் போனேன். நீங்க கட்டாயம் இந்த வாய்க்கால்கரைக்கு வருவீங்கன்னு தெரியும். அதனாலே நான் தேடிக்கிட்டு வந்தேன். இதிலிருந்து நீங்க அதே சுந்தரம்தான்னு புரியலையா?

''பழைய சுந்தரம் நான் இல்லை கௌரி. எட்டரை வருஷம் சிறையில் காலம் தள்ளிட்டு வயதில் முதிர்ந்து ஊரார் கண்களில் இளப்பமாகக் காணப்படும் மாஜி கைதி.''

''சுந்தரம்! உங்களுக்குத்தான் வயது கூடியிருக்கா எனக்கும் கூடிவிட்டிருக்கு. நானும் அதே கௌரி இல்லை. நீங்கள் சிறையில் இருந்தபோது என்மனம் ஒரு சிறையில் அடைக்கப்பட்டிருந்தது. நானும் ஊரார் முன் இத்தனை வயதாகியும் கல்யாணமாகாது நிற்கிறாளேன்னு ஒரு பழியைச்

சுமந்துண்டு வாழறேன்...'' கண்கலங்கி அவள் புல்தரையில் விரல்களால் கிளறினாள்.

''நீ இன்னும் கல்யாணம் செய்துக்கலையா கௌரி. உன் அண்ணன் வற்புறுத்தியிருப்பாரே?'' வியப்புடன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் முன்னைவிட வயதில் கூடிவிட்ட முதிர்ச்சி முகத்தில் தெரிந்தது. ஆனால் உடல் இளைத்துவிட்டிருந்தாள் - கண்களில் துயரமும் ஏக்கமும் தெரிந்தன.

''பள்ளிக்கூட நாட்களிலிருந்து என்னிடம் பழகின நீங்கள் என்னையும் இன்னும் புரிஞ்சுக்கலையேன்னு சங்கடமா இருக்கு. எங்க தெருவில் கோடி வீட்டில் வசித்த என் தோழி சுமதியைத் தெரியுமில்லையா? அவ அப்பா அவளை மனம் பிடிக்காத ஒரு இடத்தில் கட்டிக்கச் சொல்லி வற்புறுத்தினார் - அவள் மூட்டைப்பூச்சி மருந்தைச் சாப்பிட்டுட்டு செத்துட்டா - அந்த விவகாரத்தில் ஊரே கொல்லுனு போயிருக்க, பெரிய தனக்காரர் மகள் அது மாதிரி செய்தா அவங்க வீட்டு கௌரவம் என்னாகிறதுன்னு அண்ணாவுக்குப் பயம்'' வறட்சியாகச் சிரித்தாள்.

''என்னை மணக்க நீ இன்னமும் ஆசைவச்சிருந்தா அதை மறந்திடு கௌரி. இந்த முடிவினால் உனக்கு எந்த நன்மையும் கிடையாது. இப்போ மாஜி கைதியா மக்கள் மத்தியில் வந்திருக்கேன். ஏன் வந்தேன்னு கேட்காதே. என் பிறந்த ஊர், வேறே போக்கிடம் கிடையாதுன்னு வந்தேன் - வாத்தியார் அய்யாகிட்டே யோசனை கேட்டு என் வாழ்வை ஒழுங்காக்கிக்க வந்தேன்... உன்னைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டேன். நீ வேறு ஒருத்தர் மனைவியாகிவிட்டிருந்தாலும் உன்னை வாழ்த்திட்டுப் போயிருப்பேன் கௌரி...''

''சுந்தரம், உங்க உயர்ந்த மனதிற்காக நான் உங்களை அன்றும் விரும்பினேன்; இன்றும் விரும்பறேன்.''



''மடத்தனமா பேசாதே கௌரி. இன்று நான் என்னையே காப்பாத்திக்க முடியாத ஒரு நிலையில் இருக்கேன். நான் ஒரு மனிதனாக தலைநிமிர்ந்து உன்னைக் கட்டிக்க வரப்போ, நீ கிழவியாகிவிடுவே! எனக்காக உன் இளமையை, உன் அழகான வாழ்வைப் பாழ் அடிக்கக்காதே.''

''அண்ணாபோல என்னை வற்புறுத்தாதீங்க - மறுபடி என்னை உயிரோட பார்க்க மாட்டீங்க - சரி இந்த தர்க்கம் என்னத்துக்கு? பிறகு பேசுவோம். இப்போ நான் சூடா உங்களுக்காக எடுத்துக்கிட்டு வந்திருக்கிற தோசைகளைச் சாப்பிடுங்க.''

''உன் அண்ணன் வீட்டுப் பொருள் எதுவுமே எனக்கு வேண்டாம் கௌரி.''

''அது எனக்குத் தெரியும் சுந்தரம். அதனாலே என் காசைப் போட்டு எங்க தெருவிலே தோசை சுட்டுவிக்கும் மருதாயிகிட்டேயிருந்து இதுகளை வாங்கிட்டு வந்தேன். பசியா இருப்பீங்கன்னும் எனக்குத் தெரியும் - சாப்பிடுங்கோ'' என்று கூறியபடி கையில் சுருட்டிக்கொண்டு வந்த காகிதப் பொட்டலத்தை புல் தரை மீது விரித்தாள்.

அன்று பகல் வாத்தியார் அளித்த உணவு அவனது அரை வயிற்றுக்குக்கூட காணவில்லை. அவனுக்கு நல்ல பசிதான். ஆவலுடன் தோசையைப் பிட்டு சட்டினியில் தொட்டு வேகமாக விழுங்கினான். வாய்க்கால் தண்ணியைத் தாகந்தீர அள்ளிக் குடித்தான். பிறகு வெகுநேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். சிறை வாழ்க்கையைப்பற்றி அவன் விவரித்ததைக் கேட்டு - கௌரி விம்மி அழுதுவிட்டாள். ''இருட்டிக்கொண்டு போகுது கௌரி - நீ வீட்டுக்குத் திரும்புவது நல்லது'' என்று அவளை அனுப்பிவிட்டு எழுந்தான். கௌரி தானே அவனைக் காண வந்தது பற்றி மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது. தெம்பாகவும் இருந்தது.

''என்ன ரொம்ப யோசனையா இருக்கே? குழம்பு எப்படி இருக்குதுன்னுகூட ஒரு வார்த்தையைக் காணோமே'' அருணாசலம் கேட்டுவிட்டு எழுந்தார்.

உணவுக்குப்பின் வாசலில் வந்து உட்கார்ந்தபின்தான், அவன் பேச ஆரம்பித்தான்.

''கௌரி வந்து போலீஸ் ஸ்டேஷனில் எனக்காக சாட்சி சொன்னதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க ஐயா?''

''என்ன நினைக்கிறது? அவள் உன்னை ரொம்ப நேசிக்கிறாள்.''

''வாத்தியார் அய்யா... நீங்க நல்லா யோசிச்சு சொல்லுங்க. கௌரியைக் கட்டிக்க எனக்கு என்ன தகுதி இருக்கு?''

''சிறைதண்டனையை முடிச்சிட்டு வெளியே வந்தப்பவே உனக்கு ஒரு மறுபிறவி ஆரம்பிச்சிருக்கு. பழைய ஏட்டை மூடிட்டு புது ஏட்டைப் புரட்டு. உன்னை அப்படி தகுதி உடையவனாக செய்துக்க முயலக்கூடாதா?'' உங்ககிட்ட கேட்கணும்னுதான் நினைச்சேன். நினைப்பூட்டிட்டீக என்று கூறிவிட்டு எழுந்தான்.

ஆணியில் மாட்டியிருந்த தன் சட்டைப்பையிலிருந்து அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தான். வாத்தியார் சார் - சொன்னால் கதை போலிருக்கும். ஜெயிலுக்குப்போன இடத்தில் அத்தனை கஷ்டங்கள் நடுவே எனக்கு ஒரு நல்ல நண்பர் கிடைச்சார். அவர்கிட்ட அச்சுத்தொழில் கத்துக் கொண்டிருக்கேன் - எனக்கு முதல் கொடுத்து உதவக்கூட இவர் முன்வந்திருக்கிறார்... கடிதத்தைப் படிச்சுப் பாருங்க'' என்றான் பணிவுடன்.

''பரவாயில்லை... கருப்பு மேகங்களின் ஓரத்திலே சில சமயம் வெள்ளி விளிம்பு தோன்றுவதுண்டுன்னு சொல்வாங்க - நாளைக்கு நாம சிங்கநல்லூர் வக்கீல் வரதனைக் காணப்புறப்படுவோம் - சரிதானே'' என்றார்.



''வாத்தியார் சார்... கௌரியை அவ அண்ணா வீட்டிலே இன்று நடந்த நிகழ்ச்சிக்காக ஏதாவது இம்சை பண்ணுவாங்களோனு பயமாயிருக்கு.''

''ஊரிலே பஞ்சாயத்தும், நாலு நல்ல மனுஷர்களும் இருக்காங்க. நமச்சிவாயம் தன் இஷ்டத்துக்கு நடப்பதைப் பார்த்துட்டு சும்மா இருக்கமாட்டாங்க. எல்லாத்தையும்விட கௌரி ரொம்ப துணிவான பெண். அதனாலே நீ கவலைப் படாதே'' என்றார்.

ஆனாலும், அவன் மனதை அந்தக் கவலை நெருடிக்கொண்டிருந்தது.

சுந்தரத்திற்கு இப்போது வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டிருந்தது. சிங்கநல்லூரிலிருந்த அந்த சிறு அச்சகத்தில் வேலை பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டதிலிருந்து மனதிலிருந்த கசப்பு சிறிது மறைந்து தெம்பு ஏற்பட்டிருந்தது.

மறுநாளே அவனும் அருணாசலமும் சிங்கநல்லூருக்குப் புறப்பட்டுவிட்டிருந்தனர்.

வக்கீல் வரதன், தன் நண்பனின் கடிதத்திற்கு மதிப்பு கொடுத்தார். ஏற்கெனவே ஒருமுறை அவர் முருகேசனைப் பார்க்க சிறைக்குச் சென்றிருந்தபோது தெரிந்துகொண்ட தகவல்தான் அது. தமது மனைவியின் பெயரில் நண்பரைக் கூட்டணியாகக் கொண்டு ஆரம்பித்த அச்சகம் அது. கல்யாணப் பத்திரிகை, அனுமதி சீட்டுகள் - பிட் நோட்டீஸ், திருமண வெற்றிலைப் பாக்கு பைகள், வாழ்த்து மடல்கள் என்று அருகிலிருந்த கிராமத்து மக்களது தேவைக்கு உட்பட்டவைகளை அச்சடித்துக் கொடுக்கும் ஒரு சாதாரண அச்சகம் அது. ஆரம்பத்தில் ஒருசிறு தொகையை முதலாகப் போட்டு துவங்கிய தொழில் - நன்றாக வேரூன்றிக் கொண்டு நல்ல லாபத்தைத் தந்த சமயம் முருகேசன் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு சிறைக்கு சென்றுவிட்டார். நல்ல நாணயமான மனிதர். தொழிலில் திறமையானவர். கோபத்தைை அடக்க

முடியாது. மூர்க்கமாக ஒருவனைத் தாக்கப்போக, அது கொலை வழக்காகிவிட்டது. அவர் சிறைக்குச் சென்ற பின்னர் அச்சுத் தெரிந்த ஒரு ஆளை நியமித்து வரதன் அதை நிர்வகித்துவர மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நல்ல லாபம் வந்த போதிலும் அதை ஒழுங்காக நடத்திவர பல தொல்லைகள் அடிக்கடி வேலையாட்கள் அறிக்கை விட்டு விட்டு... நகரத்தில் தங்களது வாழ்க்கையைத் தேடிக்கொண்டு போய்விட்டனர். அதிக சம்பளம் கொடுத்து காலில் விழாத குறையாக சிலரைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள நேரிட்டது. இந்த முறை அச்சகத்தைக் கவனித்து வந்த தலைமைத் தொழிலாளி திடீரென்று மாரடைப்பால் போய்விடவே, வரதன் வேறு ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். சமயத்திற்கு சாமியே அனுப்பினாற்போல வந்த சுந்தரத்தை அவர் மகிழ்ச்சியோடு வரவேற்றார். வந்தவன் வயதில் இளைஞனாக இருந்த போதிலும் புதிதாக அவர் வாங்கிப் போட்டிருந்த இயந்திரங் களை சுலபமாக இயக்கத் தெரிந்து கொண்டிருந் தான். சிறைவாசம் அவனை ஒரு திறமையான அச்சகத் தொழிலாளியாக்கிவிட்டிருந்தது.

வக்கீல் வரதனிடம் முருகேசன் ஒப்படைத்துவிட்டுப் போயிருந்த மூவாயிரம் ரூபாய்கள் வட்டியுடன் ஐந்தாயிரத்துச் சொச்சமாகப் பெருகிவிட்டிருந்தது. அத்துடன் ஆரம்பத்தில் முருகேசன் போட்ட பங்குத் தொகை ஆண்டுதோறும் வந்த லாபத்தினால் கூடிவிட்டிருந்தது.

'சுந்தரம் சிறையிலிருந்து விடுதலையாகி வருகிறவன். அச்சுத் தொழிலில் தேர்ந்தவன். மாஜி கைதி என்று மனதில் நெருடல் ஏற்பட்டால் என் பங்குக்கு உண்டான பணமும் அந்த மூவாயிரத்தை வட்டியுடன் அவனிடம் தந்துவிட்டால் அவன் தனியே ஏதேனும் வியாபாரத்தை ஆரம்பித்துக் கொள்வான். மறுப்பு இல்லை என்றால் சுந்தரத்தை வேலைக்கு வைத்துக் கொண்டு அவனுக்கு மறுவாழ்வு தரும்படி கேட்டுக்கொள்



கிறேன். மீதி சங்கதிகளை நான் வெளியே வந்தபின் பேசி முடித்துக்கொள்ளலாம்.'

முருகேசனின் கடிதம் வரதனை யோசனையில் ஆழ்த்தியது. தொழில் பெருகி இப்போது முருகேசனின் பங்கு அதிகமாகிவிட்டிருந்தது. பாகப்பிரிவினை செய்தால் அவன் பங்குக்கு இருபத்தைந்தாயிரம் தரவேண்டியிருக்கும். அத்துடன் கூட போட்டு புரட்டிக் கொண்டிருக்கும் அந்த முதலையும் சேர்த்தால் வட்டியுடன்... எல்லாம் முப்பதா யிரத்தைத் தொட்டுவிடும். எனவே சுந்தரத்தை மறுப்பு இன்றி ஏற்பதுதான் தகுந்த செய்கை... என்றுதான் அவர் அவனைத் தமது அச்சகத்தில் வேலை பார்க்க சேர்த்துக்கொண்டு விட்டிருந்தார்.

அவன் உழைப்புக்கு மாதம் முன்னூறு ரூபாயும் வருஷ முடிவில் லாபத்தில் பங்கும், என்று அருணாசலத்தின் முன்னிலையில் ஒப்புக் கொண்டிருந்தார்.

சுந்தரம் வேலைக்குப் போக ஆரம்பித்து மாதங்கள் இரண்டு மறைந்தோடிப் போயின. ஆளும் வெகுவாக மாறிவிட்டிருந்தான். காலையில் எழுந்து குளித்து முடித்து விட்டு சுத்தமாக உடை உடுத்திக்கொண்டு... கடைத் தெருவிலே காப்பி, பலகாரத்தை முடித்துக்கொண்டு பஸ்ஸில் புறப்படுவான். சிங்கநல்லூர் நிறுத்தத்திலே நெடுஞ்சாலையில் இறங்கி ஊருக்குள் பொடி நடையாக விரைந்து சென்று அச்சகம் அடைந்துவிடுவான். அணிந்து வந்த உடைகளைக் கழற்றிவிட்டு... அச்சகத்து சீருடையில் அவன் வேலையை ஆரம்பித்தால்... பகல் உணவு நேரம்வரை அவனுண்டு வேலையுண்டு என்று உழைப்பான். பின்னர் அந்த தெருவில் கோடி வீட்டு குப்பம்மா நடத்தி வந்த சோற்றுக் கடைக்கு சென்று பகல் சாப்பாட்டை முடித்துக் கொள்வான்.

மாலை நாலுமணி அளவில் அச்சகத்தில் வேலை செய்த அத்தனை பேருக்கும் வரதன் மனைவி ஒரு அலுமினிய

கெட்டியில் சூடான தேநீர் அனுப்பி வைப்பாள். அவனும் ஒரு டம்ளர் தேநீரை ஊற்றிக் குடித்துவிட்டு உற்சாகத்துடன் அச்சகம் மூடும்வரை வேலை செய்துவிட்டு பின்னர் கைகால் முகம் கழுவிக்கொண்டு புறப்படுவான். ஊருக்கு திரும்பும் போது அவன் வெறுங்கையுடன் போவதில்லை. சிங்கநல்லூர் கடைத் தெருவிலிருந்த ஓட்டல் பக்கோடா தயாரிப்பில் பிரசித்தி பெற்றிருந்தது. ஒரு பொட்டலம் பக்கோடாவோ ஓமப் பொடியோ வாத்தியார் அய்யாவுக்கு வாங்கிக்கொண்டு போவதை மறப்பதில்லை.

''நான் என்ன குழந்தையா? தினத்துக்கும் ஏதாவது வாங்கிண்டு வரயே?'' அருணாசலம் அன்புடன் கடிந்து கொள்வார்.

இந்த வயசில் மனிதன் மறுபடியும் குழந்தையாகி விடுகிறான் என்று நீங்கதானே சொல்வது வழக்கம் என்று அவருடன்கூட சிரிக்கும்போது... அந்த சிரிப்பு இப்பொழு தெல்லாம் மனத்திற்குள்ளிருந்து நிறந்து வந்தது. மகிழ்ச்சியில் வெளிவந்தது ஒரு நிம்மதியில் - கலகலத்தது.

இரவு வாத்தியார் அய்யா அவனுக்காக ஒதுக்கி வைத்திருந்த சோற்றுடன் மோர் ஊற்றி சாப்பிட்டுவிட்டு... வாசலில் வந்து உட்கார்ந்து அவருடன் பேசினான். வாய்வலிக்க தன் வருங்காலத்தைப்பற்றி பலவும் பேசினான். நாட்கள் ஓரளவு நிம்மதியாக ஓடிக்கொண்டிருந்தன. ஆனால், சுந்தரத்திற்கு நிம்மதி உண்டா?... அந்த வகையில் குறுக் கிட்டாள். அவன் வாழ்வில் ரேவதி!

பத்தாம் வகுப்பு படித்துவிட்டு பருவப் பெண்ணான ரேவதி கல்யாணத்தை எதிர்நோக்கி வீட்டில் தங்கிக் கொண்டிருந்தாள். வக்கில் வரதனின் ஒரே செல்லப்பெண். ஒருநாள் தேநீர் கெட்டிலை எடுத்துக்கொண்டு அச்சகத்திற்கு வந்தாள். பார்வையில் சுந்தரம் பட்டுவிட்டாள்.



அச்சகத்தின் அருகில்தான் அவர்கள் வீடு இருந்தது. அச்சகத்தில் வேலைபார்த்த அனைவரையும் அவள் அறிவாள். ஆமாம் யார் இந்த ஆசாமி? பார்க்க பளிச்சென்று கருண்ட கிராப்பும் கூரான மூக்கும் - பளபளத்த கண்களுமாக?...

''உங்க பேர் என்ன?''

கேட்டவள் கெட்டிலில் இருந்து ஊற்றிய தேநீர் டம்ளர் நிறைந்து வழிவதைக்கூட கவனிக்காது வியப்புடன் நின்றாள்.

படித்தவன் போலத் தெரிகிறானே? மற்ற வேலை யாட்களின்று தனியாக... ஒளிவிடும் நட்சத்திரம்போல தெரிகிற இவனை அப்பா எப்பொழுது அமர்த்தினார்?...

சுந்தரம் சுருக்கமாகச் சொல்லிவிட்டு தேநீரை வேகமாகக் குடித்துவிட்டு தன் வேலையில் ஆழ்ந்து போனான்.

ரேவதி அப்படி விட்டு விடுவதாக இல்லை... மறுநாள் பகல் உணவு நேரத்தில் அச்சகத்தில் யாருமில்லாதபோது ஒரு ஸ்டீல் டப்பாவில் சோறும் குழம்பும் கலந்து சூடாக எடுத்து வந்தாள்.

''இப்பத்தான் எங்க வீட்டு சமையல் முடிஞ்சது. நேத்து நீங்க குப்பம்மா கடைக்கு சோறு திங்க போவதைப் பார்த்தேன். ஆமாம், உங்க மனைவி கையில் டிபன் ஏதும் கட்டிக் கொடுத்தனுப்பறதில்லையா! கேட்டபடி ஒரு துண்டு வாழை இலை மீது சோற்றை வழித்து வைத்து அவன் முன் நகர்த்தினாள்.''

''இதெல்லாம் என்னத்துக்குங்க?'' சுந்தரம் பயத்துடன் குழறினான். ''ஒரு வாய் சாப்பாடு... உங்களுக்குக் கொடுத்தால் நாங்க குறைஞ்சுட மாட்டோம்.'' சிரித்தபடி மண் கூஜாவி லிருந்த தண்ணீரை டம்ளரில் ஊற்றி அருகில் கொண்டு வந்து வைத்தாள். உடல் முழுவதும் சில்லிட்டுப் போன உணர்வில் அயர்ந்து போனான் சுந்தரம்

''அப்பா... நகரத்து கோர்ட்டுக்கு போயிருக்காங்க. அம்மா பக்கத்து கல்யாண வீட்டுக்குப் போயிருக்காங்க... அடடா நான் என்னை அறிமுகப்படுத்திக்கலையே... நான்தான் வக்கீல் வரதன் அவர்களின் மகள் ரேவதி. நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லலையே? உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?''

'எனக்குக் கல்யாணம் ஆகலை... நான் ஒரு தனிக் கட்டை. நீங்க இத்தனை சிரமம் எதுக்காக எடுத்துக்கிட்டீங்க? வேணாம். இந்தப் பழக்கம் வேணாம் என்று கூறிவிட்டு... சோற்றை வேகமாகச் சாப்பிட்டான். குழம்பு ருசியாகத் தானிருந்தது... ஆனால் அந்த இளம் பெண் அவனைப் பார்த்த பார்வை, அவளது பார்வை அவனுக்கு ருசிக்கவேயில்லை... வெற்றிலைபாக்கு போடற பழக்கமுண்டா?

அவள் வெகுளித்தனமாக சிரித்துக்கொண்டு நின்றதைக் கண்டு அவன் அச்சமடைந்தான். பெண் பனிச்சென்று தானிருந்தாள். ஆனால் அவனுக்குத்தான் காலில்பட்ட நெரிஞ்சி முள்ளாக வேதனையைத் தந்தாள்.

நமச்சிவாயம் தனது வில் வண்டியிலிருந்து இறங்கினான். காலை வேளை களத்து மேட்டிற்குப் போகக் கிளம்பியிருந்தவன் கண்களில் சுந்தரம் தென்பட்டுவிட்டான்.

சிங்கநல்லூரிலிருந்த அச்சகத்தில் அவனுக்கு வேலை கிடைத்து விட்டிருக்கிறது என்பதைப்பற்றிக் கேள்விப்பட்டான். ஆனால், ஆள் இப்படி ஒரேயடியாக மாறிவிட்டிருப்பான் என்று நினைக்கவில்லை. முன்னைவிட கன்னக் கதுப்புகளில் சதை கூடிவிட்டிருந்த சுந்தரம் சுத்தமான 'பாண்ட்' சட்டையில் ஏதோ ஒருபெரிய அலுவலகத்தின் உயர்மட்டத்து அதிகாரி போல மிகவும் கச்சிதமாகத் தெரிந்தான். அவனிடம் ஏற்பட்டிருக்கும் இந்த மாறுதலை தங்கை கண்டு விட்டால்...? மனம் ஆத்திரத்தில் எரிய களத்து மேட்டில் காவலாளி கோட்டை கொண்டு வந்து போட்ட கயிற்றுக்



கட்டிலில் தொப்பென்று உட்கார்ந்தான். யஜமானுக்கு என்று இறக்கி தயாராக வைத்திருந்த செவ்விள நீர் காய் ஒன்றைச் சீவி கண்ணாடி டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தான் கோட்டை. சுவையான அந்த இளநீரால் அவனது நெஞ்சிலே மூண்டு விட்ட பொறாமைத் தீயை அணைக்க இயலவில்லை...

''கோட்டை! உடனே நீ போய் கடைத்தெரு பக்கம்... நம்ப ஆளுகள் நின்னுகிட்டிருந்தா சீக்கிரம் கூட்டிவா'' என்று உத்தரவிட்டான். கொஞ்ச நேரத்தில் வரப்பின்மீது அடித்துப் புரட்டிக்கொண்டு அந்த மூவரும் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தனர்.

'யஜமான் கூப்பிட்டதாக...' என்று மிகவும் பவ்யமாக தோள் துண்டை கையிடுக்கில் அடக்கிக் கொண்டு கேட்டான் வீரத்தேவன்.

''முதல்லே தாகத்துக்கு இளநீர் சாப்பிட்டுவிட்டு பிறகு கேளுங்கள்'' என்று நாசூக்காக சிரித்தவன் கோட்டையைப் பார்த்தான். என் என்றால் எண்ணெயாக மாறிவிடும் கோட்டை சட்டென்று மூன்று தம்ளர்களில் செவ்விள நீரை ஊற்றி எடுத்துவந்து அவர்களுக்குத் தந்தான். பட்டை சாராயத்தை ருசித்த நாக்குகளுக்கு இளநீர் அத்தனை இனிக்கவில்லை. ஆனாலும் ஆண்டுக்கு இத்தனை என்று கைக்கூலி வாங்கிக் கொண்டு நமச்சிவாயத்தின் அடியாளாக பணிபுரியும் அவர்கள் அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள்.

''அப்படி முழிக்க வேண்டாம் வீரத்தேவா. அந்த புது காவல்துறை அதிகாரிக்கு உலக அனுபவம் அதிகம் கிடையாது. ரொம்பவே அலட்டிக்கிறார்... அடிதடி கேஸ்களில் நீங்க மறுபடி அகப்பட்டுக்கக் கூடாதுன்னு சொன்னார். அத்தனை தானே. உண்மையைச் சொன்னால் உங்களை அவர் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான்.

அந்த மூவரும் குழப்பத்துடன் விழித்தனர்.

''போடா பயங்காளிப் பசங்களா? சுந்தரம் வந்ததுமே நீங்க மூணு பேரும் கோழையாகிட்டீங்க... அவன் என்னடா அப்படி கராத்தே, குங்ஃபூ எல்லாம் கத்துட்டு வந்திருக்கான் - அவன்கிட்ட பயப்பட அவன் மேலே நீங்க யாரும் கைவைக்க வேண்டாம். நேரே அந்த வக்கீல் வரதன் வீட்டுக்குப் போங்க. வரதன் வீட்டில் இல்லாத நேரமா பார்த்துபோய்... அந்தம்மாளுக்கு உண்மையைச் சொல்லிட்டு வாங்கோ... அது போதும்...'' என்றான்.

''என்னமோ ஏதோன்னு நினைச்சுட்டு கொஞ்சம் தயங்கிட்டோம்...'' குழைவாகப் பற்களைக்காட்டி சிரித்த சங்கிலிக் கருப்பன்... மற்ற இருவரையும் நெட்டித் தள்ளிக் கொண்டு... வரோங்க ஐயா... வெற்றியோடு திரும்பறோம் என்றான்.

அவர்கள் தலை மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்த நமச்சிவாயம் ஆத்திரத்துடன் கீழே காறித் துப்பினான்.

''மடப்பசங்க... ஒரே அடியிலே கிழவன் கால் கையை ஒடிக்காம... வந்ததோட இல்லாம... நேரம் காலம் கவனிக்காம போலீஸில் தப்பா புகார் செய்துட்டு... என்னையும் அவமானப்படுத்திட்டீங்களே... உகும்... இந்த பயலுகளை சீக்கிரம் கழிச்சுக்கட்டணும். என் தலைக்கே நெருப்பு வச்சுடுவானுக... தனக்குள்ளே முணுமுணுத்தான்.

வரதனின் மனைவி... அம்மியில் குழம்புக்கு மசாலா அரைத்துக் கொண்டிருந்தாள். அடுப்பு வேலையை அப்படியே போட்டுவிட்டு மகள் ரேவதி தேநீர் கெட்டிலுடன் அச்சகத்துக்கு ஓடியது. அவளுக்கு மிக்க எரிச்சலைத் தந்தது. அவளும் கொஞ்ச நாட்களாகக் கவனித்து வருகிறாள். ரேவதி முன்போல வீட்டு வேலைகளில் கருத்தைச் செலுத்துவதில்லை. கதைப் புத்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு, படிக்கும் பாவனையில் நாளின் பெரும்பொழுது... முற்றத்து குறட்டில் உட்கார்ந்தபடி வானத்தையே வெறித்துப் பார்த்துக்



கொண்டிருக்கிறாளே! எத்தனையோ தடவை அவளும் சொல்லி விட்டிருந்தாள். இருட்டு வேளையில் மூணு சந்திகூடும் அந்தத்தெரு முகனையில் நிற்கக்கூடாது என்று படிச்சுப் படிச்சு சொல்லியிருந்தாள்.

காத்துக்கருப்பு, தோஷம் ஏதாவது இருக்குமோ!

அப்படி இருந்தால் தலையைக்கூட வாராது அலட்சிய ஆடையுடன் அலங்கோலமாக இருப்பாளே? அதற்கு பதில் இப்பொழுதெல்லாம் மிகவும் கருத்தோடு அலங்காரம் செய்து கொள்கிறாளே? ஒருநாள் கட்டிய சேலையை அடுத்தநாள் துவைத்து வைத்தபின்கூட அணிவதில்லையே? வேளைக்கு ஒரு அலங்காரத்தில் ஒப்பனையுடன் தலை கொண்ட பூவுடன்... தேநீர் கெட்டிலைத் தூக்கிக் கொண்டு மிகவும் உற்சாகத்துடன் அச்சகத்திற்கு ஓடும் மர்மம்?''

இத்தனை வயதாகியும்... அவள் மர மண்டைக்கு இது கூடவா புரியலை... அச்சகத்தில் அவள் மனதைக் கவரும் வாலிபன் யாராவது புதிதாக வேலைக்கு வந்திருக்கிறானா? - இது காத்து மல்ல கருப்பு மல்ல... காதல் சங்கதியோ?...

'பகீர்' என்ற உணர்வில் வேகமாக சமையலைக் கவனித்தாள்.

பகல் பொழுதுக்கு சாப்பிட வந்த கணவரிடம் கேட்டாள்.

''ஆமாம்! இப்போ நம்ம அச்சகத்து ஆளுகள் எல்லாம் உங்களுக்குத் தொந்தரவு தரதில்லையே?''

''புதுசா ஒரு இளைஞனை வேலைக்கு வச்சிருக்கேன் அவன் வந்தபிறகு வேலை தடங்கல் இல்லாம நடக்கிறது.''

''அவன் பேர் என்ன சொன்னீங்க.''

''நான் எதுவும் சொல்லலையே? ஏன் இப்படி கேட்கிறே. - சுந்தரம் ரொம்ப நல்ல பையன் - ரொம்ப கெட்டிக்காரன்.''

''சும்மா எல்லாரும் உங்களுக்கு சிரமம் தராங்களோன்னு வெறுமனேதான் கேட்டேன். இன்னும் கொஞ்சம் ரசம்

ஊத்திக்கோங்க...'' பேச்சை மாற்றினாள். சுந்தரம்தான் மகளின்... மாறுபட்ட மனநிலைக்குக் காரணம் என்பதைத் தன்னுள்ளே உடனடியாக உறுதி செய்துகொண்டாள்.

அன்று மாலை அவளே தேநீர் கெட்டிலைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள். ராத்திரி சமையலுக்கு எடுத்து வச்சிருக்கிற பீர்க்கங்காயை நறுக்கி வதக்கி துவையல் செய்திடு - இரண்டு வேலையும் சமையல் அறையில் என்னால் போராட முடியலை - அழுத்தமாக மகளுக்கு உத்திரவிட்டு வெளியே புறப்பட்டு விட்டாள்.

அச்சகத்து முன்னறையில் கிடந்த பழைய மேஜை மீது ஒரு ஆள் கொண்டுவந்து வைத்த கண்ணாடி டம்ளரில் வேகமாக தேநீரை ஊற்றி நிறைத்துவிட்டு... சுந்தரத்தை வந்து எடுத்துக்கச்சொல்லு. சூடு ஆறிப் போய்விடும் என்றாள்.

''கூப்பிட்டீங்களா அம்மா'' என்று பற்கள் பளிச்சிட மெலிதாகச் சிரித்துக்கொண்டு உற்சாகமாக வந்து நின்ற அந்த களையான வாலிபனா சுந்தரம்?

பரவாயில்லை... ரேவதியின் மனதுக்குப் பிடித்தவனை அவளுக்கும் மருமகனாக்கிக் கொள்ளப் பிடித்தது. தேநீரை அவன் பருகி முடிக்குமுன் அச்சகத்து ஆள் ஒருவன் ஓடி வந்தான்.

''சுந்தரம் சார் அந்த மிசினை எனக்கு ஓட்ட தெரியாது... நீங்கதான் ஓட்டித் தரணும்... நாளை காலைக்குள்ளே நாம அவங்களுக்கு அச்சடித்துத் தரணுமே'' என்றான் கவலையுடன்.

காலைவரை என்னத்துக்கு நேரத்தை வீணாக்கணும். இன்னிக்கு வேலை முடிவதற்குள்ளே அந்த காரியத்தை முடிச்சுடலாமே... வா... போகலாம் என்று புன்முறுவலுடன் துடிப்பாக அவன் அவளுக்கு தலையசைத்து வணக்கம் செய்துவிட்டு உள்ளே சென்றான்.

''பையன் வேலையில் திறமைசாலிபோல இருக்கு... படிப்பும் - மற்ற தகுதிகளும் இருந்தா... நல்ல வரன்தான்''



மனதிற்குள்ளே கணித்தவளாக வீட்டுக்குத் திரும்பினாள். அன்று முழுவதும் அவள் கற்பனையில் சுந்தரம் அவளது மகளுக்கு மாலையிட்டுக் கொண்டிருந்தான்.

அடுத்தநாள் காலை... ரேவதி தன் தையல் வகுப்புக்குப் போயிருந்தாள். வரதன் நியாய மன்றத்துக்கும் போய் விட்டார். வீட்டில் அவள் மட்டும் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள்.

வாசல் கதவு படபடவென்று தட்டப்பட்டது. சோப்பு நுரையை உதறிவிட்டு பரபரப்புடன் கைகளைக் கழுவித் துடைத்துக்கொண்டு வந்து திறந்தாள். முன்பின் பார்த்திராத மூன்று ஆண்கள் - அவர்களது தோற்றமே அடிவயிற்றில் சில்லென்று குடலை முறுக்கியது.

''சுந்தரம் என்கிறவனை உங்க அச்சகத்தில் உங்க கணவர் வேலைக்கு வச்சிருக்கிறார் இல்லையா?...''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். ''ஆமாம், அதுக்கு என்னை ஏன் விசாரிக்கணும்?''

''அவன் ஒரு கொலைகாரன் - கொலை செய்துட்டு ஜெயிலுக்குப் போய் எட்டரை வருஷம் இருந்துட்டு இப்பத்தான் வெளிவந்தவன். அவன் மறுபடி ஒரு கொலை செய்யமாட்டான்னு என்ன நியாயம். அவனை நம்பி உங்க அச்சகத்தின் பொறுப்பை உங்க கணவர் கொடுத்திருக்கிறார்... எச்சரிக்கை செய்யத்தான் வந்தோம்.''

உப்பிய பலூனை ஊசியால் குத்தியதுபோல அவளது உற்சாகம் ஒரே கணத்தில் ஒடுங்கிப் போயிற்று.

அன்று இரவு அவள் தன் கணவனிடம் ரகசியமாகச் சொன்னாள். ''சுந்தரம் என்கிற மாஜி கைதியை நம்பி நீங்க வேலைக்கு வச்சிருக்கிறது தப்பு - அவன் நம்ம ரேவதிக்கு வலை போடுகிறான். சொல்லிட்டேன்...''

முதல்லே அவனை வேலையிலிருந்து அனுப்பி வைக்கிற வழியைப் பாருங்கள்... நெருப்பையும் பஞ்சையும் பக்கத்திலே வச்சுக்கிட்டு வேடிக்கை பார்க்காதீங்க. நம்ம மானம் போயிடும்...'' என்று உறுதியுடன் சொன்னாள்.

அன்று மாலை அச்சகத்தின் வாயில் புறத்திலிருந்த சிறு அறைக்குள் வந்து உட்கார்ந்ததுமே வக்கில் வரதன் சுந்தரத்தை அழைத்தார். சீருடை அணிந்துகொண்டு அச்சுயந்திரம் ஒன்றை இயக்கச் சென்றவன் பரபரப்புடன் ஓடி வந்தான்.

தொடக்கத்திலேயே நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் நினைவிருக்கும் என்று நினைக்கிறேன் என்று அவர் ஆரம்பித்த போதே பகீர் என்ற உணர்வில் அவன் ஆடிப்போனான். இருசாரரும் இருபத்து நான்குமணி நேர முன்னறிக்கையில் ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் இல்லையா?

தலையை அசைத்தபடி குழப்பத்துடன் அவரைப் பார்த்தான்.

''எனக்கு மறுப்பு இல்லை. அதனால் நீ இன்று காலையிலேயே அறிக்கை இன்றி வேலையினின்று விலகிக் கொள்ளலாம். முருகேசன் தரச்சொன்ன சம்பளமும், உன் சம்பளமும் சேர்த்து ஐயாயிரம் சொச்சத்துக்கு ஒரு காசோலை எழுதிகொண்டு வந்திருக்கிறேன். இந்த ரசீதில் கையெழுத்து போட்டுவிட்டு அதை எடுத்துக்கொண்டு உடனடியாக நீ போகலாம். முருகேசன் வெளியே வந்ததும் அச்சகத்தின் பங்கை சட்டப்படி அவரிடம் ஒழுங்கு செய்துகொள்வேன்'' என்றார்.

''திடுதிப்புனு என்னை வேலையிலிருந்து நீக்கம் செய்யக் காரணம்?'' துணிவுடன் கேட்ட சுந்தரம் ரசீதில் கையெழுத்துப்போட்டு காசோலையைப் பெற்றுக் கொண்டான்.

''நீ படிச்சவன், புத்திசாலி - காரணத்தைத் தெரிஞ்சு கொண்டிருப்பே.''



''மாஜி கைதின்னு என்னைக்கண்டு உங்க மனைவி பயப்படுறாங்க இல்லையா? ஏன் நீங்ககூட பயப்படுறீங்க. தண்டனை பெற்று சிறைக்குச் சென்றுவிட்டு அவன் எத்தனை ஒரு நல்லவனாகத் திரும்பினாலும் கொலைகாரன் என்ற பட்டம் மாய்வதில்லை. ஆனால் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி பல கொலைகாரர்கள் சமூகத்திற்குள் பெரிய மனிதர்களாக உலவுகிறார்கள் என்பது வக்கிலான உங்களுக்குத் தெரியும். பரவாயில்லை... கொஞ்ச காலமாவது என்னை ஒரு கௌரவமான மனிதனாக வாழ வாய்ப்பு தந்ததிற்கு நன்றி...'' என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

சிங்கநல்லூர் கடைத் தெருவிலிருந்த தேநீர் கடையில் உட்கார்ந்துகொண்டு பையன் கொண்டு வந்து மேஜை மீது வைத்த தேநீரில் பன்னைப்பிட்டு தொட்டுக்கொண்டு தின்றபோது துக்கம் நெஞ்சை இறுக்குவதை உணர்ந்தான். வக்கில் வரதன் மகள் ரேவதி நாளைக்கு ஒரு அலங்காரத்தில் வந்து தன் தாயின் மனதில் வீண் கவலையை எழுப்பியதோடு அவன் வாழ்வையும் பாழ் செய்துவிட்டாளே பாதகி!

கௌரியைத் தவிர அவன் மனதில் வேறு பெண்ணுக்கு இடமில்லை என்பதை யார் புரிந்துகொள்ளப் போகிறார்கள்? நமச்சிவாயத்தின் நிலங்களிடையே இருந்த அந்த துண்டு மண் மீது அவன் வைத்திருந்த ஆசையை யார் அறிவார்கள்? அந்த மண்ணும் பெண்ணுந்தானே அவனைத் திரும்பி பிறந்த ஊருக்குவர ஒரு காரணமாக இருந்தன.

சட்டைப் பையிலிருந்த அந்தக் காசோலை அவனுக்குத் தெம்பைத் தரவில்லை. அதற்கு பதில் எட்டரை ஆண்டுகளுக்குமுன் நடந்த அந்த ஒரு செயலில் அவன் வாழ்வின் பாதை எப்படி மாறிப்போனது என்ற நினைவுதான் நெஞ்சை அடைத்தது. ஓவென்று வாய்விட்டு அழ முடியாத துக்கத்தைச் சுமந்துகொண்டு கடைக்காரருக்குத் தரவேண்டிய சில்லறையைத் தந்துவிட்டு வெளியே வந்தான். இப்போது

அவனுக்கு அவசரமாக வீட்டுக்கு வரத்தேவையில்லை. நாள் முழுவதும் அவன்முன் வெறுமையாக நீண்டு கிடந்தது. மெல்ல பொடி நடையாக நடந்து ஊரின் எல்லையோரம் ஓடிய கால்வாய் பாலத்து கைப்பிடி சுவர் மீது உட்கார்ந்தான். இழே சலசலத்த தண்ணீரைப் போல அவனது சிந்தனையும் அலை பாய்ந்தது.

அப்போது அவன் படித்துப் பட்டம் பெற்றுவிட்ட வாலிபன், வாத்தியார் ஐயாவின் ஆலோசனைப்படி சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு உட்கார்ந்துவிட்டு அதன் விளைவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம். பள்ளிக்கூட நாட்களிலிருந்து அவன் 'தன் தந்தையோடு அவர்கள் நிலத்திலே மிகவும் ஆர்வமாகப் பாடுபட்டவன். கல் போட்டால் பொன் விளையும் அந்தப் பூமியை அவன்தான் இழந்துவிட்ட தாயை மீண்டும் பெற்றுவிட்டவன்போல ஆசையுடன் பராமரித்தான். நாகப்பன் ஒரு அன்பான தந்தைதான். ஆனால் அவனிடமிருந்த கெட்ட பழக்கம் மகனை ஊரார் முன்னிலையில் நாணித்தலை குனியச் செய்தது உண்மை. அளவுக்கு மீறி குடித்துவிட்டு அவன் போதையில் தன் நிலை மறந்து கடைத்தெருவில் கூத்தடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு வெட்கத்தில் அவன் உடல்குறுகிப்போன நாட்கள் பல.

நிலத்தில் விளைந்த ஏராளமான காய்கறிகளை விற்று அவர்கள் இருவரும் அந்த வீட்டில் சுகமாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால், நாகப்பனின் குடிப்பழக்கம் அவர்களைக் கடனில் ஆழ்த்திவிட்டிருந்தது. அதைப்பற்றி தகப்பனும் மகனும் பலமுறை விவாதித்து மனத்தாங்கல் பட்டுக் கொண்டதுண்டு அன்று நாகப்பன் வழக்கத்திற்கு மீறி கொஞ்சம் அதிகமாகவே குடித்துவிட்டிருந்தான். கடைத் தெருவில் போதையில் தள்ளாடிக்கொண்டு போட்டுக் கொண்டிருந்தசட்டையைக் கழற்றி தலையில் சுற்றிக்கொண்டு தனக்குள்ளே பாடிய வண்ணம் வந்து கொண்டிருந்தான்.



அது வழக்கமானதொரு நிகழ்ச்சி. அதனால் கடைத்தெருவில் யாரும் அதைப் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் நமச்சிவாயத்தின் அடியாட்களுக்கு அது வேடிக்கையானதொரு சம்பவமாக இருந்தது. எதையாவது காரணம் வைத்துக்கொண்டு நாகப்பனை ஒருகை பார்க்க வேண்டும் என்று நமச்சிவாயம் உத்திரவிட்டிருந்தான். அவர்களுக்கென்ன மாதம் மாமூலாக நமச்சிவாயம் ஒரு தொகையைத் தந்து கொண்டிருந்தான். ஊராரை மேய்த்துக் கொண்டு வளர்ந்துகொண்டிருந்த உடம்பிலே அசாத்தியமான தெம்பு இருந்தது. கேட்பானேன்? வீண் சண்டைக்கு அலைந்தனர்.

''மேலே மானமா - இழே பூமியான்னு நிதானமில்லாம சட்டையைக் கழற்றி முண்டாசு கட்டிகிட்டு மைனர் கணக்கா நடக்கிறியே கிழவா!'' வேடிக்கையாகக் கேட்டபடி நாகப்பன் தலையிலிருந்து சட்டையைப்பிடித்து இழுத்தான் வீரத்தேவன்.

''மடியிலே இன்னும் காசு பாக்கியிருக்கா?'' என்றபடி இடுப்புத்துணியைப் பிரித்து இழுத்தான் சடையாண்டி...

போதையில் தள்ளாடியபோதும்... நாகப்பனுக்கு நினைவு முழுவதும் மரத்துப் போய்விடவில்லை. கடைத் தெருவிலே எல்லோர் முன்னிலையிலும் தன்னை அலட்சியப் படுத்தி வேடிக்கை செய்கிற அவர்கள் மீது ஆத்திர மூண்டது. கையை ஓங்கி வீரத்தேவன் கன்னத்தில் அறைந்தான். அவ்வளவுதான் சில நொடிகளில் கடைத்தெரு யுத்த களமாகியது.

வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த சுந்தரத்திடம் பெட்டிக்கடை பொன்னுசாமி ஓடிவந்தான்.

''போ சீக்கிரம்! உன் அப்பனை அவங்க நாலுபேரும் போட்டு மிதிக்கிறாங்க. காப்பி ஓட்டல் முன்னாடி கலாட்டா...'' என்று பதறினான்.

சுந்தரத்தின் இளரத்தம் கொதித்தது. நெஞ்சு கோபத்திலே விம்மியது ஒரே பாய்ச்சலாக ஓடினான். தன் தந்தையை சடையாண்டி காலில் மிதித்துக்கொண்டு கொக்கரிப்பதைக் கண்டதும் ஆவேசமாகிவிட்டான். பாதையோரத்தில் ஓட்டல்காரர் அடுக்கி வைத்திருந்த விறகுக் குவியலிலிருந்து ஒரு கட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு நெருங்கினான். அவ்வளவுதான் கண்ட முகம் தெரியாது ஆத்திரத்தில் அவன் சடையாண்டியை விறகால் மொத்த - மற்ற மூவரும் இருந்த இடம் தெரியாது... மறைய... கொஞ்ச நேரம் கழித்து அவன் விழித்துக் கொண்டபோது ரத்தவெள்ளத்தில் சடையாண்டி கிழே கிடக்கத் தன்னைச் சுற்றிலும் ஒரு கும்பல் நிற்பதை உணர்ந்தான்.

பிறகு நடந்த விஷயமே வேறு. சர்வீஸ் கமிஷன் தேர்வில் அவன் வெற்றி பெற்றதின் விளைவாக வேலையில் வந்து சேரும்படி வந்த தந்தியை அவன் பிரித்துப் படித்து அந்த ஆனந்தத்தை அனுபவிக்குமுன் சடையாண்டியைக் கொலை செய்ததிற்காக அவன் காவல்துறை அதிகாரியால் கைது செய்யப்பட்டான்.

பின்னர்? நியாய சபையில் விசாரிப்பு - தீர்ப்பு - சிறைவாசம் பிறகு? கண்களை மறைத்த கண்ணீரைச் சமாளித்துக்கொண்டு எழுந்து நடந்தான்.

சோறு சாப்பிடக்கூட மனமின்றி வாசலில் சிலையாக உட்கார்ந்துவிட சுந்தரத்தின் தோளை வாத்தியார் ஐயா உலுக்கினார்.

என்ன இப்படி இடிஞ்சுபோயிட்டே? நீ வந்தப்போ இருந்த நிலையைவிட இப்போ எவ்வளவோ மேலாக இருக்கறியே... புரியலையா?

கையிலிருக்கிற ஐயாயிரத்தை வச்சுக்கொண்டு வங்கியிலே கடன் வாங்கி ஒரு தொழிலை நீ ஆரம்பிச்சு ஒகோன்னு நடத்த முடியுமே... ஏன் தைரியத்தைவிட்டு



கோழையாகக் குனியிறே? முதலில் சாப்பிடு. பிறகு பேசுவோம்... மிகவும் ஆறுதலாகச் சொன்னார்.

சில தினங்களுக்குப் பின்னர் கடைத்தெருவில் தனது வில் வண்டியில் போய்க்கொண்டிருந்த நமச்சிவாயம் திடுக்கிட்டுப் போனான்.

'சுந்தரம் வாடகை சைக்கிள் கடை'' என்று பளிச்சிட்ட பெயர் பொறித்த பலகையையும் வரிசையாக வாயில் முன் கொட்டகையில் நின்ற புத்தம் புது சைக்கிள்களையும் மேஜைக்கு பின்னால் அழுத்தலாக சுத்தமான உடையில் தெரிந்த சுந்தரத்தையும் அவன் கவனித்தபோது வயிறு நெருப்பாக எரிந்தது.

''செத்தாயோ செத்தாயோ சித்துன்னி என்று கேட்டபோது நான் ஏன் சாகரேன் நமச்சிவாயா; என்ற தாமே? அந்தக் கதைபோல இந்த சுந்தரம் தலை நிமிர்ந்து வாழத் தொடங்கி விட்டானே?... இவனை எப்படி வீழ்த்துவது? உரும் இவனை வாழவிடக்கூடாது... இதற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற ஆத்திரத்தில்... எங்கேடா பிராக்கு பார்க்கறே - வண்டியை வேகமாக வீட்டுக்கு ஓட்டு...'' என்று வண்டி ஓட்டி மீது எரிந்து விழுந்தான் நமச்சிவாயம்.

கடைத் தெருவில் வரிசையாக இருந்த அந்த ஐந்து கடைகளில் மூன்று பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவத்துக்கு சொந்தம், இரண்டு நமச்சிவாயத்தின் கடைகள் முதல் இரண்டு கடைகளில் பரமசிவம் அரிசியும் - வெற்றிலையையும் மொத்த வியாபாரம் செய்ய உபயோகித்துக்கொண்டிருந்தார். மூன்றாவது கடை மிகவும் பழுதான நிலையில் இருந்தது. கடை சுவர்களுக்கு சாயமடித்து கூரையைப் புதுப்பித்து கழிவறையைச் சரிசெய்து அவர் தயாராக்கிக் கொண்டிருந்த போதே நமச்சிவாயம் தன் மாமனாரிடம் பலமுறை கேட்டுவிட்டிருந்தான்.

மின்விசை பொருள்கள் வைத்து வியாபாரம் செய்ய விரும்புவதாகவும், தனக்கு அதை வாடகைக்கு விடவேண்டு மென்றும் விண்ணப்பித்துக்கொண்டிருந்தான்.

பரமசிவம் கண்டிப்பான மனிதர். தாயும், பிள்ளையுமா னாலும் வாயும், வயிறும் வேறு என்று நம்புகிறவர். மருமகன் என்ற உறவிருந்தாலும் கறாராக வாடகையைத் தண்டிக் கொள்வார் என்பது தெரியும் அவனுக்கு. அதனால் அவன் அதை அவரிடம் சும்மா கேட்கவில்லை. அவர் கேட்ட வாடகையைத் தந்துவிட்டு கடை திறக்க ஆசைப்பட்டான். அப்படியிருந்தும் அந்தக் கொலைகாரன் மாஜி கைதி சுந்தரத்திற்கு அவர் கடையை வாடகைக்கு விட்டிருந்தது மன்னிக்க முடியாத குற்றமாக அவனுக்குப்பட்டது. இதைப் பற்றி பேச வேண்டுமென்று ஆவேசம் எழ, அவன் வண்டியை மாமனார் பரமசிவம் வசித்த தெருவுக்கு ஓட்டச் சொன்னான்.

கடை வேலையைக் கவனித்துவிட்டு மற்ற பொது விவகாரங்களையும் கவனித்து முடித்துவிட்டு குடையை மடக்கிக்கொண்டு வீட்டு நடையில் செருப்பை அவிழ்த்தவர் வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டுத் திரும்பினார்.

நமச்சிவாயம் வில் வண்டியினின்று இறங்கியதைக் கவனித்தார். அடுத்த தெருவில் வசித்த போதிலும் அடிக்கடி மாமனார் வீட்டுக்கு வரும் பழக்கத்தையே நமச்சிவாயம் வைத்துக் கொண்டதில்லை. அத்துடன் மனைவியையும் அங்கு அனுப்ப விரும்பியவன் இல்லை. பரமசிவம் மரண மடைந்தபின் அத்தனை சொத்துக்களையும் அவரது இரண்டு பெண்கள்தான் பங்கிட்டுக்கொள்ளப் போகிறவர்கள் என்ற போதிலும் மனிதர் மிகவும் உஷாரான ஆசாமி. ஒருதடவை கை மாற்றாக மாமனாரிடம் பத்தாயிரம் ரூபாய் கேட்கப் போய் அவர் கண்டிப்பாக மறுத்ததில் மூக்குடைந்து திரும்பியவன். மனதில் அவர்மீது ரொம்பவும் கசப்பு. ஆகவே போக்கு வரத்தை ரொம்ப அரிதாக்கிக் கொண்டிருந்தான்.



பரமசிவத்துக்குத் தன் மூத்த மருமகனைப் பற்றி நன்றாகவே தெரியும்.

தன் அப்பா விட்டுப்போன சொத்தைக்கூட சரியாக நிர்வகிக்கத் தெரியாத அகம்பாவக்காரன். கடைத்தெருவில் ஆரம்பித்து வைத்திருந்த தன் கடைகளை நேரில் வந்து மேற் பார்வை செய்யக்கூட நேரமில்லாத சோம்பேறி போதாதிற்கு செலவாளி. ஊர் வம்பில் தலையிட்டுக்கொண்டு திரியும் சுழிச்சுட்டுக்காரன்.

அவரது கணிப்பில் மிகவும் தாழ்ந்து விட்டிருந்த நமச் சிவாயத்தை அவரும் கொஞ்சம் தூரவே வைத்திருக்கத்தான் விரும்பினார். தலை பிளக்கும் வெய்யிலில் அவன் அருகே வருகிறான் என்றால் ஏதாவது காரியமாகத்தானிருக்கும் என்று எண்ணியபடி வேகமாக முற்றத்தில் இறங்கி கைகால்களைக் கழுவி முகத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தார்.

வாப்பா நமச்சிவாயம். அத்திப்பூத்தாப்பல வந் திருக்கே... தனியாகவா வந்தே. பாப்பாவையும் அழைச்சிட்டு வந்தியா... சரியான சமயத்துக்கு வந்திருக்கே. நீயும் என்னோட ஒருவாய் சாப்பிடலாம்... உபசாரமாக அழைத்தார்.

பாப்பாவும் வரலை. தாப்பாவும் வரலை. தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டான் நமச்சிவாயம். வழி நெடுகிலும் எரிச்சலை அடக்க பற்களைக் கடித்துக்கொண்டு வந்தவன் தாடை வலித்தது.

சாப்பிட நேரமில்லை மாமா, ஒரு அவசர சங்கதியைப் பேச வந்தேன். அப்படியா... உட்காரு பேசலாம் என்றபடி கூடத்து பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டு மின்விசிறியைச் சுழலவிட்டு தாம் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டார்.

"ரொம்ப நாளா அந்த ஏழாம் நம்பர் கடையை எனக்கு வாடகைக்குக் கேட்டுக் கொண்டிருந்தேன். போயும் போயும்

அந்த பயல் சுந்தரத்துக்கு கொடுத்திருக்கிறீங்களே?'' ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கேட்டான்.

'நமச்சிவாயம், உனக்கு இருக்குற இரண்டு கடைகளையே சமாளிக்க முடியலை. மூணாவதை எப்படி நிர்வகிப்பே. மேலும் சுந்தரத்துக்கு மறுவாழ்வு தர வேண்டியது, என் போன்ற ஊர் தலைவர்களோட கடமை. வாத்தியார் அய்யா வந்து சிபாரிசு செய்தார். கொடுத்தேன். கடை திறந்து கொஞ்ச நாள்தான் ஆகுது. அதுக்குள்ளே சுந்தரத்தின் வியாபாரம் நல்லாவே பிடிச்சுக்கிட்டிருக்கு...''

''ஊருக்கு உபதேசம் செய்யவேண்டிய நீங்க, அந்தப் பயலை இப்படி கொண்டாடிப் பேசறது நல்லா இல்ல'' உறுமினான் நமச்சிவாயம். உங்கப்பா ஊருக்குத்தலைவரா... நல்லவரா பெரிய தனக்காரர் என்கிற பெயரோட வாழ்ந்தார். அவர் மகனான நீ இப்படி சின்னபுத்தியோட பேசறது நல்லா இல்லை. தெரிஞ்சுக்கோ, உனக்கு சில கெட்ட பசங்களின் சகவாசம் இருக்கிறது எனக்குத் தெரியும். அது முடிவில் உனக்கே தீமை விளைவிக்கும் புரிஞ்சுக்கோ... கெட்டவன் நல்லவனாகிறது ஒரு வீட்டை விளங்க வைக்கும். ஆனால் ஒரு நல்லவன் கெட்டவனாகிவிட்டால் அது சமுதாயத்தையே அழிக்கும். தெரிஞ்சுக்கோ... ஒருத்தனே ஊரை மடக்கிட்டு வாழ்ந்த காலம் போச்சு... இப்போ இளைஞர்கள் தாங்க பயிரிட்ட நிலம் தங்களுக்கு சொந்தமாகணும் - உழைத்தவனுக்குத்தான் ஊரில் வாழத் தகுதிகள் என்றெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டாங்க... அதனாலே நீயும் உன் கொள்கைகளை மாத்திக்கிட்டா நல்லது... சரி. அதை விட்டுத்தள்ளு. உன் மாமியார் உனக்கு பிடிச்ச கத்தரிக்காய் சாம்பார் வச்சிருக்காங்க, என்னோட சேர்ந்து ஒரு பிடி பிடிச்சுட்டு போயேன்...

நமச்சிவாயத்தினுள் பொங்கி எழுந்த எரிச்சலில் அவன் பதிலுக்கு என்னென்னவோ சொல்ல நினைத்தான்.



வார்த்தைகளை அடக்கிக்கொண்டு எழுந்தான். 'பொன்னு மணி சாப்பிடாம காத்திருக்கும். வரேன்' என்றபடி விரைப்பாக விடை பெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டான். வீட்டுக்கு வந்ததும் வராதுமாக அவன் மனைவி விஷயத்தைப் பற்ற வைத்தாள்.

செம்பிலே தண்ணீர் கொண்டு அவன் கை கழுவக் கொடுத்தபடி காதில் விஷயங்களைப் போட்டு வைத்தாள்.

''உங்க தங்கச்சி காலுக்கு நீங்க ஒரு விலங்கு போடாட்டி வெகு சீக்கிரம் அவமானப்பட்டுப் போவீங்க. இன்று காலை என்கிட்டகூட சொல்லாம இவ புறப்பட்டு வெளியே போன - பிறகுதான் சங்கதி தெரிஞ்சது. நம்ப வேலைக்காரி மாரியாயி வந்து சொன்னா. அந்த பயல் சுந்தரத்து கடையிலே இவபோய் உட்கார்ந்துகிட்டு சிரிச்சுப்பேசி ஒரு கோலா வாங்கி அவனோட ஜோடியா உட்கார்ந்து சாப்பிட்டிருந்தாளாம். நாளைக்கு நீங்க எந்த முகத்தோட அங்கே போவீங்க...''

பசி, மாமனார் காட்டிய அசட்டை இரண்டும் ஆத்திரத்தை மூட்ட உரத்த குரலில் அவன் தங்கையைக் கூப்பிட்டான்.

''ஏ! கௌரி!... இங்கே வா...'' அவன் கத்தியது தெருக்கோடி வரை ஒலித்தது.

பின்கட்டில் காயப் போட்டிருந்த தன் துணிகளை எடுத்து மடித்துக் கொண்டிருந்த கௌரி ஓடி வந்தாள்.

''அந்த சுந்தரம் பயலோட உனக்கு என்ன பேச்சு?'' எடுத்த எடுப்பிலேயே கத்தினான்.

பள்ளிக்கூட நாளிலிருந்து நாங்கள் நண்பர்கள்... அதனால்...

''வெட்கம் இல்லே... அவன் ஒரு மாஜி கைதி. ஊரறிந்த கொலைகாரன். என் எதிரி...''

அவர் எனக்கு எதிரி இல்லை அண்ணா.

''எதிர்த்து பேசினே - முகரகட்டையைப் பேத்து விடுவேன்'' என்று கையை ஓங்கினான் நமச்சிவாயம்.

''நிறுத்துங்க அண்ணா - நான் உங்களுக்கு எந்த வகையிலும் அடமைப்பட்டவ இல்லை. வயசு வந்தவ - படிச்சவ - சொத்து உடையவ. என் இஷ்டப்படி நடக்க எனக்கு சகல உரிமையும் உண்டு. அதனாலே மரியாதையா என்கிட்ட நடந்துகிட்டா இங்கே இருப்பேன். இல்லாட்டா மாமன் பரமசிவம் வீட்டிலே போய் தங்கிடுவேன். பயமுறுத்தலாகக் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

எரிமலை வெடித்தது போன்று உள்ளே எழுந்த கோபத்திலே அவனால் சாப்பிட முடியவில்லை. உடனடியாக அன்று மாலையே அவன் தன் அடியாட்களைக் களத்து மேட்டில் சந்தித்தான்.

''சுந்தரத்து மேலே கையை வச்சாதானே வம்பு. அவன் மேலே கை வைக்காம ஆளை எப்படியாவது தீத்துக் கட்டிடுங்கடா பசங்களா. இந்த முறை நீங்க வெற்றி பெற்றால் உங்கள் மனங்குளிர கவனிச்சிக்கிறேன்.'' வாக்கு கொடுத்தான்.

''கவலைப்படாதீங்க யஜமான். இந்த தடவை அவன் கருமாதிக்குக்கூட எலும்பு அகப்படாம செய்துடறோம்'' சத்தியம் செய்தனர் அந்த மூன்று முரடர்கள்.

''இந்த வாரத்துக்குள்ளேயே ஒரு வழி செய்து விடுங்களடா பசங்களா'' என்று உத்திரவிட்ட நமச்சிவாயம்... ஆத்திரத்துடன் தன் மீசையைத் தடவிக்கொண்டான்.

அந்த மூவருக்கும் மனைவி மக்கள் - பெற்றோர் உறவினர் என்று எந்த சொந்தமும் கிடையாது. வீடு வாசல் என்ற பந்தமும் கிடையாது. வீரத்தேவனுக்கு மட்டும் ஒரு தற்காலிக காதலி இருந்தாள். நாள் முழுவதும் தாங்கள் நடத்திய அக்கிரம தர்பாருக்குப்பின் மாலை வேளையில் பட்டை சாராயமும் பருப்பு சோற்றுடன் மீன்கறியும் தின்றுவிட்டு



பாண்டியனும் சங்கிலி கருப்பனும் ஊரின் எல்லையோரத்தி லிருந்த பாழான சாவடியில் உறங்குவது வழக்கம். வீரத்தேவன் மட்டும் தெற்குத் தெருவின் முடிவில் அமைந்திருந்த குடிசைப் பகுதியில் கடைசி குடிசைக்கு சொந்தக்காரியான தோசைக்காரி காசாம்பூ வீட்டில் தங்கிகொள்வது வழக்கம். நடுவயதை எட்டிவிட்டிருந்த காசாம்பூக்கு அவனது துணை தேவையாக இருக்கவில்லை. சின்னவயதிலேயே விதவையாகிவிட்ட அவளுக்குத் தன்னைத்தானே காத்துக்கொள்ள திறமை இருந்தது. ஆனாலும் என்னவோ பழகிவிட்ட தோஷம். போய்த் தொலையட்டும் என்று வீரத்தேவனின் நெருக்கத்தை - அவள் அனுமதித்திருந்தாள். ஆனாலும், ஒரு நிபந்தனையில் அவர்களது உறவு நீடித்துக்கொண்டிருந்தது. சனிக்கிழமை மாலை வீட்டுக்கு வரும்போது வீரத்தேவன் அவள் கையில் கட்டாயம் ஒரு இருபது ரூபாயாவது தந்தாக வேண்டும். தினசரி இரவு சுவையான சாப்பாடும்... காலையில் சுக்குக் காப்பியுடன் தோசையும்... ஞாயிற்றுக்கிழமைகளில் குடிசைக்குப் பின்னால் தகர டின்னில் காய்ச்சிய வெந்நீருடன் எண்ணெய் தேய்த்துவிட, அவளும் அவனுக்கு சும்மா கிடைக் காது... என்று ஆரம்பத்திலேயே சொல்லி விட்டிருந்தாள்.

அவளது மிரட்டல் உருட்டல் எல்லாம் கடைத் தெருவோடுதான் என்பதை அவனும் தெரிந்துகொண்டான். தனது பருத்த உடலில் கண்டாங்கி சேலையை இழுத்து சுற்றித் தலைப்பை இடுப்பில் சொருகிக்கொண்டு... கோபத்தில் சிவந்த கண்களால் அவள் உறுத்துப் பார்த்தால் வீரத்தேவன் அடங்கிப்போவான்.

அந்த சனிக்கிழமை மாலை அங்கே வந்தபோது கடைத்தெருவிலிருந்து அப்பொழுதுதான் கூடையுடன் அவள் திரும்பியிருந்தாள்.

''என்ன அதுக்குள்ளார வந்து குந்திகிட்டே? குளிச்சு முடிச்சிட்டு அடுப்பைப் பத்தவச்சு அரிசியை உலையில்

எத்தி... கருவாட்டுக் குழம்பு தயாரிக்க நேரம் பிடிக்குமே... நீ பசி பசின்னு அலைவியய்யா?'' அதட்டினாள்.

ஒரு முக்கிய சமாச்சாரம் சொல்லி உன்னைத் தயார்படுத்தத்தான் சீக்கிரம் வந்தேன். இந்தாபிடி உன் வாராந்திர மாமூலை என்று சிரித்தபடி இருபது ரூபாய் நோட்டை அவள் முன் போட்டான்.

'இப்போ விலைவாசியெல்லாம் ரொம்ப ஏறிக் கிடக்குன்னு தெரியுமில்லையா. அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஆரம்பிச்ச மாமூல் பிரகாரம் தருகிறியே அய்யா... எனக்கு கட்டியே வரலை... பிகு செய்தபடி அந்த நோட்டை எடுத்துத் தன் சுருக்குப் பைக்குள் வைத்து இடுப்பில் செருகிக் கொண்டாள். சோத்துக்கு இப்ப அவசரமில்லே. நிதானமா சமைச்சுப்போடு. அதுக்கு முன்னாடி ஒரு உதவி தேவை. பணம் தந்துடறேன். என்றபடி இன்னொரு பத்து ரூபாயை எடுத்து வைத்தான்.

பத்து ரூபா காசுக்கு என்ன உதவி கேட்கிறியாம்... அசட்டையாக அவனைப் பார்த்துக்கொண்டே தனது முண்டாசு கொண்டையை அவிழ்த்து அதனுள் அடங்கியிருந்த சவுரி விரிமணையை அப்பால் வைத்தாள்.

ஒரு டின் மண்ணெண்ணெய் உடனடியாகத் தேவைப் படுகிறது என்று கூறிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான்.

'என் பிழைப்பில மண் அள்ளிப்போட பார்க்கிறே. எனக்கு மாச முழுதும் கிடைக்கிற அத்தனை மண் ணெண்ணெயும் நீ வாங்கிக்கிட்டா... நீ கள்ளி அடுப்பிலே தானே தோசை சுடறே - சமைக்கிறே... கடைத்தெருவிலே ஸ்டெவ் வச்சு சுட்ட தோசைகளை சூடுபண்ணி விக்கிறேனே - அந்த அடுப்புக்கு மண்ணெண்ணெய் தேவையாச்சே... நீ ரொம்ப கெட்டிக்காரி... உங்கிட்ட கொஞ்சம் அதிகமாகவே எண்ணெய் இருக்குனு தெரியும், மேலும் இதை பகிரங்கமா கடையிலே நான் வாங்க முடியாது' காசாம்பூ... இந்த



புதுவருஷம் வரட்டும்... நான் வாக்குக் கொடுத்தபடி உனக்கு பொன்சரடு வாங்கித் தந்துடறேன். கொஞ்சிக் குழைந்தான்.

நாலு வருஷமா கேட்கிற சங்கதிதான். பொன் சரட்டுக்குப் பதில் என் கழுத்திலே தூக்கு கயிறை வாங்கித் தராதிருந்தா போதுமய்யா. ஆமாம் மண்ணெண்ணெய் எதுக்காக அவசரமாத் தேவைப்படுது. ஏதாவது வம்பிலே என்னை மாட்டி விட்டுடாதே அய்யா...

ஏதோ தோசை சுட்டு வயிற்றைக் கழுவிக்கிட்டு இந்தக் குடிசையிலே விழுந்து கிடக்கிறேன்.

அந்த கவலையை என் கையிலே உட்டுடு. எண்ணெய் கிடைக்குமில்லையா? பானைக்குப் பின்னால் ஒரு தகர - டின்னிலே அவசரத்துக்கு உதவட்டும்னு வச்சிருக்கேன் - எடுத்து தொலைச்சுக்கோ - முடியாதுன்னா நீ விடற ஆசாமியா... உன் பிடிதான் உடும்புப் பிடியாச்சே... சரசமாக சிரித்துவிட்டு குடிசையின் பின்பக்கம் நகர்ந்தான்.

நமச்சிவாயத்தின் வீட்டின் பின் அறைகள் தோட்டத்தைப் பார்த்த வண்ணமிருந்தன. கௌரியின் அறை கூடத்துக்கு அப்பால் இரண்டாவது கேட்டின் அருகே அமைந்திருந்தது. நல்ல வேளையாக அவர்களுக்கு தான்பூரா உழைத்துக் கொண்டு தோட்டக்கூரை வீட்டில் வசித்த மருதாயும் அவள் கணவனும் தங்களது மகளைக் காண அடுத்த ஊருக்குக் கிளம்பிப் போயிருந்தார்கள். வர நான்கு நாட்களாகும் என்பதை நமச்சிவாயம் அறிவான் - பின் பக்கத்துத் தோட்டத்தின் எல்லையோரத்தில் அமைந்திருந்த வேலிக்கு அப்பால் பெரிய மைதானம் - அந்திப் பொழுதில் அங்கே ஆள் அரவமும் இருக்காது. இந்த நிலையில் நமச்சிவாயத்தின் வீட்டின் பின் அறையில் என்ன நடந்தாலும் - கொலை விழுந்தாலும் கேட்பாரில்லை என்பதை அவன் அறிவான். வீரத்தேவன் கோஷ்டியாரை ஏவி விட்டவன் மனதிலே இன்னொரு எண்ணமும் உதயமாகியது. சனிக்

கிழமை இரவு கூறிவிட்டுப் போயிருந்தான். வீரத்தேவன். அது சமயம் கௌரியைப் பத்திரமாக வீட்டுக்குள்ளே பூட்டி வைப்பதுதான் நல்லது. அவள் இடையில் புகுந்து காரியத்தைக் குழப்பிவிட்டாலும் வியப்பதற்கில்லை என்ற கவலையில் மனைவியை எச்சரித்துவிட்டிருந்தான். கௌரி இரவு உணவுக்குப்பின் தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டுவிட்டதும் பொன்மணி கதவின் வெளித்தாளை இழுத்து சாத்திவிடவேண்டும். நடு இரவில் விழித்துக் கொண்டு கௌரி கத்தி ரகளை செய்து கதவைத் திறக்கச் சொன்னால் மறுத்துவிட வேண்டும். எத்தனை கூச்சல் போட்டாலும் அக்கம் பக்கத்தவருக்கு கேட்காது. அதனால் கௌரியை வீட்டோடு மடக்கி வைப்பது மிகவும் நல்லது. பொன்மணி மகிழ்ச்சியுடன் அந்த சதிக்குத் தலையசைத்து விட்டிருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் சுந்தரம் தன் கடையை மூடி விடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். கடையில் வேலை செய்த இரண்டு சிறுவர்களுக்கும் அவன் அந்த நாளை முழுவேலை விடுப்பு நாளாக வழங்க விரும்பினான். மேலும் அந்த நாளில் காலை வேளையில்தான் அவன் வாய்க்கால் கரை ஓரம் கௌரியைச் சந்தித்துப்பேச முடிந்தது. பொழுது உச்சியை அடைந்து சூரியன் கொளுத்துவதை உணராது இருவரும் புல்தரையில் அமர்ந்து யாரைப் பற்றியும் அக்கறை கொள்ளாது மனம்விட்டுப் பேச முடிந்தது...

அந்தச் சனிக்கிழமை மாலை ஒருசில நிமிடங்கள் முதியோர் பள்ளிக்குப் போகுமுன் அவள் கடைக்கு வந்திருந்தாள். யாருமில்லாத நேரம். கையோடு கொண்டு வந்த பக்கோடா பொட்டலத்தை அவன் மேஜை மீது வைத்துவிட்டு அவள் சொல்லிவிட்டுப் போனாள்.

நாளைக் காலை நாம் சந்திக்கும்போது நீங்க முடிவாகச் சொல்லிடணும். ஏன்னா இதைப்பத்தி பஞ்சாயத்து அய்யா



கிட்டே பேசியாகணும்... என்று செல்லமாக அதட்டிவிட்டுப் போயிருந்தாள்.

இரவு உணவு சாப்பிடும்போதுகூட அவனால் அருணாசலம் அய்யாவிடம் எதுவும் பேச முடியவில்லை. முன்போல் மனம் கனக்கவில்லை... வருங்காலத்தைப் பற்றிய கனவில் பேசிவிட்ட மனத்திலே இன்பம் நிறைந்திருந்தது. அத்தனைக்குப் பின்னும் கௌரி அவனை நேசிக்கிறாள். அவனைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாள்... இப்படிப்பட்டதொரு வாய்ப்பினை அவன் ஒதுக்கிவிடுவது முறையா?

என்னப்பா ஒரே யோசனையா இருக்கே... வழக்கம் போல வேடிக்கையாகக் கேட்டுவிட்டு வெற்றிலைப் பெட்டியுடன் உட்கார்ந்தார் வாசலில் வாத்தியார் அய்யா...

வேலை அலுப்பு... தூக்கம் வருது மன்னிச்சுக்கோங்க... என்றபடி கண்களை மூடியபடி கனவில் ஆழ்ந்து போனான் - கொஞ்ச நேரத்தில் உண்மையாகவே உறங்கிப்போனான்.

நடு இரவு... திடுகிட்டு எழுந்து உட்கார்ந்தான் அவன். ஆமாம்! இது என்ன வெளிச்சம்...

வாத்தியாரும் விழித்துக்கொண்டார்... ஆமாம் வானத்தைத் தொட்டுவிட்டது போன்று என்ன வெளிச்சம் அது! புகை வாசனை அடிக்கிறதே. கார்த்திகை போய் வெகு நாளாச்சு, மேலும் சொக்கப்பனை கொளுத்தும் நேரமு மல்லவே அது? யாராவது கொடும்பாவி கட்டி இழுத்துப் போய் கொளுத்துகிறானா?... கட்டிலின் மீது உட்கார்ந்தார்.

வாத்தியார் அய்யா? எங்கேயோ நெருப்பு பத்திக் கிட்டாப்பல இருக்கே, ஜனங்கள் சத்தம்கூட கேட்கிறதே என்றபடி திடுகிட்டு சுந்தரமும் எழுந்து உட்கார்ந்தான்.

பலசரக்குக்கடை பழனியாண்டியின் வேலையாள் தலைதெறிக்க ஓடிவந்தான்.

''சுந்தரம்! உன் கடையும் அந்த வரிசையில் உள்ள கடைகள் அத்தனையும் நெருப்பு பிடிச்சு எரிகிறது. ஓடியா ஊர் ஜனங்க எல்லோரும் நெருப்பை அவிக்க பாடுபடறாங்க'' என்றான்.

''வாத்தியார் அய்யா! கேட்டீங்களா சேதியை... என்னை இந்த ஊரில் வாழவிட மாட்டேன்கிறாங்களே'' என்று கூறிய சுந்தரம் ஆத்திரமும் அழுகையுமாகக் கடைத்தெருவை நோக்கி ஓடினான்.

வாத்தியார் அருணாச்சலம் கால் செருப்பைத் தினித்துக் கொண்டு மூச்சிறைக்க பின்னால் வேகமாக நடந்தார்.

அங்கே அவர் கண்ட காட்சி?

ஊரே திரண்டு வந்துவிட்டது போன்றதொரு கூட்டம். ஒரே கூச்சல் குழப்பம். எரிகின்ற நெருப்பிலே வெந்து கொண்டிருந்த சைக்கிள் டயர்கள் எழுப்பிய கருகிய ரப்பர் நாற்றம் - புகையின் நெடி... வானத்தை நோக்கி நாக்கை நீட்டியபடி படபடவென்று சப்தமிட்டு எரிந்த தீயிடமிருந்து எழுந்த சூடு.

ஐயா! நான் அதோ கதியாகிட்டேனே! யாருக்கு நான் என்ன கொடுமை செய்தேன்... என்று அலறி அழுத சுந்தரத்தை அவர் கட்டிப்பிடித்துக்கொண்டு ஒரு பக்கம் இழுத்து நிறுத்தினார்.

அவனுக்கிருந்த மனநிலையில் அவன் தீக்குள் பாய்ந்து விடுவான் போல பதறிக்கொண்டிருந்தான்.

பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவம் ஆட்களை ஏவி தீயைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தார். தமது கடை எரிந்து சாம்பலாகி விட்டதைப் பற்றி அவர் கலங்கியவராகத் தெரியவில்லை. தீ மேலே பரவாது அடங்கிப்போக வேண்டும் என்பதுதான் அவரது முக்கிய நோக்கமாக இருந்தது.



செய்தியைக் கேட்டு காலில் செருப்புகூட அணியாது பனியனும் லுங்கியுமாக படுக்கையிலிருந்து ஓடிவந்த நமச்சிவாயத்தின் வயிறு பற்றி எரிந்தது.

அவனது கடைகள் இரண்டும் தீயிக்கு இரையாகி விட்டிருந்தன.

அடப்பாவிகளா? எப்பொழுதும் எதைச் சொன்னாலும் தப்பாகச் செய்துவிட்டு என்னையும் சிக்கலில் மாட்டி விடுகிறார்களே... அவனது அடியாட்களின் கடந்த செயலை எண்ணி நிலைகுலைந்து போனான்.

பாட்டி கண்ணாச்சியைக் காணோமே? என்று நடுவில் ஒரு குரல் ஓங்கி ஒலிக்க எல்லோரும் பாட்டி! பாட்டி! என்று கத்தியபோது நமச்சிவாயம் நடுங்கிப்போனான்.

கண்ணாச்சி என்ற கிழவி வீடு வாசல் இல்லாத அனாதை. அங்குள்ள கடைகளைப் பெருக்கி சுத்தம்செய்து விட்டு கடைத்தெருவிலேயே சோறு வாங்கித் தின்று அங்கேயே ஒரு கடை முன்னால் உறங்குவது வழக்கம். எல்லோருக்கும் நல்லவள். வேடிக்கையாக கதை பேசி ஊர் குழந்தைகளை உற்சாகமூட்டும் வழக்கமுடையவள் பாட்டி! பாட்டி! என்று பரிவுடன் எல்லோரும் அழைக்கும் வண்ணம் அன்பாக நடந்து கொள்கிறவள். அவள் நெருப்பில் செத்துவிட்டால் அவளைக் கொலை செய்த குற்றம் வேறு சேர்ந்துவிடுமோ?... தெய்வமே... முதல் முதலாக அநியாயக் காரன் நமச்சிவாயம் அரண்டு போனான்.

ஐயா! பாட்டி பிழைச்சுக்கிட்டாங்க, கொஞ்சம் லேசா கையில்தான் நெருப்புக்காயம்... என்றபடி ஒரு ஆள் ஆட்டுக்குட்டியைத் தூக்குவதுபோல கிழவியைத் தூக்கிக்கொண்டு பரமசிவத்திடம் வருவதைக் கண்டான்.

அப்பாடா என்று நிம்மதியாக மூச்சுவிட்டான். ஆனாலும், உள்ளுக்குள் அந்த மூவர் மேலும் ஆத்திரம் நெருப்பாக மூண்டது.

சுந்தரத்திற்கு சங்கடம் ஏற்பட ஏதாவது செய்யச் சொன்னால் பாவிப்பசங்க ஊருக்கே தீவச்சுட்டாங்களே. அந்த இன்ஸ்பெக்டர் இதைக் கண்டுபிடிக்க விட்டால் தீ வைத்த குற்றத்திற்கு பொறுப்பு அவனையும் சாருமே! சில காலம் அதற்காக அவனும் சிறையிலிருக்கும்படி நேர்ந்து விட்டால்... உரும்! இதற்கு முன்னாலேயே ஒரு வழி செய்து விடவேண்டும்.

முகத்திலே வழிந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினான் நமச்சிவாயம்.

கொஞ்ச தூரத்தில் நல்ல போதையில் சிரித்து கும்மாளமடித்துக் கொண்டு அவன் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த மூவரைக் கண்டதும் அவனது ஆத்திரம் உச்ச நிலையை எட்டியது.

''இத்தனைக் காலம் இவர்களை வைத்துக்கொண்டு ஊரைக் கலக்கிக் கொண்டிருந்ததிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்கள் சண்டாளன்கள். இவர்களுக்கு வெளியில் இருந்தால் என்ன - சிறைக்குள் இருந்தால் என்ன? ஆனால் பெரிய தனக்காரரின் செல்வமகனின் சங்கதியே வேறாச்சே? இந்தக் காரியத்தில் தனக்கு பங்கு ஏதும் இல்லாததுபோல நடந்துகொள்ள வேண்டியது முக்கியம்...

டேய்! வீரத்தேவா! இங்கே வா. என்று பீரங்கிக்குரலில் கத்தினான்.

வீரத்தேவனும் மற்ற இருவரும் திரும்பினார்கள். மது போதையில் தள்ளாடிய போதிலும் காரியத்திலே கண்ணா யிருந்தனர்.

தங்களது வேலையைக் கச்சிதமாக முடித்துவிட்டதற்கு உடனடியாக அந்த ராத்திரி வேளையே காசை வாங்கிக் கொண்டு தலைமறைவாக அடுத்த கிராமத்தில் சில நாட்கள் தங்கியிருப்பது என்பது அவர்களது திட்டம். அதற்காகத்தான் அவர்கள் நமச்சிவாயத்தின் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். டேய்! ஐயாவே வந்துட்டார். இங்கேயே தந்துடுவார்... என்று உற்சாகத்துடன் சிரித்தபடி வீரத்தேவன் தன் முண்டாசை அவிழ்த்து இடையில் கட்டிக்கொண்டு நெருங்கினான்.



''ஐயா என்னடா தருவார். நல்ல உதை தருவார். பாவிகளே என் கடைக்கு நெருப்பை வச்சுட்டு... எங்கேடா போயிட்டு இருக்கீங்க...'' அதட்டினான் நமச்சிவாயம்.

தெருமுனையில் அப்போது யாரும் இருக்கவில்லை. ஊர் மக்களின் பெரும்பகுதி கடைத்தெருவில் ஏற்பட்ட தீ விபத்தை வேடிக்கை பார்க்கவும், அணைக்கவும் விரைந்து விட்டிருந்தனர்.

நமச்சிவாயம் திடீரென்று திருப்பிக் கொண்டதைக் கேட்டு வீரத்தேவன் அதிர்ந்து போனான்.

''என்னங்க எஜமான்! இப்படித் திருப்பிப் பேசினா, நாங்களா இந்த காரியம் செய்ய ஆசைப்பட்டோம்...'' அதட்டலாகக் கேட்டான்.

பெரிய தனக்காரர் மகன் - ஊரிலே மிகவும் செல்வாக் குடையவன் - அவன் எறிந்த காசுக்கு எச்சில் இலை நாயாகப் பாடுபட்டவர்கள் அவர்கள் என்ற ஆணவத்தில்... நமச்சிவாயம் கடுமையான குரலில் பேசினான்.

''உன்கிட்டேதான் கேட்கிறேன். மடப்பயலே! என் கடைக்கு நெருப்பு வச்சுட்டு என்னையே கேள்வி கேட்கிறியா?...''

நீங்க சொன்னதைச் செஞ்சோம். குடுக்க வேண்டியதைக் கொடுத்தா போயிடறோம்... வம்பு வழக்கு என்னத்துக்கு... பாண்டியன் மிகவும் காரமாகக் கேட்டான்.

'நானாடா நெருப்பு வைக்கச் சொன்னேன். நாளைக்கு அந்த இன்ஸ்பெக்டர் உங்களைப் பிடிச்சான்னா நான் வந்து

சாட்சி சொல்ல மாட்டேன். தெரிஞ்சுக்கோங்கோ. என் கடைகளைக் கரியாக்கிவிட்டு காசு வேற கேட்கிறீங்களா... உங்களை மரத்திலே கட்டி வைச்சு செம்மையா உதைக் காட்டி... அவன் முடிக்குமுன், பளீர் என்று வீரத்தேவன் அவன் கன்னத்தில் அறைந்துவிட்டான்.

தன் அடியாட்களே இப்படி திருப்பிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்காத நமச்சிவாயம் அதிர்ந்து போனான். வேதனை தாளமுடியாது ஐயோ என்று அலறினான்.

ரெண்டு காசு வச்சிருக்கிற திமிறு என்னவெல்லாம் பேசறே - நாங்க தூக்குக் கயித்திலே தொங்கினா - உன்னையும் கூடவே இட்டுகிட்டு போயிடுவோம் மறக்காதே.

அதுவரை என்னத்துக்கு விட்டு வைக்கிறது இப்பவே ஆளுக்கு சமாதி கட்டு. சங்கிலி கருப்பன் கத்த - மறுபடி ஒரு அறை. பற்கள் அனைத்தும் கீழே கொட்டிவிடும் அளவில் மறுகன்னத்தில் விழ... வாயில் ரத்தம் கசிய... உதவி - உதவி... என்று கூக்குரலிட்டான். ஒருத்தரும் வரமாட்டாங்க. உன் சவத்தை நாளை காலையிலே வேலங்காட்டிலே கண்டு பிடிப்பாங்க - படுவா... ராஸ்கல்... பெரிய மனுசன்னா என்ன வேணாலும் செய்யலாம்னு எண்ணமா... ஓங்கி பிடரியில் பாண்டியன் குத்த, கீழே விழுந்தான் நமச்சிவாயம்.

ஐயோ கொல்றாங்களே! என்று அவன் அலறியதைக் கேட்டு அவர்கள் மூவரும் ராட்ஸச சிரிப்பில் குலுங்கினார்கள்.

''என்னை விட்டுடுங்கடா!'' என்று நமச்சிவாயம் கும்பிடு போட்ட கரங்களை எட்டி உதைத்தான் வீரத்தேவன்.

''இனி உன்னை விடமாட்டோம், உன் காசும் வேணாம் - உன் அதிகாரமும் வேணாம்'' என்று அவனைத் தூக்கி மண்டையை தெருப்பாதைக் கல்மீது மோத முயன்றபோது... தன் பிடரியில் ஓங்கி ஒரு குத்து விழுவதைக் கண்டு திடுக்கிட்டுப்போனான்.



அவரை விடு - இல்லாட்டா உங்க மூவரையும் பலிபோட்டுடுவேன். நான்தான் கொலைக்காரனாச்சே... என்று உறுமிய சுந்தரத்தைக் கண்டதில் அவர்கள் அரண்டு போனார்கள்.

இத்தனை நாழி பேசியதை அவன் கேட்டுக் கொண்டிருந்திருப்பான். ஏற்கெனவே அவன் விஷயத்தில் அனுதாபமுடைய அந்த இன்ஸ்பெக்டர் அவனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு... மேலே சிந்திக்க முடியாது ஆளுக்கு ஒரு மூலையாக ஓடினார்கள்.

நன்றி சுந்தரம் - சமயத்துக்கு வந்து காப்பாத்தினே? என்று கும்பிட்ட நமச்சிவாயத்தைத் தூக்கி நிறுத்தி தன் மேல்துண்டால் அவன் வாயில் ஒழுகிய ரத்தத்தைத் துடைத்தான் சுந்தரம்.

கொஞ்சம் தூரம் சென்றதும்... அந்த மூவரும் ஒன்று கூடினா். அவமானத்திலும், ஆத்திரத்திலும் கொதித்துக் கொண்டிருந்த அவர்கள் மூவர் மனதிலும் ஒருங்கே அந்த கொடிய எண்ணம் உருவாகியது.

தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த பொன்மணி கதவு இடிபடுவதைக் கண்டு பயந்துகொண்டு திறந்தாள்.

எங்கே உன் நாத்தி! அவளை உன் புருஷன் இட்டுக்கிட்டு வரச்சொன்னார். வீரத்தேவன் உறுமியதை அவளால் தம்ப முடியவில்லை.

எங்கே இருக்காள்னு சொல்றியா - மென்னை முறிக்கவா... பாண்டியன் கர்ஜித்ததும் நடுங்கிப்போன பொன்மணி அந்தக் கடைசி அறைக் கதவைத் திறந்து விட்டாள்.

திரௌபதி அஞ்சு பேருக்குப் பெண்ஜாதியானாளாம். நீ எங் மூணு பேருக்கும் பெண்ஜாதியாகப்போறே என்று

அறைக்குள்ளே அழுதுகொண்டு நின்ற கௌரியை, பாண்டியன் கூந்தலைப் பிடித்து இழுத்து... அவள் கதறித் துடிக்க... அப்படியே தூக்கிக்கொண்டு வெளியேறினான்.

ஜன்னல் வழியே வீசிய காற்றில் மிதந்துவந்த புகையின் நெடி நாகப்பனையும் உலுக்கி எழுப்பிவிட்டது. கயிற்றுக் கட்டிலின்று இறங்கி வாசல் கதவைத் திறந்து ஓடி வேலி ஓரத்திலிருந்து எட்டிப் பார்த்தான். கடைத் தெருவிலிருந்து வந்த வெளிச்சம் அவனுக்கு நிலைமையை விளக்கவே திடீரென்று ஒரு திகில் வயிற்றைப் பிசைந்தது. "சுந்தரம் ஒரு சைக்கிள் கடை வச்சு நடத்தறானே... அதுக்கு..." அதற்குமேல் சிந்திக்க முடியாது பரபரப்படைந்து போனான்.

"யோகவதி! கதவைத் தான் போட்டுக்கிட்டு பத்திரமா இரு. கடைத் தெருவிலே கடை ஏதோ நெருப்பு பிடிச்சுக்கிட்டு எரியறாப்போல தோணுது" என்றான்.

பாயினின்று எழுந்து உட்கார்ந்த யோகவதிக்கு ஒரே கவலை. "இந்தாங்க வாய் உபசாரமா ஏதாச்சம் செஞ்சா போதும். நெருப்புகிட்டே போக வேணாம். வம்பு வழக்கு வேணாம்..." எச்சரித்தாள். அதற்குப்பின் அவளுக்கு உறக்கம் வரவில்லை. பொழுது விடிய அதிகநேரம் இருந்தபோதிலும் அவள் மாற்று புடவை ரவிக்கையுடன் பின் பக்கத்து கிணற்றடிக்குச் சென்று வேகமாக வாளியில் நீரை இறைத்து பல் துலக்கி குளித்து முடித்தாள். துவைத்த புடவை ரவிக்கையைக் கொடியில் போட்டுவிட்டு... மாற்று புடவை தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு உள்ளே வந்தாள். நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டும், இடுப்பில் கூடையுமாகத் தோட்டத்துக்குள் புகுந்தாள். காதில் துல்லியமாய் கடைத்தெருவிலிருந்து வந்த கடமுட சத்தத்தை மீறி ஒரு பெண்ணின் அலறல் கேட்டதும், பதை பதைத்துப்போய் விடியற்காலை அரைகுறை வெளிச்சத்தில் அவள் தடுமாறிக்கொண்டு தன் வெட்டருவாளைத் தேடி



எடுத்து கையில் பிடித்துக்கொண்டு வேலித்தட்டியைத் திறந்து வெளியே வந்தாள். சாலையின் எதிர்ப்புறத்தில் ஓங்கி வளர்ந்திருந்த வேப்ப மரத்தடியில் லேசான விடியற்காலை வெளிச்சத்தில் அவள் கண்ட காட்சி அவளை அதிர்ச்சி யடையச் செய்தது. மூன்று ஆண்களுடன் ஒரு பெண் தன்மானத்துக்குப் போராடிக்கொண்டிருப்பதைக் காண அவள் ரத்தம் கொதித்தது. புடவைத் தலைப்பை இருகக்கட்டிக் கொண்டு ஆவேசத்துடன் கையில் வெட்டருவாளுடன் அவள் சாலையின் குறுக்கே ஓடி வந்தாள். "டேய்! பயங்காளிப் பசங்களா, ஒரு பொண்ணுகிட்டே மூணு ஆம்பிள்ளைகள் ரவுடித்தனமா செய்கிறீங்க... விடுங்கடா அந்தப் பொண்ணை." ஓங்கி உரத்துக் கூச்சலிட்டாள்.

வீரபாண்டியன், கௌரியின் புடவைத் தலைப்பை தன் பிடியிலிருந்து நழுவவிட்டுத் திரும்பி பார்த்தான்.

"யார் இவ இந்த வேளையில்?" என்று வியப்புடன் நின்றவன், அருகே வெட்டருவாளுடன் யோகவதி அணுகினான்.

வெட்கம்கெட்ட பயமகன்களா இந்தப் பொண்ணை விடுங்கடா இல்லாட்டி ஒரே வெட்டு... கைபோயிடும்.... உறுமினாள்.

"மூணு பேரை எதுத்துக்கிட்டு ஒரு பொம்பளை வந்துட்டா பயந்திடுவோமா... யார் நீ!" அதட்டியபடி அருகில் வந்த பாண்டியன் யோகவதியின் வெட்டருவாளின் சக்தியை ஒருதுளி ரசித்தான்.

'ஐயோ அம்மா! என்று முழங்கைமீது வழிந்த ரத்தத்தைக்கண்டு அலறிக்கொண்டு அவன் ஓட மற்ற இரு வரும் ஆளுக்கொரு திக்காகதுணிவை இழந்து ஓடியபடி, ஏய்! வந்து கவனிச்சுக்கிறோம் என்று போலியான தைரியத்திலே கத்தினர்.

விம்மியழுத கௌரியைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு தன் வீட்டுக்குக் கூட்டிச்சென்று ஆறுதல் சொன்னாள் யோகவதி.

''பயப்படாதே அம்மா - அவங்க இங்கே இனி வரமாட்டாங்க. ஏன்னா உயிருக்கு பயப்படாத பொம்பிள்ளை நான். அவங்க உயிருக்குப் பயந்த கோழையான ஆம்பிள்ளைகள்...'' சிரித்தபடி செம்பில் நீர் முகந்து கொடுத்து கௌரி முகம் கழுவி சீர் செய்துகொள்ள உதவினாள்.

அலங்கோலமாகிவிட்ட தன் ஆடையைச் சரிசெய்து கொண்டு அழுது சிவந்த முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்ட கௌரி, அவளைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அம்மா! நீங்க மட்டும் தெய்வமாக வந்து உதவி செய்திருக்கா விட்டால்... நான்... இந்நேரம்... பேச முடியாது திணறினாள். மனமுருகிப் போன யோகவதி விடிந்துகொண்டு வந்த வெளிச்சத்தில் அந்தப் பெண்ணை உற்றுப்பார்த்து திகைப்புடன் தன் கரங்களைத் தூக்கி வணங்கினாள்.

''அம்மா! நீங்க பெரியதனக்காரர் மகள் கௌரியில்லே! உங்ககிட்டயா அந்த அநியாயக்காரங்க இப்படி இழிவா நடந்துகிட்டாளுங்க. நீங்க போட்ட பிச்சையிலே, நானும் என் கணவரும் வயிறார சாப்பிட்டுகிட்டு வரோமே, எல்லாம் எனக்கு பஞ்சாயத்து அய்யா சொல்லி இருக்கார். கடனிலே எங்க நிலம் முழுக இருந்தப்போ பேர் விவரம் தெரிவிக்காம நீங்க உங்க வங்கி சீட்டுகளை அடமானம் வச்சு பணம் எடுத்து அவர் மூலம் கடனை அடைச்சு நிலத்தை விடுவிச்சீங்களாம். அதுக்கு நாங்க ரொம்ப நன்றி பாராட்ட வேணும்மா...

என் மானத்தைக் காப்பாத்தினீங்களே - அதுக்கு நானும் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன். அம்மா... நன்றி உணர்வில் நெகிழ்ந்து போனாள் கௌரி. எங்க வீட்டுக்குள்ளே வந்திருக்கீங்க - என் கையால் ஒரு வாய் காப்பி சாப்பிட்டுட்டு



பிறகு உங்க வீட்டுக்குப் போகலாம் என்றபடி அடுப்பை மூட்டத் தொடங்கினாள் யோகவதி.

கடைத்தெருவில் பரவிக் கொண்டிருந்த நெருப்பை அணைக்க பலர் முயன்று கொண்டிருந்தபோது சிலர் ஓடிச்சென்று அந்த விபத்தைப்பற்றி போலீசில் புகார்செய்து விட்டிருந்தனர். ராமதுரை தன் உதவி அலுவலர்களுடன் அங்கே உடனடியாக விரைந்து விட்டான். பொழுது விடியும் தருவாயில் நெருப்பு அணைக்கப்பட்டபோதுதான் பலருக்கு தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தின் விவரம் தெரியவந்தது. கோபமடைந்த கடைக்காரர்கள் எல்லோரும் இப்போது துணிவடைந்து விட்டனர். டீக்கடை கோவிந்தன் வாசலில் படுத்துக் கிடந்த கந்தசாமி, அந்த மூவரும் தீவட்டியுடன் மெல்ல சுந்தரம் கடையை நோக்கிப் போனதைப் பார்த்த விவரத்தைக் கூறி தான் நீதி மன்றத்திற்கு சாட்சியாக வரத் துணிந்திருப்பதாகக் கூறினான் - அந்த மூவரும் கடைத் தெருவில் செய்து கொண்டிருந்த அநியாயங்களை விவரித்து கடைக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சாட்சிகளாக மாறவே... இன்ஸ்பெக்டர் அந்த மூவரையும் உடனடியாக சந்தேகத்தின் பேரில் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தார்.

கடைத்தெருவின் பெரும் பகுதி தீயில் நாசமானது ஊருக்கே பெரிய நஷ்டம் என்ற போதிலும் அந்த விபத்தின் காரணமாக ஊர்மக்களுக்குள் ஒற்றுமை உணர்வு அதிகமாகியது. எல்லோரும் கூடி தீயை அணைக்க முயன்றதுபோல, பஞ்சாயத்து பரமசிவத்தின் சொற்படி எல்லோரும் சேர்ந்து கூட்டு முயற்சியால் சேதமான பொருள்களை அப்புறப்படுத்தி ஒரு சில நாட்களில் கடைகளைப் புதுப்பித்து விட்டனர்.

அடுத்த நாள் காலை கடைகளைத் துவங்க ஏற்பாடு. முதல் நாள் காலை ஊர் மக்களுக்காக பஞ்சாயத்து பரமசிவம் தலைமையில் ஊர் சிவன் கோவிலில் அபிஷேக ஆராதனை நடத்தேறியது. பின்னர் அன்று மாலை ஊரின் எல்லையில்

உள்ள பெரிய ஆலமரத்தடியிலே பஞ்சாயத்துக் கூடியது. பரமசிவம் தலைமை வகிக்க - உறுப்பினர் அனைவரும் மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட மேடைமீது அமர்ந்து கொண்டனர். ஊர்மக்கள் ஆண்கள் ஒரு புறமும் - பெண்கள் ஒரு புறமுமாக அணி செய்தபடி தரையில் எதிரே உட்கார்ந்து கொண்டனர்.

''இந்தத் தீ விபத்திற்குக் காரணம் வீரத்தேவன் கோஷ்டி என்று அவங்களை போலீஸ் கைது செய்துவிட்ட போதிலும் - இதைத் தாண்டிவிட்டவர் நம்ம பெரிய தனக்காரர் மகன் நமச்சிவாயம்னு ஜனங்கள் மனசிலே ஒரு கலவரம் இருக்கு. அதுக்கு அவர் என்ன பதில் சொல்லப் போறாராம்...'' என்று வயதான பெரியவர் ஒருவர் விவாதத்தை ஆரம்பிக்க... நமச்சிவாயம் பதறிப் போனான். பரமசிவம் மருமகன் என்ற உறவை மீறித் தம்மை உறுத்துப் பார்ப்பதைக் கண்டு அஞ்சினான். எழுந்து மிகவும் அடக்கமாக உத்திரீயத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு மக்களை வணங்கி விட்டுப் பேசினான். என்னை அடிச்சிக் கொல்லவும் - என் சகோதரியைக் கடத்திச் செல்லத் திட்டமிட்டு தீங்கு செய்த அந்தக் கயவன்களோட நான் சிநேகிதமா இருந்தது தப்பு, ஒப்புக்கிறேன். ஆனால் எங்க குலதெய்வம் முருகன்மேல் ஆணை. நான் அவங்களை இந்த துஷ்டகாரியம் செய்ய ஏவலை... கெஞ்சும் குரலில் கூறிவிட்டு மக்களைப் பரிதாபமாகப் பார்த்தான். ஆத்திரத்துடன் ஊர் ஜனங்கள் தங்கள் கையிலிருந்த தடிக்கம்பால் அவனை அடித்து நொறுக்கிவிட்டால்... அவனது தொண்டை இலியால் வறண்டு போனது - கால்கள் பயத்தில் தள்ளாடின.

ஊரில் பெரிய மனிதன் என்று வாழ்ந்துகிட்டு இருக்கிற நீ உண்மையில் பெரிய மனிதனா, மக்களுக்கு வழி காட்டியா இருக்கணும். அதைவிட்டு அல்பசகவாசம் பண்ணி கிட்டிருந்தே. அந்த ஒரு தவறுக்கு இப்போ நான் ஒரு



தண்டனை தரப்போறேன். இங்குள்ள எல்லாரும் சம்மதம்னா அதை நிறைவேற்றுவோம் என்றுகூறிவிட்டு பரமசிவம் எல்லோரையும் பார்த்தார். மக்கள் மௌனமாக இருக்கவே அவர் தொடர்ந்தார்.

''கடைகளைப் புதுப்பிக்க ஏற்பட்ட செலவில் முக்கால் பங்கு நமச்சிவாயமும் கால்பங்கு நானும் ஏற்றுக் கொள்கிறோம். சுந்தரத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் முழுவதையும் நமச்சிவாயம் சரிக்கட்டி விடுவதோடு, தன் தங்கச்சியை அவனுக்குக் கட்டிக்கொடுத்து அவனை நல்லா வாழ வைக்கணும். அவங்க ரெண்டுபேரும் அந்நாளிலிருந்து ஒருத்தரை ஒருத்தர் விரும்பினவங்க'' என்று கூறிவிட்டு பெண்கள்பக்கம் திரும்பி கௌரியைப் பார்த்து முறுவலித்தார். அம்மா கௌரி உனக்கு சம்மதந்தானே ஊர் பெரியவங்க முன்னால் ஒளிவு மறைவு இல்லாம சொல்லம்மா என்றார்.

கௌரி எழுந்து எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு... சிவந்த முகத்துடன் சுந்தரத்தைப் பார்த்தாள். எனக்கு பூரண சம்மதம் என்றாள் மெல்லிய குரலில்.

திகைத்துப்போன சுந்தரம் விடுக்கென்று எழுந்தான். அய்யாவுக்கும் ஊர் பெரியவங்களுக்கும் வணக்கம் எனக்கும் சம்மதந்தான். ஆனால் நான் இப்போ இருக்கிற நிலையில் கல்யாணம் செய்துக்க தகுதியே இல்லையே... அதனால்... என்று தடுமாறினான். கையில் பிடித்திருந்த கொடுக்கருவாளை தன் முந்தானை இருக்கத்திலே சொருகிக்கொண்டு முன்னால் வந்து எல்லோரையும் கும்பிட்டாள் யோகவதி.

பஞ்சாயத்து அய்யா - ஊர் பெரியவங்களே கேட்டுக் கோங்க. அதுக்கு நான் வழிசொல்றேன். என் வீட்டுக்காரருக்கு சொந்தமான பூமி அவர் மகனுக்குச் சொந்தமானது. நான் குறுக்கே நிக்கிறதாக மகன் நினைச்சா நான் இப்பவே புறப்பட்டுப் போயிடறேன். அப்பனுக்கு சொந்தமான

மண்ணை மகனுக்கு நான் மனப்பூர்வமா தந்துடறேன். இது சத்தியம். கண்கலங்கி நா தழுதழுத்தாள்.

சுந்தரம் உன் சின்னம்மா உனக்கு மண்ணைத் தந்துட ஒப்புக்கொண்டுட்டாங்க. நமச்சிவாயம் உனக்கு கௌரி என்கிற பெண்ணைத் தர இசைஞ்சுட்டார். உன் பதில்? என்று பஞ்சாயத்துத்தலைவர் கேட்டபோது... ஊர் மக்கள் ஒப்புக்கோ சுந்தரம் என்று ஒரே குரலாக ஆர்ப்பரித்து கைதட்டவே அவன் தலையை அசைத்துவிட்டு கண்களில் வழிந்த கண்ணீரை மென்று விழுங்கிக்கொண்டான். வாத்தியார் அருணாசலம் அவனைத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டார். பஞ்சாயத்து முடிந்து கூட்டம் கலைந்தது. யோகவதி வேறு திக்கில் போவதைக்கண்டு... எங்கே போகிறீங்க என்று ஓடிவந்தாள் கௌரி. எங்கேயிருந்தோ வந்தேன் - எங்கேயோ போறேன், ''சுந்தரமும் அவனது அப்பாவும் ஒன்று சேர்ந்தால் அதுவே எனக்குப் போதும்'' என்று கூறிவிட்டு அவள் மேலே நடந்தாள்.

திடீரென்று ஆவேசம் வந்தவன்போல, சுந்தரம் 'அம்மா!' என்று கத்திக்கொண்டு அவள் காலடியில் விழுந்து கும்பிட்டான். மண்ணும் பெண்ணும் மட்டும் போதாது... உங்களைப்போல ஒரு அம்மாவும் என் வாழ்வை நிறைக்க வேணும். போகாதீங்க வாங்க என்று விம்மியவனை, யோகவதி அன்போடு தூக்கி நிறுத்தினாள். நாகப்பன் மனைவி அருகே வந்து சுந்தரத்தைத் தழுவிக் கொண்டு விம்மியபோது... எல்லோர் கண்களிலும் நீர் பெருகி வழிந்தது. அது பிரிந்த குடும்பம் ஒன்றாகி விட்டதன் காரணமாக ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்!

நிறைந்தது